183

வெளியீடு எண் 24.

இந்துமத பாலபாடம்

183/3-ഗ

C

Q2
N49
110937

தருமபுர ஆதீனம்

183
3ழி

வெளியீடு எண் 24.

உ
குருபாதம்

இந்துமத பாலபாடம்

இந்நூல்
திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
இருபத்தைந்தாவது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகளவர்கள்
திருவுள்ளப்பாங்கின்படி
வெளியிடப்பெற்றது.

இரண்டாம் பதிப்பு

ஆசிரியர்:
நாகர்கோயில், பண்டிதபூஷணம்,
திரு. கே. ஆறுமுகநாவலர் அவர்கள்.

1949

உ

குருபாதம்

பொருளடக்கம்

		பக்கம்
1.	கடவுள்	1
2.	இந்துமதம்	6
3.	கடவுள் திருவுருவம்	13
4.	சக்தி	17
5.	கடவுளையடையும் வழிகள்	21
6.	ஆலயம்	25
7.	திருவுருவம்	29
8.	சிவலிங்கம்	35
9.	விநாயகர்	42
10.	நடராஜர்	45
11.	மகேசன்	49
12.	திருமால்	52
13.	முருகன்	56
14.	ஆன்மாக்கள்	67
15.	நித்தியகருமங்கள்	70
16.	சமயச்சின்னங்கள்	78
17.	ஒழுக்கமுடைமை	83
18.	ஆலயபூஜை விளக்கம்	85
19.	திருவிழாத் தத்துவங்கள்	92
20.	ஆலயவழிபாடு செய்யும் முறை	100
21.	தோத்திரமாலை	108

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 110937
EGMORE, MADRAS-600 008

உ
குருபாதம்

பதிப்புரை

சமய உண்மையினை மக்கள் அறிந்து ஒழுகி உய்திபெற வேண்டும் என்ற பெருநோக்குடனே தருமையாதீனம் ஆற்றிவரும்பணிகள் பலதிறத்தன. அவைகளுள் நூல்வெளியீடும் ஓர்பகுதியாகும். அவ் வரிசையில் இந்துமத பாலபாடம் என்னும் இந் நூலும் ஒன்று. இந்நூல் திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவானும், "தொண்டன்" ஆசிரியருமான பண்டிதபூஷணம், திரு. கே. ஆறுமுகநாவலர் அவர்களால் எழுதப்பட்டது.

கடவுள் உண்டா? அவரை எப்படி நம்புவது? அவர் எவ்வெவ்வாறு அருள்செய்வார்? அவருக்குத் திருக்கல்யாணம் ஏன்? மனைவி எதற்கு? கோயில் எதற்கு? விநாயகருக்கு யானைமுகம்வந்த காரணம் என்ன? அவருக்குவயிறுபெரிதாக இருப்பானேன்? சமயச்சின்னங்களை நாம் ஏன் அணியவேண்டும்? என்பன முதலாகிய பல ஐயங்களுக்கு விடை கூறி சமய ஞான அறிவை மக்களிடத்தில் வளரச் செய்கின்றது இந்நூல் என்னலாம்.

மேலும் நடராஜர், முருகர், விநாயகர், திரு மால் ஆகிய மூர்த்திகளின் தத்துவப்பொருள்களும் விளக்கப்பட்டுள்ளன. ஆலயவழிபாட்டின்முறையும்

நித்தியகருமவிதிகளும், சில ஒழுக்கமுறைகளுங்கூட விளக்கமாகத் தரப்பட்டுள்ளன. இறுதியில் ஒவ்வொருசந்நிதியிலும் சொல்லவேண்டிய திருப்பாடல்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இத்தகைய சிறந்த இந்நூல், 1937-ல் 24-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆணையின்படி, தருமையாதீனவித்வான், காழி. சிவ. கண்ணுசாமிப் பிள்ளை B.A , அவர்களால் பார்வையிடப்பட்டு முதற் பதிப்பாக வெளிவந்தது.

காலநிலை கருதி அதற்குத்தேவையான பணி இது என அறிந்து, சமயப்பிரசார வாகனம் ஒன்றமைத்து, கிராமங்கள்தோறும் அனுப்பி, ஆங்காங்கும் அறிஞர்களைக்கொண்டு சமயச்சொற்பொழிவுகள் நிகழ்த்துவித்துச் சமயவளர்ச்சிக்கு ஆவன செய்துவரும் இருபத்தைந்தாவது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள் திருவுள்ளப்பாங்கின்படி இப்பொழுது இந்நூல் இரண்டாம் பதிப்பாக வெளிவருகின்றது.

அன்பர்கள் பெற்றுப் படித்து உண்மையை உணர்ந்து ஒழுகி உய்வார்களாக.



மூர்த்தி அம்பலக் கூத்தனது உருவே

—குமரகுருபரர்.

சமயப்பிரசார வாகன வெள்ளோட்ட ஆரம்ப விழா



உ

குருபாதம்

இந்துமத பாலபாடம்

1. கடவுள்

1. கடவுள் என்ற பதத்தின் பொருள் யாது ?

கடவுள் என்ற பதம் கட என்னும் பகுதியும் உள் என்னும் தொழிற்பெயர் விகுதியும் பெற்றது. செய்யுள் என்பது செய்தல் என்று பொருள்படுவது போல, கடவுள் என்பதும் கடத்தல் என்று பொருள் படும். ஆகவே கடவுள் என்பவர் எல்லாவற்றையும் கடந்துநிற்பவர் என்பதாயிற்று.

2. கடவுள் ஒருவர் உண்டா? அவர் உண்டென்று நம்புவது எப்படி ?

ஒரு் பொருள் உண்டென்று நம்புவதற்குப் பிரத்தியட்சப்பிரமாணம், அநுமானப்பிரமாணம், ஆகமப்பிரமாணம் என மூன்று அளவைகள் உள்

ளன. பிரத்தியட்சப்பிரமாணம் நேரில் காண்பது; அனுமானப்பிரமாணம் தெரியாத ஒன்றை வேறு ஒன்றன்மூலமாக அறிவது; ஆகமப்பிரமாணம் நூல்களால் அறிவது. நூலறிவு, சுயானுபவ அறிவாகாது; ஆதலால் அதனை வேறு அறிவுகளினுலும் விளங்கவைக்கவேண்டும். நேரிற் காணுமறிவு சிறந்ததேயெனினும் அது கடவுள் சம்பந்தமாக எளிதில் பயன்படாது; ஆதலால், அனுமானப்பிரமாணமே நமது ஐயத்தை நீக்கத்தக்க அளவையாகின்றது. மலைமீது தீ எரிந்துகொண்டிருக்கின்றது. நேரில் அதனைக் காண மிகவருந்தி உழைத்தால்மாத்திரம் இயலும். வருந்தி உழைக்க இயலாதவர்க்கு நேரிற் காணவியலாது. தீயிலிருந்து கிளம்பும் புகையைக் கண்ட எவனும் மலையில் தீ உண்டென்று உறுதியாக நம்புவான். அதுபோலக் கடவுளையும் நேரிற் காணுவது எளிதன்று; மிகவருந்தி உழைத்தால் இயலும். உழைக்க இயலாதவன் படைப்புப் பொருள்கள் அனைத்தையும் கண்டும், அவற்றுள் அடங்கிக் கிடக்கும் அற்புதங்களைக்கொண்டும் அவற்றை உண்டாக்க ஒரு தலைவன் உளனென உணரல்வேண்டும்.

3. அவற்றை உண்டாக்க ஒரு தலைவன்தான் வேண்டுமோ? இயற்கையாய் நடக்கின்றதென்று ஏன் கூறுதல் கூடாது?

இயற்கை, காரண காரியங்களோடியைந்தது. கடவுள் காரண காரியங்களுக்கு மேற்பட்டவர். மரத்தினின்று வித்தும் வித்தினின்று மரமும் உண்

டாவது இயற்கை. இவற்றுள் முதலில் உண்டானது வித்தா? மரமா?. வித்தினையோ, மரத்தையோ ஆதியில் உண்டுபண்ண ஆதிமூலப் பொருளொன்று இருந்துதானே தீரவேண்டும்? படைப்புப் பொருள்கள் அனைத்தும் தோன்றுவதற்குக் காரணமாக நின்று அவை இயற்கையாய் நடப்பனபோல் காட்டுவதே ஆண்டவனது அருட்செயலாகும்.

4. **கண்ணால் காணமுடியாத கடவுளை உண்டென்று நம்புவதெப்படி ?**

பாலினுள் நெய்யிருப்பது, பாலைப் பார்த்த போது காணமுடிகிறதா? இல்லையே! அதனால் பாலில் நெய்யில்லை என்று கூறுவோர் யாரேனுமுண்டோ? ஒருவருமில்லை. நமது கண்ணுக்குக் காணமுடியாததும், பாலில் எங்கும் வியாபித்திருப்பதுமாகிய நெய்யைக் காண, பாலைக் காய்ச்சித் தயிராக்கி, தயிரில் மத்தினை ஊன்றி முறுகக்கடைதல்வேண்டும்; கடைந்தால் அதிலிருந்து வெண்ணெயும் நெய்யும் பெறலாம். அதுபோல, கடவுள் இவ்வுலகத்தில் காணமுடியாதபடி மறைந்திருக்கின்றனர். அவரைக் காண்பதற்கு, பேரன்பாகிய மத்தினை ஊன்றி, அறிவாகிய கயிற்றினால் முறுகக் கடைந்தால் முடியும். இக்கருத்தை **அப்பர் சுவாமிகள்,**

"விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் (டு) உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே."

எனும் தேவாரத்தால் நன்கு விளக்கியுள்ளார்கள். வாயுவை நமக்குக் கண்ணுல் காணமுடிகிறதா? மின்சாரத்தைக் கண்ணுல் காணமுடிகிறதா? நமது கண்ணுக்குக் காணமுடியாததால் அவையில்லையென்று நாம் சொல்லமுடியுமா? அவை செய்யும் வேலைகளைக் கொண்டு அவை உண்டென்று எப்படி நம்புகிருேமோ, அப்படியே கடவுளின் ஆக்கல் அளித்தல் அழித்தல் மறைத்தல் அருளல் ஆகிய தொழில்களைக் கண்டு அவன் உண்டென்பதை அறிந்து கொள்ளவேண்டும்.

5. கடவுள் என்று ஒருவர் வேண்டுமானுல் இருக்கட்டும்; அவரைப்பற்றி நமக்குக் கவலை ஏன்?

குளிரால் நடுங்கும் மனிதர்களுக்குக் குளிர் மாற்றுவதற்காக எரிந்துகொண்டிருக்கும் தீச்சுடர் போலவும், பாலைவனங்களைக்கடந்து செல்பவருக்குத் தங்கி இளைப்பாற உதவும் ‘ஒயஸிஸ்’ (Oasis) என்று சொல்லப்படும் நிழல் தண்ணீர் உணவுப்பொருள் முதலியவற்றையுடைய இடம் போலவும், இனிய பழங்களையும் குளிர்ச்சியினையும்கொண்டு, வந்தடைந்தார்க்குக் கொடுக்கக் காத்துநிற்கும் மரம் போலவும் கடவுள் இருக்கிருர். தீவினை, பிறவிநோய் முதலியவற்ருல் துன்புற்ற உயிர்களின் துன்பத்தை நீக்க அவர் காத்திருக்கின்ருர். வேண்டியவர்கள் அவரையடைந்து அதனை மாற்றிக்கொள்ளலாம். அவரையன்றி அதனை யகற்ற வேறெவராலும்

ஆகாது. தீக்காய்பவனுக்கு உதவும் தீயினுக்கு, ஒருவன் தன்னையடைவதால் நலமேனும் நட்டமேனும் இல்லாததுபோல, நாம் இறைவனை யடைவதால் அவருக்கு நலமேனும் நட்டமேனும் இல்லை. ஆனால் நமக்கோ தீக்காயும் மனிதனையொப்ப நலமும், தீ இருந்தும் காயாத மனிதனையொப்ப நட்டமுமுண்டு. ஆதலால், கடவுளைநம்பி அவரையடைய முயன்று, பிறவிநோயெனும் பெருநோயை அகற்றிக்கொள்ள வேண்டியது ஆறறிவுடையமனிதனின் அறிவுடைய செயலாம்.

6. உயர்பதமடைய நல்லொழுக்க வாழ்க்கை உறுதுணையாயிருக்க, கடவுட் கொள்கையின் அவசியமென்ன ?

ஒருவன் நல்லொழுக்கமுடையவனாய்இருப்பதற்குள்ள காரணமென்ன? எதைக்கருதி? இரவு நடுச் சாமவேளையில், தன் வீட்டில் வேறு துணையின்றித் தங்கியிருக்கும் ஒருவனைக் கொலைசெய்து இலட்சக் கணக்காய் அவன் கையிலிருக்கும் பொருளைத் திருடிக்கொண்டால் என்ன குற்றம்? தன் பழிச் செயலை வேறெவரும் அறியவில்லை; அவமானமும் இல்லை; தன் குடும்பத்தாரும் அதனால் மிகுந்த இன்பம் அனுபவிக்கலாம். இவ்வளவிருந்தும், தான் செய்யும் குற்றத்தை எவரும் அறியாதுபோனாலும், எல்லாவற்றையும் உணரும் இறைவன் அதனை யறிந்து தக்க தண்டனை விதிப்பான் என்பது கருதி யன்றோ அது செய்யா தொழிகின்றான்? எனவே,

கடவுள் நம்பிக்கையிருந்தால் மாத்திரமே மக்களிடம் நல்லொழுக்கம் மிகும் என்பது விளங்குகின்றது. கடவுள் நம்பிக்கையின்றேல் எத்தகைய தீய செயலும் செய்யும் திடம் மிகுந்து தீமை பல விளையும். ஆதலால், நல்லொழுக்கம் வளர்வதற்கும் கடவுள் நம்பிக்கை இன்றியமையாததாகும்.

7. கடவுளின் இயல்பு யாது?

அகரவுயிர் போல் அறிவாகி யெங்கும் நிகரில் இறைவன் நிறைந்து நிற்கின்றான். அவன் விசுத்த தேகத்தினன்; இயற்கை அறிவினன்; எல்லாமறிபவன்; அஞ்ஞானத்தைத் தருவனவாகிய மலங்கள் இயல்பாகவே இல்லாதவன்; சுதந்திரன்; அனந்த சக்தியுடையவன்; பரிபூரணன்; பேரருளுடையவன்.

---

2. இந்துமதம்

8. மதம் என்றால் என்ன?

உலகத்திலுள்ள எல்லாமனிதர்களுக்கும் இன்ப விருப்பமும் துன்ப வெறுப்புமே இயற்கையாகக் காணப்படுகின்றன. இவ்வுலக இன்பங்களெல்லாம் நிலையில்லாத சிற்றின்பமாகவேயிருககின்றன. அதனாலேயே அறிவுடையவர்கள் பேரின்பத்தை யடைய முயலுகிறார்கள். அவ்வாறு பேரின்பத்தை

அடைய அறிவுடையோர் கொண்டொழுகும் வழிகளே மதங்களாம்.

9. மதங்கள் எத்தனை ?

இக்காலத்தில் மக்கள் கைக்கொண்டொழுகும் மதங்களின் முக்கியமானவை இந்து மதம், பௌத்த மதம், கிறிஸ்து மதம், இஸ்லாம் மதம், யூத மதம் முதலியனவாம். இவற்றுள் இந்து மதம் சைவம், வைணவம், காணுபத்தியம், வைரவம், கௌமாரம் வாமம் என்னும் பிரிவுகளை யுடையது.

10. இந்துமதம் என்பதின் பொருள் என்ன ?

"இந்திய நாட்டினரின் மதமாதலால் இந்து மதம் என்று அழைக்கப்படுகிறது" என்று சிலர் கூறுகிறுர்கள். "சிந்து நதிக்கரையில் ஆரியர்கள் தங்கியிருந்ததனல் அவர்கள் இந்துக்கள் எனப் பெயர்பெற்றனர்" என்றும் வேறுசிலர் கூறுவர்.

ஒரு நாட்டின் பெயரினையோ, ஓர் ஆற்றின் பெயரினையோ கொண்டு விளங்குவது இந்துமதமெனின் தெய்விக மதமாகிய இம்மதத்திற்கு அப்பெயர் சிறிதும் ஒவ்வாது. சிலர் இந்துக்களை அஞ்ஞானிகள் என அழைக்கிறுர்கள். அஞ்ஞானிகள் என்பதற்கு ஞானமில்லாதவர்கள் அல்லது மூடர்கள் என்பது பொருள். இதுவும் பிசகு. பின் இதன் பொருள்தான் என்னவெனின் கூறுவோம்.

हिंसायां दूयते यस्सः ।
हिन्दुरित्यभि धीयते ॥

என்பது உபநிஷத்து வாக்கியம். இதன் பொருள், ஹிம்சை என்பதில் எவன் துன்பப்படுகிருனே அவன் ஹிந்து என அழைக்கப்படுகிருன் என்பதாகும்; அதாவது, பிறவுயிர் வருந்துவதைக் கண்டு துன்பப்படுகின்றவனே இந்து என்பதாம். "எவ்வுயிரும் பராபரன்றன் சந்நிதியதாகும்; இலங்கும் உயிர் உடலனைத்தும் ஈசன் கோயில்" எனக் கொண்டு எவ்வுயிரிடத்தும் அன்புசெலுத்தவேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்ட மதமே இந்து மதம் எனப்படும். அன்பு வேறு, கடவுள் வேறு என்பது அறிவிலார் சொல். அன்பே கடவுள். ஆகவே, இந்துமதம் என்பதற்கு அன்பு மதம் என்பது பொருள்.

11. இந்துமதப் பெருமைகள் யாவை?

(அ) இது மற்ற மதங்களுக் கெல்லாம் காலத்தால் மூந்தியது. "இவ்வுலகிலுள்ள மத நூல்களில் மிக மூந்தினது ஹிந்துமத ரிக்வேதமே" என்பது பண்டிதர் மாக்ஸ்முல்லர் கொள்கை.

(ஆ) வேறு மதங்கள் பலவும் அவ்வமதங்களை உண்டாக்கினவர் பெயரைக்கொண்டு விளங்க, இந்து மதத்தின் பிரிவுமதங்கள் ஒவ்வொன்றும் கடவுளின் பெயரைக்கொண்டே விளங்குகின்றன:

(உ—ம்) சைவம்—சிவத்தை யடையும் மார்க்கம்.
வைணவம்—விஷ்ணுவை யடையும் மார்க்கம்.

சிவம் என்னும் சொல்லுக்குப் 'பெருஞ்சுகம்' என்பதுபொருள் எனக் கிறிஸ்தவநூலாகிய தேம்பாவணியிலும் கூறப்படுகின்றது. இன்னும் 'மங்களம்' 'நன்மை' எனவும் பொருள்கள் உண்டு.

(இ) "முத்தியடைவதற்கு ஏற்ற மதம் எங்கள் மதமே" என யானைகண்ட குருடர்போல் தாம் கண்டதே முடிபு எனக் கூக்குரலிடாது, எப்பெயரைக்கொண்டு எங்குநின்று வழிபடினும் அவை யனைத்தையும் இறைவன் ஏற்றுக்கொள்கிறான் என்ற சமரசக் கருத்தினை வெளியிடுகிறது.

'யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்'.

—சிவஞான சித்தியார்.

(ஈ) பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையைக் கொண்டது.

(உ) ஆண் பெண் தன்மையை இறைவனிடம் காட்டிப் பெண்மையை இகழாது உயர்த்திக் கூறுவது.

(ஊ) ஆண்டான்—அடிமை அல்லது தாஸ மார்க்கம், தந்தை—மகன் அல்லது சத்புத்திர மார்க்கம், தோழன்—தோழன் அல்லது சக மார்க்கம், தலைவன்—தலைவி அல்லது சன்மார்க்கம் என்ற

முறைகளில் கடவுள் வணக்கத்தை இயல்புக்கும் தகுதிக்கும் ஏற்ப உலகுக்கு வகுத்துக் காட்டுவது.

(எ) ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மல முறையை விளக்குவது.

(ஏ) இருபத்துநாலு தத்துவங்களோடு பிற மதங்கள் நிற்ப, இது முப்பத்தாறு தத்துவங்களைக் கொண்டு விளங்குவது.

(ஐ) அருவ உருவ அருவுருவத் திருவுருவங் களாக இறைவனை வழிபடச் செய்வது.

(ஒ) எல்லா மதங்களையும் அவற்றின் முடிபு களையும் தன்னுள் அடக்கிக் காட்டி ஒருமதத்தையும் இகழாமல் அவற்றிற்குமேலும் திகழ்ந்து விளங்கு வது.

(ஓ) திருக்கோயில்வழிபாடு, நித்திய கர்மம் முதலியவற்றால் உடலையும் மனத்தினையும் தூய்மை யாக்கி மனோவாக்குக் காயத்தினையெல்லாம் கடவுள் வணக்கத்தில் ஈடுபடுத்தி மக்களை மாயையினின்றும் அகலச்செய்வது.

(ஔ) முத்திநிலையை உலகியல் இல்லொழுக்க இன்பத்தோடு இணைத்து மேற்செல்லவழிகாட்டுவது.

(க) இல்லறத்தாலும் துறவறத்தாலும் இறை வனையடையலாம் என்று கூறுவது.

(கா) மனிதர்களைக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தாது சுதந்திரத்துடன் இறைவனை வழிபடச் செய்வது.

(கி) நாஸ்திகன்முதல் திவ்ய ஞானிவரை தன்னில் இருப்பதற்கு இடம் கொடுப்பது.

(கீ) பெரியோர் பிறப்பு அல்லது திரு அவதாரங்கள் என்றென்றைக்கும் உண்டு எனக் கூறுவது.

"ஓதுசமயங்கள் பொருள் உணரு நூல்கள்
ஒன்றோடொன்று ஒவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாதுசமயம் பொருணூல் யாதுஇங்கு என்னில்
இதுவாகும் அதுஅல்லது எனும் பிணக்கது இன்றி
நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண
நின்றதுயா தொருசமயம் அதுசமயம் பொருணூல்
ஆதலினால் இவையெல்லாம் அருமறையா கமத்தே
அடங்கியிடும் அவையிரண்டும் அரனடிக்கீழ் அடங்கும்."

—சிவஞான சித்தியார்.

மேற் பாடங்களில் இவைவிளக்கப்பட்டுள்ளன. இன்னும் பெருமைகள் பல இருக்கின்றன. இப் பெருமைகளைப் பலமதப்பாதிரிகளும் நிறைந்திருந்த அமெரிக்காதேசத்துச் சிக்காகோ 'சர்வமத மகா சபை'யில் நம் விவேகானந்தர் எடுத்துக் காட்டிய போது "உலகில் உயர்ந்த மதம் இந்துமதமே" என அனைவரும உணர்ந்தனர். அது பற்றிய அபிப் பிராயங்களிற் சில அடியில் கூறப்படுகின்றன.

"நியூயார்க் தூதன்" (New York Herald) என்ற பத்திரிகை 'சர்வமத மகா சபையில் பேசியவர்களில் விவேகானந்தாரே மிகவும் சிறந்தவர் என்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. அவர் பேசியதைக் கேட்டபிறகு இந்துக்களுக்கு உபதேசிக்க இங்கிருந்து பாதிரிகளை அனுப்புவது பெரும் முட்டாள்தனம் என விளங்குகிறது' எனக் கூறியிருக்கிறது.

வேறொரு பத்திரிகை 'ஒவ்வொரு கிறிஸ்தவச் சர்ச்சிலிருந்தும் பிஷப்புகளும் உபதேசியார்களும் இங்கு வந்திருந்தார்கள். அவர்களெல்லோரும் விவேகானந்தரின் பிரசங்கமாகிய வஜ்ராயுதத்தின் முன் நிற்கமாட்டாது விழுந்து விட்டார்கள்' என்று கூறுகிறது. இன்னும் பல பத்திரிகைகளும், தலைவர்களும், அறிஞர்களும் இந்துமதத்தையும் சுவாமிகளையும் புகழ்ந்து கொண்டாடினார்கள். ஆயிரக் கணக்கான மேல்நாட்டார் இவருக்குச் சிஷ்யர்களாகி இந்துமதத்தை ஒட்டி நடந்தார்களென்றால் இம்மதத்தினுண்மைகள் சுவாமிகளைப் போன்ற தகுதியுடையவர்களால் தக்க முறையில் எடுத்துச் சொல்லப்படுமானல் இப்பூவுலக அறிஞரனைவரும் இந்துமதத்தையே மேற்கொள்ளுவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லையென்பது வெள்ளிடைமலை போல் விளங்கும்.

3. கடவுள் திருவுருவம்

12. அரூபியாகிய கடவுளை இந்துக்கள் ஏன் ரூபியாக வணங்குகிறார்கள் ?

கடவுள் அரூபியென்பதை இந்துக்களும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் கடவுள் அரூபியாக மட்டிலுந்தான் இருப்பார் என்று சொல்பவர்களிடம் "அரூபியாகிய கடவுளுக்கு ரூபத்தோடு வர முடியுமா?" எனக்கேட்டால் என்ன விடை கூறுவார்கள்? "முடியும்" என்பாரானால் உருவமாக வணங்குவதும் சரியென்றாயிற்று; "முடியாது" என்பாரானால் 'எல்லா வல்லமையும் உடைய கடவுளுக்கு உருவத்தோடு மட்டிலும் வாமுடியாது' என்பது எத்துணை அறிவீனம்? எல்லா வல்லமையுடைய இறைவன் எவ்வகை உருவத்தோடும் அருள்புரிவதற்கு ஆற்றல் உடையவனாயிருக்க, முடியாது எனக்கூற நமக்கு என்ன உரிமையுண்டு? ஆகவே சர்வசக்தன் எவ்வித உருவமாகவும் அருள்புரிவான் என்பது விளங்கிற்று.

13. கடவுள் திருவுருவங்கள் எவை?

அரூபம், ரூபாரூபம், ரூபம் என்ற மூன்றுமாம்.

14. அவர் அரூபியாயிருக்கும்போது எப்பெயர் பெறுவர்?

சிவம், சக்தி, நாதம், விந்து என நான்குவிதப் பெயர் பெறுவர்.

15. அவர் ரூபாரூபியாயிருக்கும்போது எப் பெயர் பெறுவர்?

சதாசிவம் எனப் பெயர் பெறுவர்.

16. அவர் ரூபியாயிருக்கும்போது எப்பெயர் பெறுவர்?

மகேசன், உருத்திரன், மால், அயன் என நான்குவிதப் பெயர் பெறுவர்.

இது அடியிற்கூறும் பாட்டாலும், படத்தாலும் நன்கு விளங்கும்.

> "சிவம், சக்தி, நாதம், விந்து; சதாசிவன்; திகழு மீசன்,
> உவந்தருள் உருத்திரன் தான், மால், அயன்; ஒன்றின் ஒன்றாய்ப்
> பவந்தரும் அருவம் நாலிங்கு, உருவம் நாலுபயம் ஒன்றாய்
> நவந்தரு பேதம் ஏக நாதனே நடிப்பன் என்பர்."

—சிவஞானசித்தியார்.

கடவுள்

அரூபம்
1. சிவம்
2. சக்தி
3. நாதம்
4. விந்து

ரூபாரூபம்
5. சதாசிவம்

ரூபம்
6. மகேசன்
7. ருத்திரன்
8. மால்
9. அயன்

17. இந்துக்களுக்கு மும்மூர்த்திகளாகிய மூன்று கடவுள் உண்டா?

ஒருவர் ஓரிடத்தில் தாசில்தார், மாஜிஸ்ட்ரேட், முன்ஸிப் ஆகிய மூன்று வேலைகளையும் பார்த்துவருகிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் ரெவன்யூ காரியம் பார்க்கும்போது தாசில்தார் எனவும், கிரிமினல் நடவடிக்கை நடத்தும்போது மாஜிஸ்ரேட் எனவும், ஸிவில் நடவடிக்கை நடத்தும்போது முன்ஸீப் எனவும் பெயர் பெறுகிறார். முத்தொழிலுக்கும் முப்பெயர் பெறுபவர் ஒருவரே. அதுபோல ஆக்கல் அளித்தல் அழித்தல் ஆகிய முத்தொழில்களை நடத்தும்போது ஏக நாயகனே முப்பெயர் பெறுகிறான். திருஞானசம்பந்தப் பெருமான் இதனை,

'ஒருரு வாயினை மானாங் காரத்து
ஈரியல்பாய்ஒரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திகளாயினை'

எனவும், அப்பர் பெருந்தகை,

'ஒருருவே மூவுருவம் ஆன நாளோ'

எனவும், நம்மாழ்வார்,

'ஒளிமதி வண்ணன் என்கோ; ஒருவன் என்றேத்த நின்ற
நளிர்மதிச்சடையன் என்கோ; நான்முகக்கடவுள் என்கோ'

எனவும், சேரமான் பெருமாள் நாயனார்,

'அரியாகிக் காப்பான்; அயனாய்ப் படைப்பான்;
அரனாய் அழிப்பவனும் தானே'

எனவும், பிறவும் பல பெரியோர்கள் கூறியிருக்கின்றார்கள். எனவே எல்லாம் வல்ல கடவுள் ஒருவரே என்பதும் அவரே பல தொழில்கள் செய்யும்போது பல உருவங்களை அடைகிறார் என்பதும் பெறப்படும்.

18. அரூபியாகிய இறைவன் ரூபங்கொண்டதேன்?

ரூபத்தையுடைய நமக்கு ரூபமுடைய ஒரு பொருளை இலகுவில் கண்டுகளிக்க முடியுமே தவிர ரூபமற்றதைக் காணமுடியாதாகையால் நமக்கிரங்கி அவன் திருவுருவத்தைக்கொண்டான். அரூபியாகிய கடவுளை, நாம் ரூபத்தோடு கலந்துறையும் காலம் வரை, ரூபியாகக் கண்டுகளிக்க முடியுமே தவிர அரூபியாகக் கண்டு அடையமுடியாது. நாம் அரூப நிலையை யடையுங்காலம் வந்தால் இறைவனையும் அரூபியாக வணங்கலாம். அதுவரைநமக்கு அவரை ரூபியாகவே வணங்கமுடியும்; அரூபியாக வணங்க முடியாது.

பனிக்கட்டியையும் தண்ணீரையும் ஒன்று சேர்க்க வேண்டுமானால் பனிக்கட்டி தண்ணீராக வேண்டும்; அல்லது தண்ணீர் பனிக்கட்டியாக வேண்டும். அதுபோல அரூபியாகிய தெய்வத்தை

நாம் அடையவேண்டுமானல் அது ரூபியாகவேண்டும். அல்லது நாம் அரூபியாகவேண்டும். நாம் அரூபியாவது எளிதன்று; ஆகையால் இறைவன் நமக்கிரங்கி ரூபியாகி அருள்கின்ருன். இதனை,

"அருவனுய் நின்ருனை ஆரறிவார் தானே
உருவனுய்த் தோன்றிலனேல் உற்று"

—சிவஞானபோதம்.

எனும் சாத்திரப்பகுதியால் உணரலாம்.

19. இம்மூவகை உருவங்களையும் இந்துக்கள் வழிபடுவது எங்ஙனம்?

உருவத் திருமேனியை அவ்வவுருவங்களாகவும், அருவுருவச் சதாசிவத்தைச் சிவலிங்கமாகவும், அருவத்திருமேனியைச் சிதம்பரரகசியம், சித்சபை, வெளி முதலியனவாகவும்வைத்து வழிபடுகின்றனர். இதனல் இந்துமதம் மனிதர்களைக் கட்டுப்படுத்தாது என்பதும், அவரவர் தகுதிக்கேற்பச் சுதந்திரத்துடன் வழிபட்டுய்யும் வழிகளையுடையது என்பதும் விளங்குகின்றன.

---

4. சக்தி

20. இந்துக்கள், கடவுளுக்கு மனைவி உண்டென வைத்து வழிபடுவதன் நோக்கமென்ன?

கடவுளின் அருளாகிய சக்தியினையே மனைவியென வைத்து வழிபடுகின்றோம். அந்தச் சக்தி

இல்லையானால் கடவுளுமில்லை. சூரியன் தன் ஒளியைக்கொண்டு இருளை ஓட்டி வெளிச்சத்தைக் கொடுப்பதுபோல இறைவனும் உயிர்களின் மயக்கத்தை, சக்தியைக்கொண்டு ஒழித்து உயிர்களுக்கு மெய்யறிவினைத் தருகின்றான்.

விளக்குச் சுடரில் தீயுமிருக்கிறது; சூடுமிருக்கிறது. தீயிலிருந்து சூட்டினையோ சூட்டிலிருந்து தீயினையோ பிரிக்கமுடியாதபடி அவைஒன்றுசேர்ந்திருக்கின்றன. அதுபோல ஆண்டவனிடமிருந்து சக்தியையோ சக்தியினிடமிருந்து ஆண்டவனையோ பிரிக்கமுடியாது.

"அருளது சத்தியாகும் அரன் தனக்கு அருளை யின்றித்
தெருள் சிவமில்லை அந்தச் சிவமின்றிச் சத்தியில்லை."

—சிவஞானசித்தியார்.

21. அருட்சத்தி பெண் வடிவம் பெறுவானேன் ?

உலகவுயிர்கள் அனைத்தும் ஆண் பெண் தன்மையில் இருந்தே உலகபோகம் நுகர்ந்து உலக வளர்ச்சி செய்கின்றன, செடி கொடிகளிடத்தும் ஆண் பெண் தன்மை இருப்பதை அறிகிறோம். ஆண்டவனும் தன் அருளையே பெண் வடிவமாய்க் கொண்டு போகியாய்த்தோன்றி உயிர்கள் அனைத்தையும் போகத்தை அனுபவிக்கச்செய்கின்றான். அவன் அம்மை அப்பனாக இருந்து உலக சிருஷ்டி

செய்ததனுலேயே உலகவுயிரனைத்தும் அம்மை அப்பராயிருந்து மக்கட்பேறடைந்து வாழுகின்றன. அவன் அம்மை அப்பனுயிருந்து உலக சிருஷ்டி செய்யாதுபோனல், நாமும் அம்மை அப்பராயிருந்து உலகவிருத்தி செய்தலியலாது. ஆனல் ஆண்டவன் போகரூபத்தோடு யோகரூபமும், வேகரூபமும் அல்லது கோரரூபமும் உடையவன்.

மின்சார சக்தியை ஆராய்ந்து பார்த்தால் அதனுள் இரண்டுவகையான சக்திகள் இருப்பதைக் காண்கின்ருேம்; ஒன்று "பாஸிட்டிவ்"; மற்ருென்று "நெகட்டிவ்". ஏன் இவை இரண்டு வகையாயிருக்கின்றன என்பதை எந்த விஞ்ஞான சாஸ்திரிக்கும் சொல்லமுடியாது. இவ்விரண்டும் சேர்ந்தாலல்லது மின்சாரமுண்டாகாது. "இருமையினன்றி, இயங்காது உலகம்" என்பது விஞ்ஞானிகளின் அபிப்பிராயமாகும். இங்ஙனம் எல்லாவற்றிலும் இரண்டிரண்டு சக்திகளிருப்பது ஆண் பெண் போன்ற சக்திகளாகும். இங்ஙனம் உலகம் முழுவதும் ஆண் பெண்வடிவமாக இயங்குவதற்காகவே, இறைவனும் தன்னருட்சக்தியைப் பெண்வடிவோடு கொண்டு விளங்குகின்ருன்.

22. கோயில்களிற் பள்ளியறை வைத்திருப்பதேன்?

இறைவனும் அவன் சக்தியும் பிரிந்திருப்பது தகாது; ஒன்றுசேர்ந்தே விளங்கவேண்டும் என்ப

தற்காகவே அம்மை வேறு அப்பன் வேருக வைத்து வணங்கிய இரண்டினையும் பூஜைமுடிவில் ஒன்று சேர்த்து வணங்குகின்ருர்கள்.

23. ஆண்டுக்கொருமுறை ஆண்டவனுக்கு நடத்தும் திருக்கலியாண வைபவம் எதற்கு?

ஆண்டவன் நித்தியகலியாண ரூபி. நமக்கு ஓராண்டு என்பது தேவர்களுக்கு ஒரு நாள். ஆதலால் ஆண்டுக்கொரு திருக்கல்யாணம் நடத்துவது தினமும் நடத்துவதாகும். தினமும் நடத்துவதேனெனின் சிவத்தினிடமிருந்து சக்தி பிரியாது அம்மை அப்பராம் போகவடிவம் கொண்டு அருள் செய்வதினுலேயே நாம் உய்கின்ருேம் என்கின்ற நன்றியறிதலைக் காட்டுவதற்காகவேயாம்.

24 பெண்தெய்வங்கள் பல இருக்கக் காரணம் என்ன?

அருபத்தில் சிவத்துக்குச் சக்தியும் நாதத்துக்கு விந்துவும் ஆக இருவகையாகவும்; ரூபத்தில் மகேசனுக்கு மகேசையாகவும், உருத்திரனுக்கு உமையாகவும், மாலுக்குத் திருவாகவும், அயனுக்கு வாணியாகவும், ரூபாரூபமாகிய சதாசிவத்துக்கு மனோன்மனியாகவும் எவ்வாறு ஏக நாயகனுகிய இறைவன் நடிக்கின்ருனோ அவ்வாறே அவனது சக்தியும் நடிக்கின்ருள். ஒன்பதுவிதமாக நடிக்கின்ற இறைவன் எப்படி ஒருவனோ அதுபோல

ஏழுவிதமாக நடிக்கின்ற பெண் தெய்வங்களும் ஏக சக்தி தெய்வத்தின் நடனங்களேயாகும்.

சக்தி

அரூபம்		ரூபா ரூபம்	ரூபம்			
சிவம் = சக்தி	நாதம் = விந்து	சதா சிவம் = மனோன் மனி	மகேசன் = மகேசை	ருத்திரன் = உமை	மால் = திரு	அயன் = வாணி

5. கடவுளையடையும் வழிகள்

25. மோட்சம் அடைவதற்குள்ள மார்க்கங்கள் எவை?

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கும் மோட்சம் அடைவதற்குரிய மார்க்கங்களாம்.

26. சரியையாவது யாது ?

சரியையாவது புறத்தொழில் மாத்திரத்தால் கடவுளின் உருவத் திருமேனியை வழிபடுதலாம். எஜமானனிடம் வேலைக்காரன் வணங்கிநின்று தயவு பெறுவதுபோல, நீராடிச் சமயசின்னங்களை

யணிந்து பயபக்தியோடு இறைவனை வணங்கிக் கோயில் கட்டுதல், விக்ரகம் அமைத்தல், நந்தவனம் வைத்து மலர் கொய்து மாலைகட்டிச் சாத்தல், விளக்குதல், விளக்கிடல், மெழுகல், விழாக் கொண்டாடல் முதலியன செய்து கடவுள் அருள் பெறுதலாம். இதனையே தாஸமார்க்கம் எனக் கூறுவர்.

27. கிரியையாவது யாது?

அகத்தொழிலாலும் புறத்தொழிலாலும் கடவுளுடைய ரூபாரூபத் திருமேனியை வழிபடுவதாம். தந்தையிடம் மகன் அன்பாகக் பேசி, கிட்டநின்று, தந்தையைத் தொட்டு அவர் மனதை மகிழ்வித்து, தனக்கு வேண்டியதைப் பெற்றுக்கொள்வது போல, கடவுளைக் கும்பங்களிலும் விம்பங்களிலும் லிங்கங்களிலும் மாலை சாத்திப் பதினறுவகை உபசாரத்துடன் கும்பிட்டு, நித்தியபூஜையாகிய கிரியைகளைச் செய்து, சந்தியாவந்தனம் முதலியவற்றையும் ஒழுங்காய் இயற்றிக் கடவுளைப் பக்கத்தில் கண்டு அன்புருகி என்பிளகி உடல்நெக்கு நெக்காக உருக மகிழ்ந்துநின்று வேண்டியவற்றைப் பெற்றுக் கொள்வது சத்புத்திரமார்க்கமாகிய கிரியையாகும்.

28. யோகமாவது யாது?

அகத்தொழில் மாத்திரத்தால் கடவுளுடைய அருவத் திருமேனியை வழிபடுதலாம். ஒரு நண்பனோடு ஒரு நண்பன் உரிமையுடன் உறவுபாராட்டி,

வழக்கிட்டு அவனை வேருெருவனுகக் கருதாது, மிக மிக நெருங்கி வேண்டியவற்றைப் பெற்றுக்கொள்வதுபோல, கடவுளைத் தனதுள்ளேயே பிராணனை இயக்கி, ஸ்தாபித்து,

"காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி லிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறைய நீர் அமைய ஆட்டி
பூசனை ஈசனுர்க்குப் போற்றவிக் காட்டினேமே"

என்றவாறு தன்னுள்ளே தலைவனை உணர்ந்து மூலகுண்டலியை எழுப்பி, புருவமத்தியில் சுடராகிய கொழுந்துவிட்டெரியும் உருகிய அமிர்தத்தினை உண்டு, மகிழ்ந்து, வேண்டுவன பெறுதலாகிய தோழன் முறையாகிய சகமார்க்கமே யோகம் எனப்படும்.

29 ஞானமாவது யாது?

அறிவு மாத்திரத்தினுல் உருவம் அருவுருவம் அருவம் என்னும் மூவிதத் திருமேனிகளையும் கடந்து நிற்கும் அகண்டாகார சோதிமயமான கடவுளை நோக்கிச் செய்யும் வழிபாடாகும். கணவனும் மனைவியுமாகிய இரண்டுபேரும் உடல் வேருனுலும் உயிர் ஒன்ருக நின்று இரண்டும் ஒன்றும் இல்லாமல், ஒருவரது இன்பம் மற்றவரதாக ஒன்றுசேர்ந்து உரிமை உறவு உயிர்த்துணை பூண்டுள்ளமைபோல, கடவுளுந் தானும் இரண்டற்று ஒன்றேயாகி, தன்னுள்ளே உலகமும் உலகத்துள்ளே தானுமாகி

'அவனே தானே யாகிய அந்நெறி யேகனாகி' தலைவன் தலைவி முறையில் வெளியில் சொல்ல முடியாத பேரின்பத்தை நுகர்ந்து நிற்கும் நிலையில், வேண்டியன பெறுதலாகிய "நாயகி நாயக" முறையாம் சன்மார்க்கமே ஞானமார்க்கம் எனப்படும்.

30. ஞானமார்க்கம் ஒன்றே முத்தியடையத் தக்கதாயிருக்க, சரியை முதலியன எதற்கு?

ஒரு மலையின் உச்சிக்குப்போகப் படிவழி ஏறிச் செல்வது போலவும், பத்தாம் வகுப்புக்குப் போக வேண்டிய மாணவன் முதல்வகுப்பு முதல் படித்துப் போவது சரியான முறையாவதுபோலவும் சரியை கிரியை யோகங்களிற் பழகி ஞானமார்க்கத்திற் செல்லுதலே நல்லவழி யாகும்.

'விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்பு, மலர், காய், கனிபோல் அன்றோ பராபரமே'

—தாயுமானவர்.

என்றபடி அரும்பில்லாது மலரும், மலரில்லாது காயும், காயில்லாது கனியும் உண்டாகாததுபோல சரியையில்லாமல் கிரியையும், கிரியையில்லாமல் யோகமும், யோகமில்லாமல் ஞானமும், ஞானமில்லாமல் மோட்சமும் கைகூடாது. ஆதலால் மனிதர்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் சரியை மார்க்கத்தில் நின்று ஆலய அமைப்பு முறையையும், ஆலய வழிபாட்டு முறையையும், ஆலய பூஜை விளக்கத்

தையும், திருவுருவப் பெருமைகளையும் நன்கு அறிந்து வழிபடவேண்டும்.

31. சரியை முதலியவற்றைக் கைக்கொண்டு நடப்பவர்களுக்குக் கடவுள் அருள்வது எங்ஙனம்?

கடவுள் சரியையாளர்க்குத் திருவுருவங்களில் மறைந்து நின்றும், கிரியையாளர்க்கும் யோகிகட்கும் பூஜிக்கும்போது மாத்திரம் தோன்றியும், ஞானிகட்கு அன்பே தாமாய் எப்போதும் விளங்கித் தோன்றியும் அருள்புரிகின்றார்.

---

6. ஆலயம்

32. ஆலயம் என்பதன் பொருள் யாது?

“ஆலயம்” என்பதை ஆ+லயம் எனப் பிரிக்கலாம். “ஆ” என்பதற்கு ஆன்மா என்று பொருள். “லயம்” என்பதற்கு லயிப்பதற்கு அல்லது சேருவதற்கு உரியது என்பது பொருள். ஆகவே, ஆலயம் என்பதற்கு “கடவுளது திருவடியில் ஆன்மா லயிப்பதற்கு உரிய இடம்” என்பது பொருள். ஆ என்பது ஆணவமலத்தையும், லயம் என்பது அடங்கியிருத்தலையும் குறிக்கின்றமையான், ஆலயம் என்பதற்கு ஆணவமலம் அடங்குவதற்குரிய இடம் என்றும் பொருள் கூறலாம். இதற்குக் கோயில் என்றும் ஒரு பெயர் உண்டு. அதனைக் கோ+இல் எனப்

பிரித்து கோ—கடவுள், இல்—தங்குமிடம், கடவுள் தங்குமிடம் எனப் பொருள் கூறுவர்.

33. எங்கும் நிறைந்து விளங்கும் கடவுளுக்குக் கோயில் எதற்கு ?

பூமியினடியில் எங்கும் வியாபித்திருக்கும் தண்ணீரை நமக்கு உபயோகப்படுத்த வேண்டுமானல் ஒரு கிணறு வெட்டிக் கட்டவேண்டி யிருக்கிறது. தண்ணீர் பூமியின் அடியில் எங்கும் நிறைந்திருந்தாலும் கிணற்றினலேயே நமக்குத் தாகவிடாய் தீருகிறது. 'எலக்ட்ரான்' (மின்சாரம்) ஆகாயமெங்கும் வியாபித்திருந்தாலும் 'எலெக்ட்ரிஸிட்டி பவர் ஹவுஸ்' (மின்சார நிலையம்) மூலமாகவே நமக்கு அதனை அனுபவிக்கமுடிகிறது. இவற்றைப் போல, கடவுள் எங்கும் நிறைந்திருந்தாலும் ஆலயங்களில் விசேஷமாக நின்று அருள் செய்கின்ருர். ஆகையால் அவர் அருள்பெற ஆலயம் இன்றியமையாததாகின்றது.

34. இந்துமதக் கோயில்களின் சிறப்புக்கள் எவை ?

இந்துமத ஆலயங்கள் ஒவ்வொன்றும் முதனூல்களின்படியே இயற்றப்பட்டுத் தத்துவ ஞானத்தை உண்டாக்குவதற்கு இன்றியமையாக் கருவிகளாய் விளங்குகின்றது.

கோபுரம், கொடிமரம், பிராகாரங்கள், மண்டபங்கள் முதலியன சிறந்த தத்துவங்களை விளக்கும்படி அமைக்கப்பட்டுள்ளன.

ஆலயங்களில் நடைபெறும் பஞ்சசுத்தி, பூஜை, நைவேத்தியம், தீபாராதனை, உற்சவம் முதலியனவும் சிறந்த கருத்துக்களை வெளிக்காட்டுவனவாய் இருக்கின்றன.

35. கோபுரத்தின் தத்துவம் யாது?

கோபுரம் ஸ்தூல லிங்கத்தை உணர்த்துகின்றது. ஆலயங்கள் ஓர் யோகியின் சரீரத்தின்கண் அமைந்துள்ள தத்துவங்களை விளக்குகின்றன. யோகியின் பாதம்முதல் சீரம் வரையுள்ள பாகங்களையும், அவனது இதயத்தில் இறைவன் விளங்கும் தன்மையையும் கோயில்கள் நன்ருகக் காட்டுகின்றன. ஆகவே, சரியை கிரியை உடையவர்களை யோகிகளாகக ஆலயங்கள் பயன்படுகின்றன என்னலாம். கோபுர தரிசனம் கடவுளது பாத தரிசனம் ஆகும். இதனை பிரம்மரந்திரமத்யகபால த்வாரம் என்று யோகிகள் கூறுகின்றனர்.

36. கொடிமரத்தின் தத்துவம் யாது?

கொடிமரம், யோகியானவன் பிராணவாயுவை நடுநாடியாகிய சுழுமுனையில் அசைவற்று நிறுத்திக்கொண்டு தியானிக்கில் மனம் முதலிய கரணங்

கள்யாவும் நின்று பிரபஞ்சமே தோன்ருது சிவதரி சனம் உண்டாகும் என்னும் உண்மையை அறிவிக் கின்றது.

37. பிராகாரங்களின் தத்துவம் என்ன?

கோயிலினுள்ளிருக்கும் ஐந்து பிராகாரங்கள் அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞான மயம், ஆனந்த மயம் என்னும் ஐந்துவித கோசங் களையும் குறிக்கின்றன. மூன்று பிராகாரங்கள் ஐந்து கோசங்களினலான ஸ்தூல சூட்சும காரணம் என்னும் மூவகைச் சரீரங்களை விளக்குகின்றன. வழிபடுவோர் மூன்றுமுறை ஐந்துமுறை பிராகாரங் களைச் சுற்றவேண்டுமென்பது, பஞ்ச கோசங்களை யும் மூவகைச் சரீரங்களையும் கடந்து இறைவன் விளங்குகின்ருன் என்பதை நினைப்பதற்காகும்.

38. கர்ப்பக்கிருகமாவது யாது?

கர்ப்பக்கிருகம் என்பது பிரதான மூர்த்தியை வைத்து வணங்கும் இடமாம். இதற்கு மூலஸ் தானம் என்றும் பெயர் உண்டு. இதன் உண்மை எல்லா உலகங்களையும் படைத்தற்குக் காரணமான மூலப்பிரகிருதியின் இடம் என்பதாம். கடவுள் உலகைப் படைக்க நினைத்த காலத்து அவரது அருட்சக்தியை மாயையிடத்தே அதிட்டிக்கச் செய் கிருர் என்பது கருத்து. அரூபியாகிய கடவுள் ரூபா ரூபியாகிருர்.

39. மண்டபங்கள் எவை? அவை எவற்றை உணர்த்துகின்றன?

அர்த்த மண்டபம், மஹாமண்டபம், ஸ்நபந மண்டபம், அலங்கார மண்டபம், சபா மண்டபம் என்னும் மண்டபங்கள் நிவிருத்தி, பிரதிஷ்டை, வித்தியை, சாந்தி, சாந்தியாதீதம் என்னும் கலைகளை உணர்த்துகின்றன.

மேற்கூறியவாற்றால் ஆலயங்கள் மிகவும் அவசியமானவை என்பதும், ஆலய பாகங்கள் பெரும் தத்துவங்களைக் கொண்டுள்ளன என்பதும் விளங்குகின்றன.

---

7. திருவுருவம்

40. இந்துக்கள், கடவுள் வழிபாட்டுக்குத் திருவுருவங்களை வழிபடுவது ஏன்?

அரசர் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் அரசரையே வைத்துக் கொண்டாட முடியாத குடிகள் அவரது படத்தை வைத்துக் கொண்டாடுவதேன்? அரசரிடத்துத் தமக்குள்ள பக்தியைக் காட்டுதற்கன்றோ? இவ்வாறே தந்தையின் படத்தை வைத்து மகன் கொண்டாடுவதும், ஜனத்தலைவரின்படத்தை வைத்து ஜனங்கள் கொண்டாடுவதும், அவர்கள் மீது இவர்கட்குள்ள பக்தியைக் குறிக்கிறதல்லவா?

ஒரு கணவன் தன் காதலியைப் பிரிந்து அயல் நாடு செல்லும்போது தன் காதலியின் படத்தை யும் கொண்டு சென்று மகிழ்கின்றான் அல்லவா? அவனது காதலியும் அயல்நாடு சென்ற கணவனை எண்ணி எண்ணி அவனைக் காணமுடியாது வருந்தி, அவன் படத்தை வைத்து அதனிடம் சில பேசி, அதைப் பார்த்துக் கணவனைப் புகழ்ந்துரைத்து, அதற்கு மாலை சாத்தி, தான் உண்ணப்போகும் பொருள்களை அப்படத்தின்முன் வைத்துக் கணவனை உண்பித்ததாக எண்ணி ஆடியும் பாடியும் மகிழ் கின்றாள். அயல்நாடு சென்ற கணவன் அவ்வேளை யில் அங்கு வந்து மறைவாய் நின்று அவள் செய்யும் செயல்களைக் கண்டு தான் இல்லாத வேளையிலும், தனது படத்தை வைத்து வணங்கும் அவளது பதி பக்தியைக் கண்டு மகிழ்வானா? அவள் செயலுக்காக அவளை வருத்தப்படுத்துவானா? நாகரிக மக்களும், உருவ வழிபாட்டை ஒத்துக்கொள்ளாதவர்களும் சில மனிதர்களுக்காகப் படத் திறப்பு விழாக் கொண்டாடுவதும் உருவச்சிலைகள் அமைப்பதும் எதைக்காட்டுகின்றன? அவர்கள் குறித்தமனிதரின் மீதுள்ள பக்தியையல்லவோ? அதுபோல, பக்தன் ஒருவன் கடவுளைக் காணவிரும்பி அவர்தம் திரு வுருவங்களை அமைத்து வழிபடுகின்றான்.

41. கடவுளைத் திருவுருவங்களாக வைத்து வணங்குகிறவர்கள் கடவுள் கோபத்துக்கு ஆளாக மாட்டார்களோ?

அரசன் படத்தை வைத்துக் கொண்டாடும் நம்மை அரசன் கோபிப்பதுண்டா? தன்படத்தை வைத்துக் கொண்டாடும் தலைவியைத் தலைவன் கோபிப்பதுண்டா? தன்னை நேரிற் காணமுடியாமற் போனாலும் தன்படத்தை வைத்துக் கொண்டாடிய தற்காக அரசனும் தலைவனும் மகிழ்ந்து, வழிபடு வோர்க்கு வேண்டுவன செய்வதுபோலக் கடவுளும் அவனை நேரிற் காணமுடியாது அவன் திருவுரு வத்தை வைத்து வணங்கும் அன்பர்களுக்கு அனுக் கிரகம் செய்கின்றான்.

42. விக்ரகங்கள் கடவுளின் உண்மையான திருவுருவங்கள்தாம் என்பதை எப்படி நிச்சயிக்க லாம்?

கடவுளைத் தேடிக் கண்டுகொண்ட பெரியார் தாங்கண்ட காட்சியைப் பல பாட்டுக்களால் சித் திரித்து வைத்திருக்கின்றார்கள். ஒரு கவி பாடிய பாட்டை வைத்துக்கொண்டு ஒரு சித்திரக்காரன் பாட்டின் பொருள் விளங்கும்படி ஒரு சித்திரம் வரைந்து காட்டுவதுபோல், அவர் பாடிய பாடல் களில் கூறியபடி திருவுருவங்கள் அமைக்கப்பட் டுள்ளன.

43. விக்ரகங்கள் எவ்வித உணர்ச்சியுமற்ற படங்களைப் போன்றவை தானே?

விக்ரகங்களில் சுயம்பாகவே முளைத்தவையும் உண்டு; தேவர்கள் ரிஷிகள் முதலிய பெரிய மஹான்

களால் பிரதிஷ்டிக்கப்பட்டவையும் உண்டு. பூஜை யின்பொருட்டு எங்கும் நிறைந்து விளங்கும் கடவுளை மூலமந்திரங்கள் சொல்லி ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஆகமமுணர்ந்த ஞானிகள் ஆவாகனம் செய்கின்றார்கள். அதன்பின் "தயாநிதியே! அடியேனை அனுக்ரகிப்பதற்காக இவ் விக்ரகத்தில் எழுந்தருள வேண்டுமென்று" அன்புடன் யாசித்து ஸ்தாபனம் செய்கிறார்கள். இதனை 'அலையாது அழுந்த நிலை பெறல் தாபனம்' என்பதால் அறியலாம். அதன் பின், பலவகைப் பூஜைகளாலும், நைவேத்தியங்களாலும், நித்திய நைமித்திக ஆராதனைகளாலும், கடவுள்சக்தியை அங்கே நிலைநிறுத்தி வழிபடுவோர் அதிலிருந்து பயன்பெறும்படி செய்துள்ளார்கள். ஆகையால் விக்ரகங்கள் படங்களைப்போல் உணர்ச்சி யற்றவைகளல்ல. படங்களுக்கும் விக்ரகங்களுக்கும் இடையே ஒரு கல்லுருண்டைக்கும் ஒரு பீரங்கிக்கும் இடையிலுள்ள பேதங்கள் உள்ளன.

44. விக்ரகத்தைக் கொண்டு உயிர்கள் அனுக்ரகம் பெறுவது எவ்வாறு?

சூரியன்முன் சிறிது பஞ்சைக் காட்டினல் பஞ்சில் தீப் பிடிப்பதில்லை. சூரியனுக்கும் பஞ்சுக்கும் இடையில் ஒரு சூரியகாந்தக் கண்ணாடியைக் காட்டினல் அது சூரியகிரணத்தை அதிகமாக இழுத்து வெகு சீக்கிரமாகப் பஞ்சில் தீப்பற்றி எரியும்படி செய்கிறது; அதுபோல, பஞ்சாகிய நமதுள்ளத்தில் இறைவன் அருளாகிய தீ வெகு துரிதமாய்ப் பற்று

வதற்குக் கண்ணாடியாகிய விக்ரகம் மிக உதவுகிறது.

பசுவின் உடலெங்கும் வியாபித்திருக்கும் பால், அதன் மடிவழியாகச் சுரப்பதுபோல, பரந்து கிடக்கும் ஆண்டவனது அருள், விக்ரகவழியாக நமக்குக் கிடைக்கிறது.

45. எங்கும் நிறைந்து விளங்குகிற கடவுள் விக்ரகங்களில் எவ்வாறிருக்கின்றார் ?

கடவுள் பாலில் நெய்போல் எங்கும் வியாபித் திருப்பினும் விக்ரகங்களில் தயிரில் நெய்போல விளங்கி நிற்கின்றார்.

46. இந்துமதச்சித்தர்களே விக்ரகவழிபாட்டை இழிவுபடுத்திக் கூறியது ஏன் ?

"கல்லிலும் செம்பிலுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே" எனக் கூறியதன் கருத்து, கல் செம்பு முதலியவற்றினில் மாத்திரமல்ல கடவுள் இருப்பது, எங்கும் நிறைந்து விளங்குகின்றார் என்பதை விளக்குவதற்கேயாம்.

"நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுட்பம் சாத்தியே
சுற்றிவந்து முணுமுணென்று சொல்லும் மந்திரம் ஏதடா
நட்டகல்லும் பேசுமோ நாதனுள் ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை யறியுமோ"

"பண்ணேன் உனக்கான பூசை யொரு வடிவிலே"

"தீர்த்த லிங்க மூர்த்தியென்று தேடியோடும் தீயரே"

என்றெல்லாம் கூறியவர்கள்.

"பஞ்ச சுத்திசெய்து, நின்னைப் பாவித்துப் பூசைசெய்தால்
விஞ்சியஞானம் விளங்கும் பராபரமே" எனவும்;

"தீர்த்தலிங்கம் உம்முளே தெளிந்துகாண வல்லிரேல்
தீர்த்த லிங்கம் தானதாய்த் தெளிந்ததே சிவாயமே"

எனவும் ஏன் கூறல்வேண்டும்? அவர்கள் சிவாலய வழிபாட்டை இழித்துக்கூறியது, சிவாலய வழிபாட்டின் தத்துவத்தை உணராது செய்கின்ற கிரியைகள் சீக்கிரம் பயன்தராவாதலால் அவற்றின் உண்மைகளை மக்கள் அறியவேண்டும் என்பதை வற்புறுத்தவே யாகும்.

47. ஆலயங்களும் விக்ரகங்களும் பாமர மக்களுக்காக அமைந்தவை தானே?

சரியைவான்கள் முதல் ஞானவான்கள்வரை எல்லா மக்களுக்கும் விக்ரக வழிபாடு இன்றியமை யாததே. ஞானிகளாகிய ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சங்கராச்சாரியர், நம்மாழ்வார், இராமகிருஷ்ண பரமஹம்சர் முதலியோர் விக்ரக வழிபாடு செய்யவில்லையா? இவர்களைப் பாமரர்கள் என்று சொல்லலாமா? இவர்கள்

விக்ரகங்கள் வாயிலாக அருள் பெறவில்லையா? இவற்றை உற்றுநோக்குமிடத்து விக்ரக வழிபாடு பரம ஞானிகள்வரை யாவருக்கும் இன்றியமையாது வேண்டற்பாலதே என்பது விளங்கும்.

ஒவ்வொரு விக்ரகத்தின் தத்துவங்களையும் அடியில் ஒவ்வொரு பாடமாக விளக்கியிருப்பதால் இங்கு இத்துடன் இது நிறுத்தப்பட்டிருக்கிறது.

---

8. சிவலிங்கம்

48. ஆலயங்களில் காணும் விக்ரகங்களில் முக்கிய மானது எது?

சிவலிங்கமே முக்கியமான விக்ரகமாம்.

49. சிவலிங்கம் என்பதன் பொருள் என்ன?

சிவம்+லிங்கம்=சிவலிங்கம்.
சிவம்=கடவுள். லிங்கம்=அடையாளம்.

கடவுளைக் காட்டும் குறி அல்லது அடையாளம் என்பது பொருள்.

50. லிங்கம் என்பதன் விரிந்த பொருள் யாது?

லி=லயம், ஒடுங்குதல்.
கம்=போதல், தோன்றுதல்.

ஆன்மாக்களும் உலகங்களும் ஒடுங்குவதற்கும் தோன்றுவதற்குமான இடம் என்பது பொருள்.

51. சிவலிங்கத்தின் அமைப்பு யாது?

இந்த விக்ரகத்தின் அடிப்பாகத்தில் உடுக்குப் போன்ற பீடம் ஒன்று காணப்படும். இதற்கு ஆவுடை யென்று பெயர். இதன்மேல் உருண்டு நீண்ட, முனையற்ற தண்டொன்று காணப்படும். இதற்குப் பாணம் அல்லது லிங்கம் என்று பெயர். இவற்றுடன் ஆவுடையின் மேற்பாகத்தில் ஒரு பக்கமாகக் கோமுகம் ஒன்றுங் காணப்படும்.

52. சிவலிங்க உருவம் எதை விளக்குகின்றது?

சிவலிங்கம், ஒரு ரூபமாக அமைந்திருந்தாலும், அது மற்ற விக்ரகங்களைப் போன்று மனிதரூபத்தோடு அமைந்திருக்கவில்லை. முன்னர்க் கூறியது போல் அரூபியாகிய இறைவன், மற்றைய ரூபங்களெல்லாம் தோன்றுவதற்கும் இறுதியில் எல்லாம் தன்னுள் லயமாவதற்குமாக ஒரு திருவுருவத்தைக் கொள்ள வேண்டியவனுகிறுன். அவ்வாறு அவன் கொண்டரூபாரூபமாகிய சதாசிவமே சிவலிங்கமாம்.

53. இறைவன் சிவலிங்க வடிவமாகவே ரூபாரூபத் திருமேனியைக் கொண்டனன் என்பதை எவ்வாறு ஊகித்தறியலாம்?

பெற்றோர் சாயல் அவரிடம் பிறந்த பிள்ளைகளுக்கும் இருப்பதுபோல் பூமி, சூரியன், சந்திரன்

முதலிய அண்டங்களும்; பிண்டங்களும்; முட்டைகளும்; காய்கனிகளும்; பூக்களின் அண்டாசயங்களும்; கார்த்திகைத் தீபமுதல் நம் வீடுகளில் எரியும் விளக்குச்சுவாலைவரைக் காணும் சோதிவடிவங்களும்; யோகிகளின் யோகத் திருவுருவங்களும் பிறவும் ஏகதேசம் சிவலிங்க வடிவமாகவே காணப்படுகின்றன. ஆகவே, இவை தோன்றுவதற்குக் காரணமாகிய இறைவனும் இத்தகையஒருதிருவுருவமாகிய சிவலிங்க உருவத்தினையே கொண்டுளான் என்பதை நிச்சயிக்கலாம். அணுவுலக ஆராய்ச்சியாளர், அணுவுக்கு அணுவாக எவ்விடத்தும் விளங்கும் எலக்ட்ரானைப் பரிசோதித்துப் பார்த்ததிற் பச்சைநிறமான ஒருவட்டத்தின் நடுவில் செந்நிறம் பொருந்திய ஒரு சோதி துலங்கக் கண்டுளார்கள். இப்பச்சை வடிவம் ஆவுடையினையும், சோதி வடிவம் சிவலிங்கத்தினையும் போன்றுள்ளன. ஆகவே, எலக்ட்ரான் வியாபித்த உலகமெங்கும் சிவலிங்க வடிவம் தோன்றுவதாலும் இறைவன் கொண்ட அருவுருவத் தோற்றம் சிவலிங்க வடிவமெனத் தெளியலாம்.

54. சிவலிங்கம் திரிமூர்த்தி சொரூபம் என்பது ஏன்?

ரூபாரூபமூர்த்தியாகிய பின்னரே இறைவன் அனைத்தையும் படைத்து அளித்து அழிப்ப மும்மூர்த்திகளாயினமையால் சிவலிங்கம் திரிமூர்த்தி சொரூபமாயிருக்கிறது. ஆவுடையில் பிரம்ம

விஷ்ணுக்களும், பாணத்தில் சிவனும் அடக்கம் என்பார்கள்.

55. அரூப இறைவன் முறையே ரூபாரூபியாகவும் ரூபியாகவும் ஆயினன் என்பதை எவ்வாறு ஊகித்தறியலாம்?

ஒரு மரம் ஒரு வித்திலிருந்து பிறக்கிறதை நாம் பார்க்கிறோம். மரத்தை ஒரு ரூபமாகக் காண்பதற்கு முன் அது ரூபாரூபமாகிய வித்து வடிவத்தோடு இருக்கிறது. அம்மரமே வித்தாகத் தோன்றுவதற்கு முன் எவ்வித ரூபமுமில்லாததாயிருக்கிறது. ஒரு விதை இங்ஙனம் அரூபமாயிருந்து ரூபாரூபமாகி ரூபத்தைப் பெறுகின்றது. இதுபோலவே ஒரு குட்டியும், ஒரு பிள்ளையும் ஒரு பிண்டத்தில் தோன்றுகின்றன. பிண்டமும் எவ்வித ரூபமுமற்ற ஒன்றிலிருந்து உண்டாகிறது. இவையனைத்தையும் உற்றுநோக்குமிடத்துச் சராசரங்கள் எல்லாம் இவ்வகையில் திருவுருவங்கள் பெறுமாறு இயக்கும் இறைவனும் இவ் வகையிலேயே திருவுருவம் கொண்டிருத்தல் வேண்டுமென்று நிச்சயிக்கலாம்.

56. ஆவுடை எதைக் குறிக்கின்றது?

'ஆவுடை' யென்பது அடியில் பீடமாயிருப்பது. அது சக்தியைக் குறிக்கின்றது.

57. பாணம் அல்லது லிங்கம் எதைக் குறிக்கின்றது?

லிங்கம் ஆவுடையின்மீது தோன்றிச் சிவத்தினது உண்மைச் சொரூபமாகிய பரவெளியைக் குறிக்கின்றது.

58. பரவெளி எதைக் குறிக்கின்றது?

பரவெளி மூப்பத்தாறு தத்துவங்களையும் கடந்தது. 'ஞானகாசம்' என்று சொல்லப்படும் இப்பரவெளி சிதம்பரம் எனவும், திரு அம்பலம், சிற்றம்பலம் எனவும் கூறப்படும். இந்தப் பரவெளியிலேதான் நடராஜன் ஐந்தொழில் நடனஞ் செய்கின்றான். இந்நடன விசேடங்கள் "நடராஜர்" என்ற பாடத்தில் விளக்கப்பட்டுள்ளன. இந் நடன தரிசனத்தையே சிதம்பரத்தில் "இரகசியதரிசனம்' என்பர். இப்பரவெளியில் நடராஜர் செய்யும்நடனத்தினலேதான் எல்லாச் சராசரங்களும் இயங்குகின்றன.

59. லிங்கம் ஆவுடையாளாகிய பீடத்தை ஊடுருவிச் சென்றிருப்பது எதைக் காட்டுகிறது?

பரவெளியாகிய சிவம் அல்லது நாதம், சக்தி அல்லது விந்துவை ஊடுருவி வியாபித்திருக்கிறது என்பதையும், ஒன்று மற்றொன்றைப் பிரியாமல் சேர்ந்திருக்கிறது என்பதையும் காட்டுகின்றது.

60. ஆவுடை லிங்கத்தின்கீழ் அடங்கியிருத்தல் எதனைக் குறிக்கின்றது?

சக்தி, சிவத்துக்குள்ளே அடங்கித் தொழில் செய்கின்றது என்பதைக் காட்டுகிறது.

61. கோமுகி என்பது யாது? அஃது எதைக் குறிக்கின்றது?

ஆவுடையாளின் மேற்பாகத்தில் வெளியே நீண்டிருக்கும் இது சிவசக்தி உயிர்களுக்குச் செய் யும் தண்ணளியைக் குறிக்கின்றது. இதனாலேயே ஆலயவழிபாடு செய்யும் அடியார்கள் கோமுகி வழி யாகப் பாயும் அபிஷேக தீர்த்தங்களை இறைவனது திருவருள் சுரப்பதாக மதித்துக் கையால் ஏந்தித் தலையில் தெளித்துச் சிவனருள் பெற்றதாக மகிழ் கிறார்கள்.

62. சிவலிங்கத்தின் முன்பாகக் காணப்படும் நந்தி அல்லது காளைமாடு எதை உணர்த்துகின்றது?

மாடு என்பது சாஸ்திரங்களில் தர்மதேவதை எடுக்கும் ரூபம்; ஆதலால் மாடு தர்மத்தை உணர்த் தும். நந்தி என்பதற்கு ஆனந்திப்பது என்றும் பொருள் உண்டு. வெண்மையான மாடாதலால் ஸாத்வீகத்தையும், பரம்பொருளாகிய லிங்கத்தி னிடம் கொண்டு சேர்க்குங் ஸத்குணங்களாகிய சமம், விசாரம், ஸந்தோஷம். ஸாது சங்கம் ஆகிய நான்கு ஆத்ம குணங்களையும் உணர்த்தும்,

63. "நந்தியின் அனுமதியின்றிச் சிவதரிசனம் செய்யமுடியாது" என்பதன் இரகசியம் யாது?

முற்கூறிய நான்கு ஆத்ம குணங்களும் ஒருவனுக்கு ஏற்பட்டாலல்லது கடவுளை ஸச்சிதானந்த அறிகுறி ரூபமாக உணரமுடியாது என்ற வேத ரகசியத்தை வெளிப்படுத்தும்.

64. கோயிலில் பிரதக்ஷணதிகள் செய்யுங்கால் நந்திக்கும் லிங்கத்திற்கும் குறுக்கே போகலாகாது; நந்தியையும் சுற்ற வேண்டும் என்பதன் இரகசியம் என்ன?

ஸச்சிதானந்த அனுபவத்திலிருந்து வெளிப்பட்டுப் பிரபஞ்ச விவகாரத்தில் வரும்போது, மேற்கூறிய ஆத்மகுணங்கள் வழியாக அனுபவம் சேரும் வழிக்கு விரோதமானவற்றைச் செய்யாது ஆத்ம குணங்களிலேயே நிற்கவேண்டும் என்பதாம்.

65. சக்தி, சிவம் அவற்றின் விளையாட்டு என்ற இவற்றை விஞ்ஞானிகள் எவற்றோடு உவமிக்கிறார்கள்?

சிவம் — மேட்டர் (Matter)
சக்தி — எனர்ஜி (Energy)
விளையாட்டு — ஆக்டிவிட்டி (Activity)

சிவ சக்திகளை "கைனிட்டிக் எனர்ஜி"—பொட்டென்ஷியல் எனர்ஜி" என்றும் கூறுகிறார்கள்.

66. இவற்றை நாம் அறிய வேண்டுவது எதற்கு?

சிவலிங்கத்தைப்பற்றி ஆபாசமாகச் சிலர் கூறும் இழிப்புரைகளை ஒழிப்பதற்கும், சிவலிங்க வழிபாடு செய்கின்றவர்கள் இதன் தத்துவத்தை உணர்ந்து வழிபட்டால் மாத்திரமே நன்மை பெறக் கூடுமாகையினாலும் இத் தத்துவங்கள், அன்பர்கள் அனைவரும் ஐயந்திரிபற அறிதற்குரியனவாம்.

---

9. விநாயகர்

67. "விநாயகர்" என்ற பதத்தின் பொருள் யாது?

நாயகரற்றவர், ஒப்புயர்வற்றவர் என்பது பொருளாம்.

68. விநாயகர் திருவுருவத்தின் அமைப்பு எப்படி?

யானைமுகம், ஒடிந்த கொம்பு, பருத்த தொந்தி, இடது கையில் மோதகம், மூஷிக வாகனம் இவற்றுடன் இருந்த கோலத்தோடு விளங்குவதே இத் திருவுருவத்தின் அமைப்பாம்.

69. இவர் பரமசிவன்றன் மூத்த குமாரர் என்று கூறப்படுவானேன்?

எல்லாம்வல்ல பரம்பொருளாகிய கடவுளிட மிருந்து முதலாவது உண்டாகிய படைப்பு "ஓம்" எனும் பிரணவநாதமே யாகும். அந்த ஓம் என்னும் ஒலியின் வரிவடிவமே விநாயகரின் திருவுருவமாம். இறைவனிடமிருந்து முதற்கண் தோன்றியது ஓங் காரப் பிரணவமே யாகையால் இவர் "பிரணவ கணபதி" யென்றும் "ஓங்கார ரூபன்" என்றும் பரமசிவனது மூத்தபிள்ளை என்றும் அழைக்கப்படு கிறார்.

70. ஓங்கார ஒலியின் வரிவடிவமே விநாயகர் என்பதை எவ்வாறு விளக்கலாம்?

ஒடிந்த கொம்பு "ஓ" என்ற எழுத்தின் சுழி இருக்குமிடம். இவ்வெழுத்து இங்கிருந்து தொடங்கி வலக்கை வழியாகக் கிரீடத்தைச் சுற்றி, இடக்கை பாசம் வரையில் வந்து, திரும்பி வளைந்து, நெற்றிப் பொட்டு வரையிற் போய்த் துதிக்கை வழியாகக் கீழிடக்கை வந்து கால்வரை இறங்கும்.

இடக் கையும் மோதகமும் "ம்" என்பதைக் குறிக்கின்றது. ஆகையால் விநாயகர் திருவுருவம் ஓங்கார சொரூபமே யாகும்.

71. இந்த விக்ரகத்துக்கு யானைமுகம் அமைக் கப்பட்டதேன்?

யானையின் குரலொலி உலகில் உண்டாகும் மற்ற எல்லா ஒலிகளைக்காட்டிலும் ஓங்காரப் பிரணவ ஒலியை நன்கு ஒலிப்பதால் யானைமுகம் இவருக்கு அமைக்கப்பட்டது.

72. எல்லா வழிபாடுகளிலும் விநாயகர் வழி பாடு முதலாவதாகச் செய்வது எதற்கு?

பிரணவ ஒலி எல்லாவற்றிற்கும் முதலாவதாக விளங்குவது; ஆகையால் விநாயகரும் முதலாவதாக பூஜிக்கப்படுகிறார்.

73. அவர் பெரிய வயிறு உடையவராய் இருப் பது எதைக் குறிக்கின்றது?

ஓங்காரத்துள் எல்லா அண்டங்களும் அடங்கிக் கிடக்கின்றன என்பதைக் காட்டுகிறது.

74. மோதகம் அல்லது அமிர்த கலசம் எதைக் குறிக்கின்றது?

அழிவற்ற தன்மை, நிஜானந்தம் முதலிய கல்யாண குணங்கள் அவரிடம் குடிகொண்டிருக் கின்றன என்பதைக் காட்டுகின்றது.

75. இவருக்கு மூஞ்சூறு வாஹனம் ஆனது ஏன்?

விநாயகர் ஓங்காரப்பிரணவரூபி என்றபோது அது மஹா பெரிய அண்டங்களையும் தனதுட்

கொண்ட பிர்ம்மாண்ட வடிவமென நமக்குப்படு கிறது. அவருக்கு வாஹனம் மூஞ்சூறு என்ற போது மூஞ்சூறு தாங்கத்தக்க சிற்றுருவினர் என் பதும் தெரிகிறது. ஆதலால் கடவுள் அணுவுக் கணுவாயும், மகத்துக்கு மகத்தாயும் இருக்கிறார் என்பதை உணர்த்த மூஞ்சூறு வாகனமாயிற்று.

ஆகவே, கடவுளிடமிருந்து முதலாவது உண் டாகிய ஓங்காரப் பிரணவ சப்தத்தின் ரூபமே விநாயகர் திருவுருவம் என்பது பெறப்படும்.

---

10. நடராஜர்

76. நடராஜர் நடனமாடிக்கொண்டு இருப்ப தேன்?

அணுக்களைப்பற்றி ஆராய்ச்சிசெய்கின்ற விஞ் ஞானிகள், "அணுக்களெல்லாம் ஏகதாளத்தில் ஆடிக்கொண்டிருக்கின்றன" என்பதைக் கண்டு அதற்குரிய காரணம் என்ன என்பதை ஆராய்ந்து பார்க்க, காரணம் காணமுடியாது கலங்கினர். அதன்பின் நமது தெய்வம் நடனமாடிக்கொண் டிருக்கிறது என்பதைக் கேட்டு வியந்த அந்த விஞ் ஞானிகள் இங்கு வந்து இதனைக் கண்டு சென்றுள் ளார்கள். அணுக்கள் இயங்க அண்டங்கள் இயங்கு கின்றன. அண்டங்கள் இயங்க ஆண்டவனும் நடன

மூர்த்தியாயிருக்கவேண்டும். ஆதலினாலேயே நடராஜர் விக்ரகம் நடனமாடும் ரூபமாக விளங்குகிறது. மனிதர்களுடைய நோக்கம் துக்கம் நீங்கிச் சுகம் அடையவேண்டும் என்பதே யாகும். நாம் ஆனந்த மடைய ஆனந்தமூர்த்தியை வணங்குதல் வேண்டும். அவர் ஆனந்த நடனம் புரிவதால் எப்பொழுதும் ஆனந்தத்தோடு விளங்குகிறார் என்பது தெரிகிறது.

77. நடராஜர் திருவுருவத்தின் அமைப்புகள் யாவை?

இவ்விக்ரகம் ஒரு மனிதன் நடனமாடும் ரூபமாக அமைந்திருக்கிறது. வலக் காலைக் கீழே ஒரு அரக்கன் மேல் மிதித்து இடக்காலை மேலே உயர்த்தி, ஓர் இடக்கையால் தூக்கிய பாதத்தைக் காட்டி மற்றைய இடக்கையில் அக்கினி தாங்கி, ஒரு வலக் கையில் அபயஹஸ்தம் பிடித்து, மற்றொரு வலக் கையில் உடுக்கினைப் பிடித்து நிற்பதாக இத்திருவுருவம் அமைந்துளது.

78. இவரது ஒரு வலக்கையில் உடுக்கு இருப்பதேன்?

உடுக்கிலிருந்து வரும் ஒலியால் அண்ட பிண்ட சராசரங்கள் எல்லாம், பெரிய தீயிலிருந்து பொறிகளும் ஊற்றுநீரிலிருந்து குமிழிகளும் வருவன போன்று, இறைவனிடமிருந்து தோன்றுகின்றன என்பதைக் குறிக்கும். ஆகவே, இது சிருஷ்டி

அல்லது ஆக்கத்தை உணர்த்துகின்றது. ''உலகம் சப்தத்தில் பிறந்து அதிலேயே நிலைபெற்றிருப்பது'' என வேதம் கூறுகின்றது.

79. அபயஹஸ்தத்தின் கருத்தென்ன?

இது அமைதிக் குறியைக் காட்டுகிறது. ''அங் ஙனமே யாகுக'' என்பதைக் காட்டி உலக முழு வதும் மாறாமலும் தவறாமலும் ஒழுங்காய்ப் பரிபால னம் செய்யப்படுவதை இது குறிக்கின்றது. ''இறை வன் திருவடியே தஞ்சமென வந்தடைந்தார்களைக் காப்பாற்றுவேன்'' எனக் கூறுவது போல் அமைந் திருக்கிறது. ஆகவே, இது ஸ்திதி அல்லது காத் தலைக் குறிக்கின்றது.

80. இடக் கையில் தாங்கியிருக்கும் தீ எதை உணர்த்துகின்றது?

எல்லா வுலகங்களையும் இறுதியில் அநித்திய மாக்கும் சம்ஹார சக்தியை அல்லது அழித்தலை உணர்த்துகின்றது.

81. ஊன்றிய வலக்கால் எதை உணர்த்து கின்றது?

படைத்தல் முதலிய விஷயங்களை எவர்க்கும் விளங்க வொட்டாமல் மறைக்கும் மாயா சக்தியை உணர்த்துகின்றது. உயிர்கள் செய்த பாவ புண்ணி

யங்களுக்குத் தக்கவாறு அவை இன்ப துன்பங்களை நுகரும்படி செய்தலாகிய "திரோபவம்" அல்லது "மறைத்தலை" இது உணர்த்துகின்றது.

82. தூக்கிய பாதம் எதை உணர்த்துகின்றது?

குஞ்சிதபாதமாகிய தூக்கியிருக்கும் இடக்கால் எல்லோரையும் மயக்கும்படியானதும் அநாதியும், அநந்தமுமாயுமுள்ள சிருஷ்டியாதி நாடகத்திலிருந்து உயிர் விடுபட்டு ஓய்வடையும்படி செய்யும் நிழல்போன்ற கடவுளின் கருணையைக் குறிக்கின்றது. இப்பாதத்தை ஓர் இடக்கை சுட்டிக்காட்டி, நமக்குபதேசிக்கும் குருவேபோல் "ஆண்டவன் திருவடியன்றி உயிர்களுக்குக் கதியில்லை. ஆதலால் அதனை அடைய முயலுங்கள்" என உபதேசிப்பது போல் இருக்கின்றது. ஆகவே, தூக்கியபாதம் அனுக்ரகம் அல்லது அருளலைக் குறிக்கின்றது.

ஆகவே, நடராஜரது ஆனந்தத் தாண்டவம் பஞ்ச கிருத்தியத் தாண்டவம் என மதிக்கப்படும். இது கடவுளது ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோபவம், அனுக்ரகம் ஆகிய ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலை நன்கு விளக்குகின்றது.

"தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு"

என்னும் பாட்டும் இதனை விளக்கும். மேலும் இப் பெருமானது திருநடனம்,

"மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கிஅருள் தானெடுத்து—நேயமுடன்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பரதம் தான்"

—**உண்மைவிளக்கம்.**

என்றபடி மாயையை அகற்றி, வினைகளைத் தொலைத்து, மலங்களை நீக்கி, மோட்சத்தைத் தருகின்றது என்பதைக் காட்டுகிறது. ஆதலால் நாம் நடராஜப்பெருமானின் திருவுருவச் சிறப்பினை நினைந்து வழிபட்டுய்வோமாக.

---

11. மகேசன்

83. மகேசன் யார்?

ஆண்டவனது உருவத்திருமேனிகளான மகேசன், ருத்திரன், மால், அயன் என்ற நான்கினுள்ளும் முதலாவதும், தலைசிறந்ததுமான உருவத்தினைக் கொண்டவரே இவர். இவர் பரமேஸ்வரன் என்றும் அழைக்கப்படுவார்.

84. இந்தத் திருவுருவத்தின் அமைப்பு யாது?

பிறையினையும் கங்கையையும் சடாமுடியினிடத்தே தரித்து, பாம்பினை மாலையாகவுடைய

வராய்த், திருநீறு அணிந்து, சக்தியை ஒருபாகத்தில் அமர்த்தி, ரிஷபவாஹன ஆரூடராயிருப்பதாம்.

85. இவரது வாஹனம் நந்தியென்ற வெள்ளை மாடு என்பது ஏன்?

நந்தி தர்மசொரூபம். இது சமம், விசாரம், சந்தோஷம், சாதுசங்கமாகிய நான்கு குணங்களையும் நான்கு கால்களாகக் கொண்டிருக்கிறது. நந்தியின் மீது பரமேஸ்வரன் ஆரோகணிப்பது, இந்நான்குவகை ஆத்ம குணங்களையுங் கொண்ட உயிர்களிடத்து மாத்திரமே இறைவன் எழுந்தருளி வீற்றிருந்து அருள் செய்வன் என்னும்தத்துவத்தை விளக்குவதாகும்.

86 இவர் வெண்ணீறணிந்திருப்பதேன்?

நிலையாமையை உணர்த்தி அருளொளி நல்கி எல்லாவுயிர்கட்கும் நற்பயனளிக்க இவர் வெண்ணீறணிந்திருக்கின்றார். நாமும் இவரைப்போல் வெண்ணீறணிய வேண்டும் என்பதையும் இது காட்டும்.

87 இவர் அரவம் அணிந்திருப்பது எதை உணர்த்துகிறது?

அரவம் அணிவதால் உலகத்தினை இயக்கும் தனது சக்தியை உணர்த்துகிறார்.

88. இவர் மறை ஓதுவது எதற்கு?

நமக்கு அறிவினைத் தருதற்பொருட்டும், நாமும் அதுபோல் ஓதுதற் பொருட்டும் இவர் இங்ஙனம் செய்கின்றார்.

89. சடையில் கங்கை தரித்திருப்பதேன்?

பகீரதன் தன் மூதாதையரை யெழுப்ப தேவ கங்கா நதியைத் தவ வலிமையால் பூவுலகுக்குக் கொணர்ந்தான். அது உலகத்தை அழித்துவிடக் கூடுமாதலால் அதனை இறைவன் தன் சடையில் வாங்கிச் சிறிது உலகத்திற்குத் தந்தனன் என்பது வரலாறு. இதனை உற்றுநோக்குவார் இறைவன் இரண்டாவது மனைவியாகக் கங்கையை வைத்துளார் என்று கூறார். இறைவனைத் தரிசிக்காதவிடத்து உயிர் பரிசுத்தம் பெறாது என்பது இதன் தத்துவார்த்தமாம்.

90. இவர் மூன்றாம் பிறைச் சந்திரன் அணிந்திருப்பது எதைக் குறிக்கும்?

தக்கனால் அடைந்த பெருஞ்சாபத்தினை நீக்கச் சந்திரன் இறைவனை அடைக்கலம்புக, அவன் அதை நீக்கி இரட்சித்துச் சடைமுடியில் தரித்துக் கொண்டான் என்பது வரலாறு. இஃது இறைவன் தன்னை அன்புடன் அடைந்தவரைக் காத்து இரட்சிப்பான் என்பதை உணர்த்துகின்றது.

91. இவர்தம் சக்தி யார்?

மகேசை அல்லது பார்வதி.

110937

92. பார்வதிக்குப் பாதிஉடல் கொடுத்தார் என்பதன் கருத்தென்ன?

இவர் வேறு இவரது சக்தி வேறு அல்ல என்பதை இது குறிக்கின்றது.

---

12. திருமால்

93. திருமால் அல்லது மஹாவிஷ்ணு யார்?

ஏகநாயகன் உலகத்தைப் படைத்து, அளித்து, அழிக்கக்கொண்ட மும்மூர்த்தங்களில் காத்தல் தொழிலைக்கொண்ட கடவுள் இவர்.

94. ஆலயங்களில் இவரது திருவுருவம் எவ்வாறெல்லாம் வைத்து வணங்கப்படுகிறது?

நின்ற திருக்கோலமாகவும், இருந்த திருக்கோலமாகவும், ஆதிசேஷ சயனத் திருக்கோலமாகவும் வைத்து வணங்கப்படுகிறது.

95. இவரது திருவுருவத்தின் அமைப்பு யாது?

ஒரு கையில் பாஞ்சசன்யம் என்ற சங்கினையும், மற்றொரு கையில் ஸுதர்சனம் என்ற சக்கரத்தினையும், ஒரு கையில் கௌமோதகி என்ற

கதையினையும் இவர் கொண்டிருக்கிறார். ஒரு கை அபயஹஸ்தமாக அமைந்திருக்கிறது. மார்பில் கௌஸ்துப மணியினையும் நெற்றியில் ஸ்ரீ வத்ஸம் என்றமறுவினையும் கொண்டிருக்கிறார்.

96. கையிலிருக்கும் சங்கு எதைக் குறிக்கின்றது?

சங்கிலிருந்து உண்டாகும் ஓங்காரப் பிரணவ ஒலியால் இறைவன் எல்லாவற்றையும் படைக்கின்றான் என்பதை உணர்த்துகின்றது.

97. சக்கரம் எதை உணர்த்துகின்றது?

உலகத்தையெல்லாம் இறைவன் இறுதியில் அழிக்கின்ற செயலை உணர்த்துகின்றது.

98. கதாயுதம் எதை உணர்த்துகின்றது?

ஓயாத சஞ்சலம் நிறைந்த உலகவாழ்வாகிய பெரும் போரில் நம்மைத் தாக்கும் சுகதுக்க ரூபமான அம்புகளைத் தடுக்கும் புத்தியைக் குறிக்கின்றது.

99, அபயஹஸ்தம் எதை உணர்த்துகின்றது?

எல்லா உலகங்களையும் எவ்வுயிர்களையும் இறைவன்காத்து இரட்சிக்கின்றான் என்பதை உணர்த்துகின்றது.

100. கௌஸ்துபமணி எதை உணர்த்து கின்றது?

பிரபஞ்சத்துள் ஆடும் பரஞ்சோதியாகிய அந்த ராத்மாவை உணர்த்துகின்றது.

101. நெற்றியிலுள்ள ஸ்ரீவத்ஸம் எதை உணர்த்துகின்றது?

சகலத்திற்கும் ஆதாரமாகிய ப்ரதானம் என்ற தத்துவத்தை உணர்த்துகின்றது.

102. சேஷசயனத் திருவுருவம் எவ்வாறு அமைந்திருக்கிறது?

இத்திருவுருவம் சங்கு, சக்கரம், கதை, பதுமம் முதலியவற்றை யணிந்து ஐந்து தலையுள்ள பாம்பின் மீது படுத்துக்கொண்டு ஒருவித உறக்கத்தில் இருப்பதாகவும், பாம்பு படமெடுத்துக் குடைபிடிப்பதாகவும், கால்மாட்டில் மஹாலக்ஷ்மி என்ற அம்பிகை உட்கார்ந்திருப்பதாகவும் அமைந்திருக்கிறது.

103. இவர் எப்போதும் தூங்கிக்கொண்டு கிடப்பதன் கருத்தென்ன?

இவர் தூங்கும் தூக்கம் நாம் தூங்கும் தூக்கம் போன்றதன்று. இதற்கு யோகநித்திரை அல்லது

அறிதுயில் என்று பெயர்; அதாவது, எல்லாவற்றை யும் தம்முள்ளடக்கி அவற்றை நன்ருய் நடைபெறச் செய்து, தாம் எவ்வித பந்தமும் கவலையுமற்றவராய் ஆனந்தமாகக் கிடப்பதை உணர்த்துகிறது. இவ ரது சயனக்கோலம் இவர் எங்கும் நிறைந்திருக்கி ருர் என்பதையும் உணர்த்துகிறது.

104. இவரது சயனம் ஆதிசேஷன் என்ற பாம்பின் மீது என்பது எதனை உணர்த்தும்?

பாம்பு தாமத குணமாகிய கோபத்தினை யுடை யது. சேஷன் என்பதற்கு சேஷித்து நிற்பது என் பது பொருள்; அதாவது, பிரளயகாலத்தில் எல்லாம் அழிந்துபோக மீதியாய் நிற்கும் தாமத குணத்தினை இது உணர்த்தும். இத் தாமதகுணமும் இறைவ னுக்குக் கீழ்ப்படிந்து அடங்கிக்கிடக்கும். ஆதலால், இஃது இறைவனது படுக்கையாக அமைந்துள்ளது.

105. பாற்கடல் எதை உணர்த்துகின்றது?

பால் பரிசுத்தமானது. களங்கமற்ற பளிங்கு போன்ற வெள்ளை நிறமுடையது. இவ்வாறு பரி சுத்தமான இடங்களே இறைவன் அமர்ந்து அருள் புரிவதற்கு ஏற்ற இடங்கள் என்பதை இது குறிக் கும்.

அன்றியும், மற்றைக் கடல்களெல்லாம் சதா ஆடிக்கொண்டிருக்க, பாற்கடல் மட்டும் சலனமற் றிருக்கிறது. சாந்தத்தைக் குறிக்கும் சலனமற்ற

தன்மையையுடைய இப்பாற்கடலில், பரமன் படுத்திருக்கும் தன்மை, சஞ்சலமற்ற சாந்தமுடையவரது உள்ளத்தில்தான் இறைவன் தோன்றுவான் என்பதை உணர்த்துகின்றது.

மேலும், ஆண்டவனது திருவருள் பாலமுத மயமாகப் பொங்கித் ததும்பிப் பூரணமாய் ஏக உருவாய்க் கிடப்பதையும், உயிர்கள் அதனை யடைந்து பரமானந்தத்தை அனுபவிக்க வேண்டியதையும் இது குறிக்கின்றது.

பரவெளியில் பரமன் பரந்து விளங்குகின்ருன் என்ற தத்துவத்தை யொட்டிப் பார்க்கும்பொழுது பாற்கடல் பரவெளியாகின்றது எனவுங் கூறுவர்.

---

13. முருகன்

106. 'முருகன்' என்ற பதத்தின் பொருள் யாது?

முருகன் என்பதற்கு முருகினை யுடையவன் என்பது பொருள். முருகு என்பதற்கு அழகு, இளமை, மணம், தேன், கடவுட்டன்மை என்பன பொருள்களாம். ஆகவே 'முருகன்' என்ற பதம், என்றும் அழியாத அழகினை உடையவன் என்றும், என்றும் மாருத இளமையினை உடையவன் என்றும், என்றும் நீங்காத நறுமணத்தினை யுடையவன்

என்றும், தேன்போன்று இனிக்கின்றவன் என்றும், பரிபூரண கடவுட்டன்மை நிறைந்துள்ளவன் என்றும் பொருள்படுகின்றது. நம்முடைய அழகு, இளமை முதலியன என்றும் நிலைபெற்று நிற்பவை யல்ல. ஆனால் முருகன் றன் அழகு, இளமை முதலியனவோ என்றும் நிலைபெற்று நிற்பன.

107. முருகன் பரமசிவனுக்கு இடைக்காலத்திற் பிறந்த மகன்தானே? அவன் முழுமுதற் கடவுள் ஆவானா?

இக்கேள்விக்கு முருகனது திருவவதாரத்தைக் கூறும் கந்தபுராணமே தக்கவிடை கூறுகின்றது. சூரபதுமன் முதலிய அசுரர்களின் கொடுமைகளைப் பொறுக்கமுடியாத தேவர்கள் சிவபிரானிடம் சென்று,

"ஆதியும்நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும்
ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்புமின்றி
வேதமும் கடந்துநின்ற விமல! ஓர் குமரன் தன்னை
நீதரல் வேண்டும் நின்பால் நின்னையே நிகர்க்க"

என்றார். இப்பாட்டினை உற்றுநோக்குவோம். முழுமுதற் கடவுளின் இலக்கணங்களையெல்லாம் தேவர்களே எடுத்துக்கூறி, ஆதியற்ற குமரனை நின்பால் நீயே தரல்வேண்டும் என்கின்றனர். ஆகையால் தேவர்களுக்கும் சிவபெருமானே ஒரு குமரனைத் தோன்றவேண்டும் என்ற கருத்து இருந்ததாகத்

தெரிகிறது. சிவபெருமானே ஆறு முகங்களைக் கொண்டு ஆறு நெற்றிக் கண்களிலிருந்தும் ஆறு தீப்பொறிகள் தோற்றுவிக்க, அந்த ஆறும் சரவணம் சேர்ந்து அறுமுக ஒருவனுகத் திரு அவதாரமாயின என்றே நாம் அறிகிறோம். இவற்றி லிருந்து ஈசனே அறுமுகனுகத் தோன்றினன் என்பது வெளிப்படும். இக்கருத்தை வலியுறுத்தவே கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள்,

"ஈசனே அவனுடலால் மதலையாகினன் காண்
பேசில் ஆங்கவன் பரனொடு பேதகன் அல்லன்"

என்று கூறியுள்ளார்.

"செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்"

—கந்தரனுபூதி.

என்பதிலிருந்தும் முருகன் இடைக்காலத்தில் தோன்றியவனல்லன் என்பதும் முழுமுதற்கடவுளே முருகனுகத் தோன்றினன் என்பதும் விளங்கும்.

108, முருகனது திருவுருவத்தின் அமைப்பு யாது?

ஆறு முகங்கள், பன்னிரண்டு கரங்கள் அழகிய வடிவேல் இவற்றைக்கொண்டு, வள்ளி தெய்வானை என இரு சக்திகள் சமேதராக விளங்குவதே முருகனது உருவத்தோற்ற அமைப்பாம்.

109. முருகன் ஆறுமுகம் கொண்டதேன்?

பரமேஸ்வரனுக்குள்ள ஐந்து முகத்தோடு அதோ முகத்தினையுங்கொண்டு முருகன் அறு முகனாயினன். சிவத்துக்குரிய ஐந்து முகத்தினையும் சக்திக்குரிய ஒரு முகத்தினையும் கொண்டு அறு முகனாயினன் எனவும், நான்கு திசைகளையும் மேல் கீழிடங்களையும் நோக்கி அனைத்தையும் பரிபாலனஞ் செய்ய இறைவன் அறுமுகனாயினன் எனவுங் கூறுப.

110. இவர்தம் ஆறுமுகங்களுள் ஒவ்வொன்றும் செய்யும் தொழில்கள் யாவை?

"மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்; ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக்
காதலினுவந்து வரங்கொடுத்தன்றே; ஒருமுகம்
மந்திரவிதியின் மரபுளி வழாஅது
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே; ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே; ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே; ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே"

—திருமுருகாற்றுப்படை.

(அ) ஒரு முகமானது பெருமையாகிய இருளை யுடைய உலகம் குற்றமில்லாமல் விளங்கும்பொருட் டுப் பல கிரணங்களையும் தோற்றுவித்தது.

(ஆ) ஒரு முகமானது அன்பர்கள் துதித்தால் அவர்கள் குற்றங்களை நீக்குவதற்கு உடன்பட்டு அவர்களுக்கு இனிதாய் நடந்து அவர்கள்மேற் சென்ற விருப்பத்தினாலே மகிழ்ந்து அவர்கள் வேண்டும் வரங்களைக் கொடுத்தது.

(இ) ஒரு முகமானது மந்திரத்தையுடைய வேதத்திற் சொல்லிய முறைமை தவறாத பிராமணர்களுடைய யாகங்களிலே தீங்கு வாராதபடி நினையாநிற்கும்.

(ஈ) ஒரு முகமானது வேதாகமங்களிலே மறைந்துகிடக்கும் பொருள்களை இருடிகள் இன்பம் பொருந்தும்படி ஆராய்ந்து போதித்துச் சந்திரனைப் போலத் திசைகளெல்லாவற்றையும் விளக்கும்.

(உ) ஒரு முகமானது திருவுள்ளத்திலே நிகழாநின்ற சமத்துவத்தை ஒழித்துக் கோபங்கொண்ட திருவுள்ளத்துடனே பகைவராகிய அசுரர்களை வதைத்துப் போர்க்களவேள்வியை வேட்டது.

(ஊ) ஒரு முகமானது வேடருடைய மடப்பத்தையுடைய மகளும் கொடிபோலும் இடையினையுடைய இளம் பெண்ணுமாகிய வள்ளிநாயகியுடனே மகிழ்ச்சியைப் பொருந்திற்று.

இவ்வாறு இவ்வறுமுகங்களும் அவ்வம் முகங்களுக்கேற்ப ஒவ்வோர் தொழிலினைக்கொண்டு விளங்கும்,

111. பன்னிருகரங்கள் செய்யும் தொழில்கள் யாவை ?

ஒருகை தேவர்களையும் ரிஷிகளையும் பாது காக்க அமைந்தது. அதற்கிணையான ஒருகை மருங்கிலே கிடந்தது. மூன்றாவது கை அங்குசத் தைச் செலுத்துகின்றது; அதற்கிணையான கை ஆடை உடுத்திய தொடையில் கிடக்கின்றது. ஐந்தா வதும் ஆறாவதுமாகிய கைகள் அழகிய பெரிய பரிசையொடு வேலாயுதத்தை வலமாகச் சுழற்று கின்றன. ஏழாவது கை முனிவர்களுக்கு உரை யிறந்த பொருளை உணர்த்த மார்போடு சேர்ந்து விளங்க, எட்டாவது கை மார்பில் தாழ்ந்து தொங் கும் மாலையுடனே சேர்ந்து விளங்குகிறது. ஒன்ப தாவது கை வளைகளுடனே மேலே சுழன்று கள வேள்வியை வேட்கும் முத்திரை கொடுக்கின்றது, இதற்கிணையான கை மணியை மாறி ஒலிக்கப் பண்ணுகின்றது. பதினொன்றாவது கை மழையைப் பெய்விக்கின்றது. அதற்கு இணையான மற்றொரு கை தெய்வப் பெண்களுக்கு மணமாலை சூட்டு கின்றது.

112. வள்ளி, தெய்வயானை வடிவேல் இவை எவற்றை உணர்த்துகின்றன ?

இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்ப வற்றை உணர்த்துகின்றன.

113. இவர் சூரசங்காரம் செய்தது ஏன்?

இறைவனது கருணை, அறக்கருணை மறக்கருணை என இருவகைப்படும். நல்லவர்களை அறக்கருணையாலும் பொல்லாதவர்களை மறக்கருணையாலும் இறைவன் ஆட்கொள்ளுகின்றான். சூரன் தான் பெற்ற வரத்தால் நன்மக்களுக்கும் தேவர்களுக்கும் துன்பம் பல செய்தான். அவன் மேலும் இவ்வுடலோடு நீண்டகாலம் இவ்வுலகில் தங்கினால் பலப்பல பாவச்செயல்களைச் செய்து மீளா நரகத்திற்கு ஆளாவான் என்பதனையும், தவத்தால் வரம் பல பெற்ற இவன் பெரும்பாவியாகிவிடக்கூடாது என்பதனையும் கருணையால் நினைந்து, இறைவன் குமரநாயகனாகத் தோன்றி வேலாயுதத்தால் அவனது உடலினை இருகூறாக்கி, அவற்றுள் ஒன்றினை மயில்வாகனமாகவும் மற்றொன்றினைச் சேவற்கொடியாகவும் தன்னோடு சேர்த்துக்கொண்டான். இதனை விளக்கவே, திருவிழாக்களில் சூரசங்காரம் முடிந்தவுடன் முருகனை மயில்வாகனத்தில் ஏற்றுகின்றார்கள். அப்பொழுது அவனுக்குச் சேவல் கொடியாகிறது. இதிலிருந்து முருகன் சூரனைக் கொல்லவில்லையென்பதும், மறக்கருணையால் ஆட்கொண்டான் என்பதும் நன்கு விளங்குகின்றன.

114. கடவுள் உயிர்களிடத்து அன்பின்றி உயிர்க்கொலை செய்வது ஏன்?

பெற்றோர் தம் பிள்ளைகளிடம் நோய் ஒன்று கண்டால் தாமே அந்நோயினை மாற்ற வேண்டிய

தைச் செய்கின்ருர்கள். கத்தியால் அறுத்தும் சுட்டும் கடுந்துன்பம் செய்வித்தும் அதனைப் போக்குகின்ருர்கள். இச்செயல் அவர்களுக்குப் பிள்ளைகளிடமிருக்கும் அன்பினைக் காட்டுகிறதா? பகைமையைக் காட்டுகிறதா? அன்பினையல்லவோ காட்டுகின்றது; அதுபோல நம்மிடம் பற்றிய பாவங்களைத் தீர்ப்பதற்குப் பரமன், கருணையாலேயே இவைபோல்வனவற்றைச் செய்கிருன். இதனை,

"தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தஞ்சொலாற்றின்
வந்திடாவிடில் உறுக்கி வளாரினல் அடித்துத் தீய
பந்தமும் இடுவரெல்லாம் பார்த்திடிற் பரிவேயாகும்
இந்தநீர் முறைமையன்றோ ஈசனர் முனிவுமென்றும்"

எனவரும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தினுலும் அறிக.

115. சூரசம்ஹாரத்தின் தத்துவம் யாது?

சூரன் ஆணவமலம் நிறைந்த ஓர் உயிர். ஆணவமலம் முதிர்ந்த உயிர் ஒருபோதும் இறைவனைக் காணுது. அம் முனைப்பு ஒடுங்கியபோது அஃது இறைவனைக் காணும். ஆணவமலம் நிலைநிற்கும் காலம்வரை அது பிறந்து இறந்து பேதமையுற்றுத் தவிக்கும்; ஆதலால் அம்முனைப்பாம் அரக்கனைக் கொன்றுலல்லது உயிருக்குப் பிணி மூப்புச் சாக்காடொழித்து இறைவனேடு ஒன்றி வாழ இயலாது. அவ்வாறு ஆணவமலத்தைப் போக்கும் ஆற்றலுடையவன் இறைவனே. அவன்

உயிர்களிடத்துக் கொண்ட கருணையால், ஆணவ மலமாகிய சூரனது ஸ்தூல உடம்பைக் கொன்று ஆணவமலம் நீங்கின அநாதித் தன்மையுள்ள ஆத்மாவாகிய அவனது உயிரினைத் தன்னோடு சேர்த்துக்கொள்ளுகின்றான் என்பது தத்துவம்.

116. வள்ளி திருமணத்தின் தத்துவம் யாது?

சிவஞானபோதம் எட்டாம் சூத்திரத்திற் கூறிய வாறு உயிர் தன்னியல்பறியாது கருவிகளின் இயல்பே தன்னியல்பென மயங்கி உணர்வற்றுக் கிடக்கும்பொழுது, இறைவன் தோன்றி உணர் வினை நல்கி, உபதேசித்துத் தன்னோடு இரண்டறச் சேர்த்துக் கொள்ளுவன் என்பதே இதன் தத் துவமாம்.

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு,
அன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே"

—சிவஞானபோதம்

117. பராசக்தியாகிய வள்ளிநாயகி தினைப் புனங்காப்பது எதனைக் குறிக்கின்றது?

உயிர் தன்னியல்பறியாது, வேடர் சேரியில் வளரும் அரசகுமாரனைப் போலக் கருவிகளால் மயங்கி நிற்கும் என்பதைக் குறிக்கின்றது.

118. இறைவன் வேடனாய்வந்ததும்; வேங்கை மரமானதும் எவற்றை உணர்த்துகின்றன?

இவ்வாறு மயங்கிக் கிடக்கும் உயிரினது இயல்பை இறைவனே எழுந்தருளி உணர்த்துகின்றான் என்பதை இவை விளக்குகின்றன. வேடனாய் வந்து அஞ்ஞானத்தினைப் போக்கியும், ஞான உணர்ச்சிக்குரிய அவாவினை எழுப்பியும், அடிமுதல் மறைகளாகவும், நடுப்பாகம் சிவநூல்களாகவும், கிளைகளனைத்தும் கலைகளாகவும் உடைய வேங்கைமரத் தோற்றத்தால் ஞானத்தினை நல்கியும் அருள் செய்கின்றான் என்க.

119. முருகன் கிழவனாய்த் தோன்றியதேன்?

இறைவன் உயிர்களுக்குக் குருவாகவும் எழுந்தருளித் தீக்ஷை கொடுத்து மலத்தினை அகற்றுவான் என்பதை இஃது உணர்த்துகின்றது.

120. முருகன் யானையை வரவழைத்ததேன்?

இறைவனே குருவாய்த்தோன்றி உபதேசமும் கொடுப்பான் என்பதை இஃது உணர்த்தும். யானை இறைவனது ஓங்காரப் பிரணவ சொரூபமாகும்.

121. யானையைக் கண்ட வள்ளிநாயகி முருகனைப் பற்றிக்கொண்டது எதனை உணர்த்தும்?

தன் சிறப்பியல்புணர்ந்து உபதேசம் பெற்ற உயிர், கருவிகளை நீங்கிச் சிவத்தை நாடிச் சென்றடையும் என்பதை உணர்த்துகின்றது.

122. வள்ளிநாயகி முருகனது மனைவியானது எதனை உணர்த்தும்?

இறைவனை உணர்ந்து அவனது அன்பிற்குப் பாத்திரமான உயிர் அவனோடு இரண்டறக்கலக்கும் என்பதை உணர்த்தும்.

123. முருகன் வீற்றிருந்தருளும் விசேடத் திருத்தலங்கள் யாவை?

திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம் அல்லது குமாரகோவில், குன்றுதோறாடல், பழமுதிர் சோலை என்ற ஆறு படைவீடுகளுமாம்.

124. முருகனுடைய மறுபெயர்கள் எவை?

இவருக்குக் 'குகன்' என்ற ஒரு பெயருண்டு. இப் பெயர் மலைக்குகையில் வசிப்பவன் என்று பொருள்படினும் அன்பர்களது உள்ளமாகிய குகைகளில் உறைபவன் எனவும் பொருள்படும். "சுப்பிரமணியன்" என்ற பெயர் சுத்தப் பிரமத்தினின்றும் தோன்றிய மணி போன்றவன் என்று பொருள்படும். "குமாரன்" என்ற பெயர் அழகில் மன்மதனை

ஜயித்தவன் எனப் பொருள்படும். "கந்தன்" என்ற பெயர் உமாதேவியாரால் சேர்க்கப்பட்டவன் என்றும், நறுமணத்தினை யுடையவனும் நமக்குத் தருபவனும் இருக்கின்றான் என்றும் பொருள் படும். "சச்சிதானந்தன்" என்ற பெயர் சத்தும் சித்தும் சேர்ந்தவழிப் பிறக்கும் ஆனந்தத்தினை நிகர்த்தவன் என்று பொருள்படும். இவருக்கு வேலாயுதன், ஷண்முகன்முதலிய வேறு பல பெயர் களும் உண்டு.

இத்தகைய பெருமை வாய்ந்த கலியுக வரதனும் கந்தக் கடவுளின் கழலிணைபோற்றிக் கடைத்தேறு வோமாக.

---

14. ஆன்மாக்கள்

125. ஆன்மாக்கள் இயல்பு என்ன?

எல்லாம் வல்ல இறைவனால் படைப்பிக்கப்பட்டு ஓர்உடம்போடுகூடித் தாம்செய்த வினைகளுக்கேற்ப அநுபவம் உடையவராய், சிற்றறிவினால் சிற்றின் பங்களை நுகர்பவராய், தமக்கொரு கடவுளை உடைய வராய் இருக்கும் உயிர்களே ஆன்மாக்களாவர்.

126. ஆன்மாக்கள் எடுக்கும் உடம்பு எத்தனை?

ஸ்தூல உடம்பு ஸூக்ஷ்ம உடம்பு என இரண் டாகும்.

127. ஸ்தூல உடம்பாவது யாது?

பஞ்சபூதங்கள் கூடிப் பரிணமித்த உடம்பாம்.

128. ஸூக்ஷ்ம உடம்பாவது யாது?

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தும் மனம், புத்தி, அகங்காரம் என்ற மூன்றும் சேர்ந்து ஆன்மாக்கள் உலக போகங்களை அநுபவிப்பதற்குக் கருவியாய் நின்று மரணகாலத்தில் ஸ்தூல உடம்பை விட்டுப் பிரியும் அரூப உடம்புக்கு ஸூக்ஷ்ம உடம்பு என்று பெயர்.

129. உயிர்களின் தோற்றவகையாவை ?

முட்டையிலே பிறக்கும் அண்டஜம்; வியர்வையிலே பிறக்கும் சுவேதஜம்; வித்து, வேர், தடி, கொடி, கிழங்கு இவற்றில் பிறக்கும் உத்பிஜம்; கருப்பையிலே பிறக்கும் சராயுஜம் என்ற நான்குமாம்.

130. மரணத்தின் பின்னுள்ள மனிதர் நிலை யாது?

நல்வினை செய்த உயிர்கள் தூலதேகம் கழிந்த பின் தெய்வீக உடம்போடு உயர்த்தப்படுகின்றன; அவை மேல் உலகங்களிலே சென்று இன்பம் அனுபவிக்கின்றன. பாவம் செய்த உயிர்கள் பாவ சரீரத்தோடு தாழ்த்தப்பட்டு நரகம்முதலிய கீழ் உலகங்களிற் சென்று துன்பத்தை அடைகின்றன.

131. சுவர்க்க நரகங்களுக்குச் சென்ற உயிர்கள் என்ன செய்கின்றன?

சுவர்க்கத்திற்குச் சென்ற உயிர்கள் தாம் செய்த நல்வினைக்குத்தக்க இன்பம் அநுபவித்துத் திரும்பவும் உலகத்திற்கு வந்து உயர்ந்த பிறவிகளை யெடுத்து வாழ்கின்றன.

நரகத்திற்குச் சென்ற உயிர்கள் தாம் செய்த தீவினைக்குத்தக்க துன்பம் அநுபவித்துத் திரும்பவும் உலகிற்கு வந்து இழிந்த பிறப்புக்கள் எடுக்கின்றன.

பாவபுண்ணியங்களற்று முத்தியைப்பெறும் உயிர்களும் உள்ளன.

132. எழுவகைப் பிறப்புக்கள் யாவை?

தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பவையாம்.

133. மனிதப்பிறப்பின் மாட்சி யாது?

உண்பதாலும், உறங்குவதாலும், மக்களைப் பெறுவதாலும், பேசுவதாலும், பகுத்தறிவுடைமையாலும் மனிதப்பிறவி மாட்சியுடையதாகாது; ஏனெனில், இவை மற்றைய பிறவிகளுக்கும் இருக்கின்றன. பின், மனிதஜன்மம் எக்காரணம்பற்றி மாட்சிமையுடையது எனின்:— சரியை, கிரியை,

யோகம், ஞானமாகிய மார்க்கங்களால்* இறைவனை யுணர்ந்து வழிபட்டு மோட்சத்தை அடைதற்குரிய இறைஞானம் மனிதர்க்குக் கிடைத்ததுபோல் மற்றவற்றிற்குக் கிடைக்கவில்லையாகையால் மனித ஜன்மமே எல்லாப் பிறவிகளிலும் மாட்சிமை யுடையதாயிற்று. ஆதலால் மனிதராய்ப் பிறந்த எவரும் மோட்ச மார்க்கத்திற்குரிய நெறிகளைக் கடைப்பிடித்து ஒழுகுதற்குரியர்; இலரேல், விலங்கு கள் முதலிய உயிர்களிலிருந்து இவர் சிறிதும் வேற் றுமையுடையர் அல்லர் என்பது விளங்கும்.

சரியையாதிகளுக்கு அடிப்படையாகிய நித்திய கருமங்களை அடுத்தபடியாக ஆராய்வாம்.

---

15. நித்தியகருமங்கள்

134. இந்துக்கள் விதிப்படி எப்பொழுது தூங்கி எழுதல்வேண்டும் ?

விடிவதற்கு ஐந்து நாழிகைக்கு முன் எழுந் திருப்பது நலம். இரண்டரை நாழிகைக்கு முன் ஞவது எழுந்திருக்கவேண்டும்.

135. காலையில் எழுந்தவுடன் செய்யவேண்டு வன யாவை ?

---

* சரியை, கிரியை, யோக, ஞானங்களை ஐந்தாம்பாடத்திற் கண்டுகொள்க.

முகங்கழுவி, வடக்குத் திசையையாவது கிழக்குத் திசையையாவது பார்த்திருந்து விபூதி தரித்து, காலை ஜபஞ்செய்து, தோத்திரப் பாடல்கள் பாடி இறைவணக்கஞ் செய்தல் வேண்டும்.

136. நித்திய கருமத்தில் முக்கியமானவை எவை?

மலங்கழித்தல், கால்கழுவுதல், பல்தேய்த்தல், குளித்தல், சுத்த ஆடைஉடுத்தல், ஆலயம் செல்லுதல், உணவு உண்ணுதல், மாலைஜபம், உறக்கம் என்பனவாம்.

137. மலங் கழித்தலில் கவனிக்க வேண்டியவை எவை?

(அ) காலை மாலைகளில் மலங்கழிக்கும் வழக்கத்தினைக் கைக்கொள்ளல்வேண்டும்.

(ஆ) மலங்கழிக்கும் இடம் ஊருக்கும் கோயில்களுக்கும் அப்பாற்பட்டதும், விசாலமானதும், ஈரமில்லாததுமாயிருத்தல்வேண்டும்.

(இ) லகிரி உபயோகித்தால் மாத்திரமே மலங் கழியும் என்ற வழக்கத்தினை வைத்துக்கொள்ளுதல் கூடாது.

138. கால்கழுவுதலில் கவனிக்க வேண்டியவை எவை?

(அ) மலங்கழித்தவுடன் காலலம்புதல் வேண்டும். கால் கழுவக் காலதாமதமாதல் கூடாது.

(ஆ) முட்டளவு தண்ணீரில் இறங்கியிருந்து பலமுறை தேய்த்துக் கழுவி, இரண்டு கைகளையும் குதத்தினையும் மணலால் தேய்த்துச் சுத்தம் செய்ய வேண்டும். முகங்கழுவி வாய் கொப்புளித்துக் கொள்ளவேண்டும்.

(இ) தண்ணீரால் கழுவாமல் காகிதம், ஓலை, இலை, வைக்கோல் இவற்றினால் எவ்வளவு தூரம் துடைத்தாலும் சுத்தமாகாது. ஆதலால், தண்ணீரால் சுத்தம் செய்து மணலால் தேய்த்துக் கழுவுதலே சுத்தமாம்.

139. பல்தேய்த்தலில் கவனிக்கவேண்டியவை எவை?

வாய்கழுவி, மிளகு உப்பு முதலியவை கலந்த உமிக் கரியாலோ, பற்பொடியாலோ, ஆல் வேல் முதலியவற்றின் குச்சிகளாலோ, நாயுருவிவேர் முதலியவற்றாலோ நன்றாய் உள்ளும் புறமும் அழுக்குப்போகத் தேய்த்தபின் ஈர்க்கினால் நன்றாய் நாக்கு வழித்தல்வேண்டும். பலமுறை தண்ணீரால் கொப்புளித்து முகம் கைகால் நெஞ்சு முதலியவற்றைக் கழுவுதல் வேண்டும்.

140. ஸ்நானம் எத்தனை வகைப்படும்?

குளிர்ந்த நீரில் குளித்தல், எண்ணெய் ஸ்நானம் செய்தல், வெந்நீரில் குளித்தல், கடல்நீராடல் என்பனவாம்.

141. எப்போதெல்லாம் குளிக்கவேண்டும்?

தினமும் காலையிலும், ஆலயத்திற்குப் போகும் போதும், இறந்த வீட்டுக்குச் சென்றாலும், கிரஹணம் விட்ட உடனும், அசுத்த வேலைகளைச் செய்த பின்னரும், போகங்கழிந்த இரவு புலர்ந்தவுடனும், பெண்கள் தீண்டலானால் மூன்றும்நாளும் நாலாம் நாளும், மற்று எவ்வித அசுத்தங்களும், புலைகளும் தன்னைப் பாதிக்கிறபோதும் கட்டாயம் நீராடல் வேண்டும்.

142. நீராடும்போது கவனிக்கவேண்டியவை எவை?

(அ) கோவணம், ஆடை இவையில்லாமல் நீராடுதல்கூடாது.

(ஆ) தலையிலோ, உடலிலோ எண்ணெய் தேய்த்துக்கொண்டால் குளிக்கும்போது அதைச் சீயக்காய், அரைப்பு, பயறு முதலியவற்றுள் எதைத் தேய்த்தாவது சுத்தம் செய்துவிடவேண்டும்.

(இ) எண்ணெய் தேய்க்காது போனாலும் பயறு, ஈஞ்சை, நல்ல துணி முதலியவற்றுள் எதை

யாவது கொண்டு உடலை நன்றாய்த் தேய்த்து வியர்வைநாற்றம் முதலியன போகும்படி குளித்தல் வேண்டும்.

(ஈ) உடுத்திருந்த ஆடையை அவிழ்த்துவைத்துக்கொண்டு, நிர்வாணத்துடனே, கோவணத்துடன் மாத்திரமோ குளித்தல்கூடாது.

(உ) உடுத்திருந்த ஆடைகளைத் தண்ணீரில் நனைத்துத் துவைத்துக் கட்டிக்கொள்ளல்வேண்டும்.

(ஊ) உடலை நனைக்காமல் தண்ணீர்க் கரைகளில் நின்றுகொண்டு தலையை மாத்திரம் நனைத்தலும், தலையை நனைக்காமல் உடம்பைமாத்திரம் கழுவுதலும் கூடாவாம்.

(எ) குளிக்கும் துறையில் மலம் கழுவுதல் கூடாது. அளவுக்குமிஞ்சி உமிக்கரி முதலியவற்றைக் கொண்டுவந்து கொஞ்சம் தேய்த்துவிட்டு, மீதியைக் குளிக்கும் தண்ணீரில் போட்டுவிடக் கூடாது. கரைகளில் வைத்துப் பல்தேய்த்து, எச்சில், கக்கல், ஈர்க்கோல் முதலியவற்றைக் கரையில் கழித்துவிட்டே தண்ணீரில் இறங்கல்வேண்டும்.

(ஏ) மனிதர் குளிக்குமிடங்களில் ஆடுமாடு நாய் முதலிய பிராணிகளைக் குளிப்பாட்டக்கூடாது.

(ஐ) தீர்த்தம், குளத்துறை, சிறிய தடாகம் முதலியவற்றில் நீந்தலும், நீரைக்கலக்குதலும்,

சாடுதலும், உமிழ்தலும், சோப்பு முதலியவற்றைத் தேய்த்தலும் கூடாவாம்.

(ஒ) குளிக்கும் நீரைக் கங்கை, யமுனை முதலிய புண்ணிய நதிகளாகவும், இராமேசுவரம், கன்னியாகுமரி முதலிய புண்ணிய ஸ்தலங்களின் தீர்த்தங்களாகவும் நினைத்து, ஈசுவரத் தியானத்தோடு குளித்தல்வேண்டும்.

(ஓ) வாரம் ஒருமுறை எண்ணெய் தேய்த்துக் குளித்தல்வேண்டும். எண்ணெய் ஸ்நானம் வெந்நீரில் செய்வது நலம். எண்ணெய் நன்றாய்ப் போகும்படி சீயக்காய் தேய்த்துக் குளித்தல்வேண்டும். குளித்த பிறகு தலையில் எண்ணெய் தேய்க்கலாகாது.

(ஔ) அமாவாசை, பௌர்ணமி நாட்களில் கடல் நீராடுவது நலம். கடல்நீரை நமது பாவத்தைக் கழுவும் பரிசுத்த நீராகவும், ஆண்டவனது அருள் நீராகவும் நினைந்து, அதில் தன் மனைவிமக்களைக் கைகோத்துப் பிடித்துக்கொண்டு, கடவுள் தியானத்துடனும், காலம்சென்ற தன் பிதிரர்களை எண்ணியும், அவர்களது பாவத்தைப்போக்கி முத்திகொடுக்கும்படி கடவுளிடம் வேண்டியும் முழுகல்வேண்டும்.

அமாவாசை பௌர்ணமி நாட்களிற் கடலின் நிலையும் நமது உடலின் நிலையும் மாற்றம் அடைவதால் உடல் நலத்தின் பொருட்டும் கடல் நீராடல் இன்றியமையாதது. கடல் நீராட்டால் அநேக உள்ரோகங்களும் புறரோகங்களும் ஒழிகின்றன;

ஆதலால் கடல் நீராட்டு மிகப் பயனுடையதாகும். கன்னியாகுமரியில் பரத கண்டத்தின் கிழக்கு தெற்கு மேற்காகிய மூன்று புறங்களிலும் உள்ள கடல்களும் ஒருங்கு கூடுவதால் இவ்விடம் கடலாட்டுக்குச் சிறந்த இடமாகும்.

(க) கடல்நீராடுவதற்குமுன் சுத்தநீரில் குளித்திருப்பது நலம்.

(கா) குளித்து முடிந்ததும் தலை, உடல், இடைப்பாகங்கள் இவற்றைச் சுத்தமான துணியினல் நன்ருய்த் துடைத்துப் பின்னர் விபூதியணிந்து கடவுளை வணங்கி ஒருசிறிது நீர் உட்கொண்டு தலையை வெயிலில் உலர்த்தவேண்டும்.

(கி) நோயாளிகள் வெந்நீரில் குளித்தல்வேண்டும். அதுவும் கூடாதாயின் நல்ல சுத்தமான துணியை வெந்நீரில் நனைத்துப் பிழிந்து உடம்பை நன்ருய்த் துடைத்துக்கொண்டு திருநீறு பூசுதல் வேண்டும்.

143. இவ்வாறு நீராடுவதால் எய்தும் பலன்கள் யாவை?

நீராடுவதால் சரீரம் சுத்தம் அடைவதுமட்டுமன்றிச் சரீரத்திற்கு ஆரோக்கியமும் உண்டாகிறது; உற்சாகம் அதிகமாகிறது; மனம் பரிசுத்தமாவதற்கும், ஒருமைப்படுவதற்கும், இந்திரிய அடக்

கத்திற்கும் உதவுகிறது; பல நோய்கள் நீங்குகின்றன; பசியுண்டாகிறது.

144. சுத்த ஆடை என்பது யாது?

தண்ணீரில் தோய்த்துலர்ந்த ஆடையே சுத்த ஆடையாகும். இரவில் தூங்கும்போது தரித்திருந்த ஆடை அசுத்த ஆடையாகும். அதைத் தோய்த்து உலர்த்தி உடுத்தல் வேண்டும். ஆலய தரிசனம் செய்யப்போகின்றவர்கள் இவ்வாறு துணிகளைத் தண்ணீரில் தோய்த்தே உலர்த்தி உடுத்திக்கொண்டு செல்லல்வேண்டும். நல்ல பட்டாடைகளைக் கோயில் உபயோகத்திற்கு மாத்திரம் பயன்படுத்தி வந்தால் அவற்றைத் தண்ணீரில் தோய்த்துலர்த்த வேண்டும் என்ற அவசியமில்லை.

145. எங்ஙனம் சயனித்தல் வேண்டும்?

சயனத்திற்கு முன் வடதிசை நோக்கியிருந்து வழிபடு கடவுளை வணங்கி, வடக்கொழிந்த திசைகளில் தலைவைத்து வலக்கை மேலாகச் சயனித்தல் வேண்டும். இரவிலே காலம் பெறச் சயனித்து, விடிய ஐந்து நாழிகைக்குள் எழுந்திருப்பது நலம்.

146. இந்துக்கள் உணவுகொள்ளும் முறை யாது?

குளிக்காமலோ, கால் கை முகங்களைக் கழுவாமலோ உணவு உண்ணுதல் கூடாது. உணவுப்

பொருள்கள் பரிசுத்தம் உள்ளவையாயிருக்கவேண்டும். கோயிலுக்குப் போகும்போது மீன், மாமிசம், முட்டை முதலிய புலால்களை உண்ணக்கூடாது. தரையில் பலகை அல்லது தடுக்கின்மேல் வடக்குத் திசை யொழிந்த மற்றத்திசைகளைப்பார்த்து உட்கார்ந்து போஜன பதார்த்தங்களைக் கடவுளுக்கு நிவேதனப் பொருளாக நிவேதித்து உண்ணல் வேண்டும். இலைகளில் உண்பது நலம். புசித்தபின் வெந்நீரேனும் தண்ணீரேனும் பானம் பண்ணல் வேண்டும். போஜனம் முடிந்ததும் வாய், கை, கால் முதலியவற்றை நன்ருய் அலம்பிக்கொள்ளவேண்டும். போஜனம் பண்ணிய இடத்தையும் சாணம் தெளித்துத் தேய்க்கவேண்டும்.

> "புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை
> வாய்மையாற் காணப் படும்."
>
> —திருக்குறள்.

இதுகாறும் கூறியவாற்ருல் ஒவ்வொரு இந்துவும் மேற்கூறிய நித்திய கருமங்களை எந்நாளும் நன்ருய் அனுஷ்டித்து, காலை மாலைகளில் கடவுளை வணங்கி, ஆலயங்களிலும் சென்று ஆண்டவனைப் பிரார்த்தித்துவரல் வேண்டும் என்பது தெரிகிறது.

---

16. சமயச்சின்னங்கள்

147. இந்துக்கள் மத அடையாளமாக உடலில் அணிந்து கொள்ளுகின்றவை எவை?

விபூதி, சந்தனம், உருத்திராக்ஷம், நாமம் முதலியனவாம்.

விபூதி

148. விபூதி என்பது யாது?

புல்வெளியில் மேய்ந்த இளம் பசுவின் சாணத்தை அக்கினியால் நீற்றி எடுக்கும் பொடியே விபூதியாம்.

149. விபூதியை வைத்துக்கொள்வதெப்படி?

புதுத்துணியால் வடிகட்டி மணமுள்ள புஷ்பங்களை இட்டு, புதுப்பானைகளில் வைத்துக்கொண்டு அவசியத்திற்குத் தக்கபடி பட்டுப்பையிலாவது சம்புடத்திலாவது எடுத்து வைத்துக்கொள்ளல் வேண்டும்.

150. விபூதி யணிவதின் அவசியமென்ன?

அசுத்தங்களைச் சாணம் அகற்றுவது யாவரும் கண்டறிந்த உண்மை. அதுபோலவே நமது உடலிலுள்ள அசுத்தங்களை அகற்றவும் சாணத்திலிருந்து தயாரிக்கப்படும் விபூதி மிகவும் அவசியமானதாகும். சிரசிலுள்ள நீர்த்தோஷம், தலைவலி முதலியவற்றை அகற்றவும் இது பயன்படுகிறது.

அன்றியும் இத்திருநீறு "முடிவில் யாவரும் பிடி சாம்பராவர்" என்ற உண்மையை நமக்கு

உணர்த்தி, "நீயும் இத்தகைய நீருய்ச் சிறிது காலத்துக்குள் முடிவாய். ஆதலால் உன் வாழ்க்கை தூய்மையுடனும் இறைவன்மீது உற்ற பற்றுடனும் இருத்தல்வேண்டும்" என நம்மை எச்சரிக்கின்றது. பசுவின் மலம் நீருகிய பின்னரே ஜீவன் சிவனுகிறுன் என்ற தத்துவத்தையும் இது வெளிப்படுத்துகிறது. எனவே, விபூதி மத சம்பந்தமாகவும், ஆரோக்கிய சம்பந்தமாகவும் பயன்படுதலின் நமக்கு இது இன்றியமையாததாகும்.

151. விபூதியைத் தரிப்பதெப்படி?

வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாக வேனும் நின்று பூமியில் விபூதி சிந்தாதபடி மூன்று விரல்களால் எடுத்து அண்ணாந்து சிவசிவ என்று சொல்லி சிவனைத் தியானித்துப் பூசுதல்வேண்டும்.

152. எப்போதெல்லாம் விபூதி அணிதல் வேண்டும்?

காலை மாலைகளிலும், குளித்தவுடனும், பூஜைக்கு முன்னும், ஆலய வழிபாட்டிற்கு முன்னும், சாப்பாட்டிற்கு முன்னும் அணிதல் வேண்டும்.

153. விபூதியை நீரில் குழைத்துப் பூசுவது எங்ஙனம்?

சமய தீக்ஷை முறைப்படி விபூதி தரிப்பது தான் தகுதியுடையது. எனினும் தீக்ஷை

பெற்றுக்கொள்ளும்வரை விபூதியைத் தண்ணீரிலே குழைத்து,

"ஈசான மூர்த்தயே நம:" என்று சொல்லிச் சிரசிலும்,
"தத்புருஷ வக்த்ராய நம:" என்று சொல்லி நெற்றியிலும்,
"அகோர ஹிருதயாய நம:" என்று சொல்லி மார்பிலும்,
"வாமதேவ குஹ்யாய நம:" என்று சொல்லிக் கொப்பூழிலும்,
"ஸத்யோஜாத மூர்த்தயே நம:" என்று சொல்லி புஜங்களிலும், கை முட்டுகளிலும், மணிக்கட்டைகளிலும், இடுப்புகளிலும், கால் முட்டுகளிலும் தரித்துக்கொள்ளுதல் வேண்டும்.

154. விபூதி பூசியபின் யாது செய்தல்வேண்டும்?

தீக்ஷை பெற்றவர்கள் குரு உபதேசித்தபடி ஸ்ரீபஞ்சாட்சர மந்திரத்தினைப் பலமுறை ஜபித்துக் கடவுளை, வணங்கல்வேண்டும்.

உருத்திராக்ஷம்

155. உருத்திராக்ஷம் என்ருல் என்ன?

சிவபெருமானது மூன்று திருக் கண்களிலிருந்தும் பொழிந்த நீரில் தோன்றியதாக எண்ணிச் சிவனடியார்கள் அணிந்துகொள்ளும் மணிக்கு உருத்திராக்ஷம் என்று பெயர்.

156. உருத்திராக்ஷத்தின் பெருமைகள் யாவை?

நல்ல உருத்திராக்ஷத்தை உரைத்துப் பார்த்தால் பசும் பொன்னின் மாற்றிருக்கக் காணலாம்.

இதனுள் மக்கள் உடலுக்கு நன்மை பயக்கும் சில பொருள்கள் இருக்கின்றனவென்றும், இதனை உரைத்து மருந்தோடு கலந்து குடித்தால் பல நன்மைகள் உண்டாகின்றன வென்றும், மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றார்கள். இவற்றிலிருந்து உருத்திராக்ஷம் உடலுக்கு பல நன்மை பயக்கின்றது என்று விளங்குகின்றது. உருத்திராக்ஷத்திற்பட்டு உடலிற் பாயும் நீர் மிகவும் புனிதமானது.

"இலங்குமாமணி உருத்திர அக்கம் ஒன்றணியில்
விலங்கெயிற்று வெம்பூதங்கள் முதலிய மேவா"

என்றபடி உருத்திராக்ஷம் அணிபவரைஎவ்வித உபாதிகளும் வந்தடையமாட்டா.

157. உருத்திராக்ஷத்தில் எத்தனைவகையுண்டு?

ஒரு முகமணி முதல் பதினறுமுகமணிவரையுண்டு. கழுத்தில் முப்பத்திரண்டு மணிகளை ஒருங்கு சேர்த்து மாலையாக அணியலாம். மார்பில் நூற்றெட்டுப் பொடி மணிகளை மாலையாகக் கோத்து ஜபத்திற்கும் பயன்படும்படி தரித்துக் கொள்ளலாம்.

158, சந்தனம் அணிவதேன்?

சந்தனம் மிகக் குளிர்ச்சியுடையதும் மணமுடையதுமாகும். அஃது உடலிலுள்ள வெப்பத்தை நீக்கித் தண்மையைத் தந்து உற்சாகத்தை

உண்டுபண்ணுகிறது. பல நரம்புகள் புருவ மத்தியில் ஒன்று கூடுவதால் அவைகட்கு வெப்பம் ஏற்படாதிருக்கக் குளிர்ச்சியுடைய சுகந்தத்திலகம் அணிதல்வேண்டும். பரமசிவனது நெற்றிக்கண்ணை நினைப்பூட்டுவதற்கும் அடியார்கள் திலகம் அணிந்து கொள்ளுகின்றனர்.

159. நாமம் அணிவதேன்?

நாமம் ஒருவகைத் திருமண்ணால் இடப்படுவது. எல்லாம் முடிவில் மண்ணாய்விடும் என்பதை இது உணர்த்துகின்றது. அன்றியும், இறைவனது திருவடியல்லாது உயிர்களுக்கு வேறு கதியில்லை என்பதை உணர்த்தத் திருமாலின் திருவடியின் சாயலாய்த் திருமாலடியார்கள் இதனை இடுகின்றார்கள்.

எனவே, இந்துமதச் சின்னங்களாகிய விபூதி, உருத்திராக்ஷம், சந்தனம், நாமம் முதலியவற்றில் எவற்றையேனும் இந்துக்கள் ஒவ்வொருவரும் அணிந்து இறைவன் திருவடிக்கு ஆளாகவேண்டும் என்பது பெறப்படும்.

---

17. ஒழுக்கமுடைமை.

160. இந்து மதத்தினர் கைக்கொண்டொழுக வேண்டிய நல்லொழுக்கங்கள் எவை?

வாய்மை, கொல்லாமை, களவு செய்யாமை, கள் குடியாமை, விபசாரம் செய்யாமை, இனியவை

கூறல், செய்நன்றி யறிதல், பொறையுடைமை, புறங்கூருமை' முதலியவையாம், இவற்றின் விரிவைத் திருக்குறள் முதலிய நீதிநூற்களிற் காண்க.

161. தீயவொழுக்கத்தால் எய்தும் தீமைகள் யாவை?

உயிர்கள் தீயவொழுக்கத்தால் பாவிகளாகி நரகத் துன்பங்களை அனுபவித்து மேலும் மேலும் பல இழிந்த பிறப்புக்களை எடுத்துத் துன்புறுமாகையால் தீயவொழுக்கம் தீயினும் அஞ்சத் தகுந்ததாகும்.

162. நல்லொழுக்கத்தின் அவசியம் யாது?

நீர் முதலியவற்ருல் புறச்சுத்தம் உண்டாகின்றதுபோல் நல்லொழுக்கங்களால் அகச்சுத்தம் உண்டாகின்றது. புறச்சுத்தமும் அகச்சுத்தமும் உடையவர்களே இறைவணக்கத்திற் குரியவராவர். இம்மூன்று தன்மையுமுடையவரே இறையருள் பெறுவர். ஆகையால் இம்மூன்றனுள்ளும் நடுநின்ற நல்லொழுக்கமுடைமை இன்றியமையாததாகும்.

எனவே எவ்வளவு புறச்சுத்தம் உடையவராயினும், எவ்வளவு சமயச்சின்னங்களை அணிந்தவராயினும் நல்லொழுக்கம் இல்லாதவராஞல் இறையருள் பெற முடியாதவராய் அழிவர் என்பது பெறப்படும்.

18. ஆலயபூஜை விளக்கம்,

163. பூஜை என்பதன் பொருள் என்ன?

பூஜை என்பதற்கு ஞானத்தை யுண்டாக்கக் கூடிய சாதனம் என்பது பொருள்.

164. பூஜை எத்தனை வகைப்படும்?

ஆன்மார்த்த பூஜை அல்லது தான் மாத்திரம் உய்வதற்காகச் செய்யும் பூஜை எனவும், பரார்த்த பூஜை அல்லது பிறர் உய்வதற்குச் செய்யும் பூஜை எனவும் இரு வகைப்படும்.

165. ஆன்மார்த்தமாவது யாது?

தீக்ஷை பெறுங் காலத்தில் குரு உபதேசப்படி தனது நன்மையைக் கருதிச் செய்துவரும் பூஜை யாம்.

166. பரார்த்தமாவது யாது?

பரார்த்தமாவது உலகினர் வணங்கிக் கடைத் தேறுவதற்காகத் தேவர்கள், ரிஷிகள், அரசர்கள் முதலியவர்களால் தாபிக்கப்பட்ட ஆலயங்களில் பூஜிப்பதாம்.

167. பூஜை செய்வதற்கு முன் செய்யவேண்டுவது யாது?

ஆன்மசுத்தி, ஸ்தானசுத்தி, திரவியசுத்தி, மந்திர சுத்தி, இலிங்கசுத்தி, ஆகிய பஞ்ச சுத்திகளையும் செய்தல் வேண்டும்.

168. இப்பஞ்சசுத்தியின் அவசியமென்ன?

இத்தகைய ஐந்துவிதச் சுத்திகளையும் செய்வது ஆணவம், கன்மம், மாயை, திரோதாயி, மாயேயம் என்ற ஐவகைப் பாசங்களைக் களைதல் என்னும் கருத்துப் பற்றியேயாம். இதனை,

"பஞ்சவித சுத்தியினைப் பண்ணிடுக பாங்காகப்
பஞ்சவித பாசமறப் பார்"

என்னும் சைவசமயநெறிச் செய்யுளாலறிக.

169. அபிஷேகப் பொருள்கள் எவை?

வடித்தெடுத்த நீர், வாசனைத் திரவியங்கள் கலந்த நீர், இளநீர், பன்னீர், எண்ணெய், பால், பஞ்சாமிருதம், விபூதி, சந்தனம், களபம், புஷ்பம் முதலியவையாம்.

170. அபிஷேகம் செய்யவேண்டிய அவசியம் என்ன?

இதன் உண்மை "அருளென்னும் புறவினையாட்டி" என்று காசி காண்டத்தில் கூறியபடி திருவருள் ஞானமே நீரெனப் பாவித்து அபிஷேகஞ் செய்யின் மலநிவாரணம் ஏற்படும் என்பதாம்.

"தம்மிற் சிவலிங்கங் கண்டதனைத் தாம் வணங்கித்
தம்மன்பால் மஞ்சனநீர் தாமாட்டி"

என்றபடி மருட்போதமே மலமாதலால் அம் மல வசுத்தத்தை அன்பெனும் அருள்நீர்கொண்டு சுத்தி செய்தல் என்னும் பாவனையாம்.

171. திருவுருவங்களுக்கு ஆடைகட்டுவது ஏன்?

திரோதான சக்தி நீங்குதல் என்னும் பாவனையாகும்.

172· பூஜையில் செய்யப்படும் உபசாரங்கள் யாவை?

பூஜையில் செய்யப்படும் உபசாரங்கள் பதினாறும். அவையாவன: ஆவாஹனம், தாபனம், சந்நிதானம், ஸந்நிரோதனம், அவகுண்டனும், தேனு முத்திரை, பாத்தியம், ஆசமநீயம். அருக்கியம், புஷ்பதானம், தூபம், தீபம், நைவேத்தியம், பாநீயம், ஜப சமர்ப்பணை, ஆராத்திரிகம் (தீபாராதனை) என்பனவாம்.

173. ஆவாஹனமாவது யாது?

பூஜையின் பொருட்டுக் கடவுளை மூல மந்திரத்தைச் சொல்லி வரவழைத்து அபிமுகமாகச் செய்தல் ஆவாஹனமாகும்.

174. தாபனமாவது யாது?

"தயாநிதியே! அடியேனை அநுக்ரகிப்பதற்காக விக்ரகத்தில் எழுந்தருளியிருக்கவேண்டும்" என்று அன்புடன் யாசிப்பது தாபனமாகும்.

175. ஸந்நிதானம் என்பது யாது?

பூஜிக்கப்படுபவனுகிய கடவுள், அநுக்ரகிக்கும் தன்மையையும், பூஜிக்கின்றவனுகிய தான் அநுக்ரகிக்கப்படும் தன்மையையும் உண்டுபண்ணுவதே ஸந்நிதானமாகும்.

176. ஸந்நிரோதனமாவது யாது?

"பகவானே! எப்போதும் என்னிடத்தில் அநுக்ரகத்தோடு இருக்கவேண்டும்" என்றுபிரார்த்திப்பதே ஸந்நிரோதனமாகும்.

177. அவகுண்டணமாவது யாது?

சிவலிங்கத்தைச் சுற்றிக் கவச மந்திரத்தினல் மூன்றகழ் உண்டானதாகப் பாவித்தல்.

178. தேனுமுத்திரை என்பது யாது?

கடவுளுக்கு முன்பாகப் பசுவின் மடிபோன்றதொரு முத்திரை காட்டுதலே தேனுமுத்திரையாகும்.

179. பாத்தியமாவது யாது?

மூல மந்திரத்தை 'நம:' என்னும் இறுதியை உடையதாக உச்சரித்து ஜலத்தைத் திருவடிகளிற் சமர்ப்பித்தலாம்.

180. ஆசமநீயம் என்பது யாது?

மூல மந்திரத்தை 'ஸ்வதா' என்னும் இறுதியை உடையதாக உச்சரித்து ஐந்து தடவை மும்மூன்று தரம் ஜலத்தைச் சமர்ப்பித்தலாம்.

181. அர்க்கியம் என்பது யாது?

மூலமந்திரத்தை உச்சரித்துக் கடவுளுடைய சிரங்களில் ஜலத்தைச் சமர்ப்பித்தலாம்.

182. புஷ்பதானம் என்பது யாது?

மூலமந்திரத்தை உச்சரித்துப் புஷ்பங்களைச் சாத்துதல் புஷ்பதானமாகும்.

183. தூபமாவது யாது?

கிரியாசக்தி ரூபமாகிய தூபத்தைச் சிவசந்நிதானத்திலிடுவது, ஆணவமலமாகிய அறியாமையைக் கிரியா சக்தியைக்கொண்டு நீக்குதல் எனும் குறிப்பினை உணர்த்துவதற்காகும்.

184. தீபமாவது யாது?

சிவபெருமானுக்குத் தீபம் சமர்ப்பித்தலின் கருத்து, சித்சக்தியாகிய தீபம் ஆன்மாவினது மலத்தைப் போக்கி ஞானத்தை விளக்குதல் என்பதாம்.

185. நைவேத்தியமாவது யாது?

ஆன்ம குணமாகிய அகங்காரம், சங்கற்பம், குரோதம், மோஹம் என்பவற்றையே அமுதாகச் சமர்ப்பித்தல் என்னும் பாவனையாகும்.

186. பாநீயம் என்பது யாது?

வாசனை பொருந்திய தீர்த்தத்தைக் கடவுளுடைய திருப்திக்காகச் சமர்ப்பிப்பது.

187. ஜப சமர்ப்பணம் என்பது யாது?

மூலமந்திரத்தை நூற்றெட்டு உரு ஜபித்து அதைக் கடவுளிடத்திலேயே ஒப்புவித்தல் ஜப சமர்ப்பணமாம்.

188. ஆராத்திரிகம் என்பது யாது?

அதாவது தீபாராதனை; பலவகையான தீபங்களைக் கடவுள் முன்பாகக் காட்டுதல். ஒவ்வொரு தீபத்திற்கும் ஒவ்வொரு கருத்துண்டு. அவற்றுள் முக்கியமானவை ஐந்து தட்டுக்களும், குடமுமாம்.

இவற்றின் கருத்தாவது: ஐந்து தட்டுக்கள் ஈசான முதலியவற்றையும், குடம் சாதாக்கிய தத்துவத்தையும் குறிக்கின்றமையால் ஈசானம் முதலியன சாதாக்கியத்தில் ஒடுங்குகின்றன; அச்சாதாக்கியமும் சிவத்திடத்தே ஒடுங்குகின்றது என்பதாகும்.

189. கடைசியாகக் கர்ப்பூரம் காட்டப்படுவது ஏன்?

கர்ப்பூரம் வெண்மை நிறத்தைப் பொருந்தி, அக்நி பற்றியவிடத்தே அதன் வடிவமாக விளங்கி, ஒரு பற்றுமில்லாமல் முற்றுங் கரையப்பெற்று ஆகாயத்துடன் கலந்துவிடுவது போல், ஆன்மாவானது சத்துவகுணத்தை அடைந்து ஞானமாகிய அக்நியுடன் சம்பந்தம் பெற்று மூவகைச் சரீரங்களும் எல்லாப் பற்றுக்களும் நீங்கப்பெற்று, பரமுத்தியடைதல் என்னும் பாவனையாம்.

190. அஷ்டபுஷ்பம் சாத்துதலின் கருத்து என்ன?

கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்புஎன்பவையே கடவுளுக்குகந்த மலர்கள் என்னும் பாவனையாம்.

191. இவ்விஷயங்களை நாம் அறிந்து கொள்வதால் உண்டாகும் பயன் யாது?

இத்தகைய பூஜைகள் ஆலயங்களில் நடைபெறும்போது, அவற்றின் கருத்தினை நாம் அறிந்து

ஆராதனை செய்தாலொழிய அவை நமக்கு எவ் வகைப் பயனையும் தாராவாகையால் அவற்றின் பொருளை நாம் நன்கறிந்திருத்தல் வேண்டும்.

---

19. திருவிழாத் தத்துவங்கள்

192. திருவிழாவாவது யாது?

ஆலயங்களில் பத்து அல்லது பன்னிரண்டு நாட்கள் மிகச் சிறப்பாகப் பூசைகள் நடத்தி அங் குள்ள மூர்த்திகளின் திருவுருவங்களைப் பலவித வாகனங்களின்மேல் எழுந்தருளச்செய்து நடத்து விக்கும் விழாவுக்குத் திருவிழா என்றுபெயர். இதனை மகோத்ஸவம் எனவும் கூறுவர்.

193. மகோத்ஸவம் என்பதன் பொருள் என்ன?

மஹா = பெரிய
உத் = உயர்வான
ஸவ = சிருஷ்டி முதலிய காரியங்கள்

உயர்ந்த சிருஷ்டி முதலிய ஐந்தொழில்களைக் குறிக் கும் குறி என்பதாம்.

194. திருவிழாக்கள் பல ஊர்களில் பலவித மாக நடைபெறக் காரணமென்ன?

காரணாகமம், காமிகாகமம், வாதுளாகமம் முதலிய பல ஆகமங்களை அடிப்படையாகக்கொண்டு விழாக்கள் நடைபெறுவதால் உத்ஸவங்களும் பல மாதிரியாக நடைபெறுகின்றன.

195. திருவிழா ஆரம்பிப்பதற்கு முந்தியநாள் மண்ணெடுப்பதும் முளையிடுவதும் எதைக் குறிக்கின்றன?

மண்ணைப் பதம்பண்ணி வித்திடுவது சிருஷ்டியைக் குறிக்கின்றது.

196. கொடியேற்று எவ்வாறு நடைபெறுகிறது?

ரிஷப உருவத்தை ஒரு துணியில் எழுதி அதற்குப் பூஜைகள் செய்து கயிற்றில் கட்டிக் கொடிமரத்தின் உச்சிக்கு ஏற்றுவது கொடியேற்றமாம்.

197. கொடியேற்றின் தத்துவம் யாது?

(அ) சமம், விசாரம், சந்தோஷம், சாதுசங்கமாகிய நான்கு குணங்களையும் கால்களாகவுடையது நந்தி. அது வெள்ளைநிறம் பொருந்திய பரிசுத்த தர்மதேவதை. அதனை ஒப்ப ஆன்மாக்கள் பரிசுத்தம் உடையவர்களாகி, அந்நான்கு குணங்களையும் உடையவர்களானால், அவர்களை இறைவன் அவர்களிருக்கும் நிலையிலிருந்து மிக உயர்த்திவிடுவான் என்பதை இது குறிக்கின்றது.

(ஆ) திருவிழாவின் முதல்நாளில் இக்கொடி யேற்றுதலின் நோக்கமாவது, திருவிழாவிற்கு வரும் அடியார்களை உயர்பதமடையச் செய்வதற்காக இறைவன் இவ்விழா நாட்களிற் சிறப்பாக எழுந் தருளி அருள்செய்யப் போகின்முன் என்பதாம்.

198. விருக்ஷவாகனத் தத்துவம் யாது?

இதை 'விருத்திக் கிரம சிருஷ்டி கோலம்' என்பர். மரத்தின் இலைகள் கிளைகள் முதலியன போல, தத்துவங்களாகவும், எண்ணிறந்த ஜீவராசி களாகவும் கடவுள் விளங்குகிருர் என்பதை இது குறிக்கின்றது. மரத்தின் வேரில் பீடமிட்டு அதில் அம்மையப்பராகக் கடவுள் விளங்குகிருர். அஃதா வது, இத்தகைய சிருஷ்டிக்கெல்லாம் வேராகவிருப் பது அருள் என்ற சக்தியோடு கூடிய அறிவு என்ற சிவமே யென்பதாம்.

199. சூரியப் பிரபை, சந்திரப் பிரபைகளில் இறைவன் எழுந்தருளிவருவது எதைக் குறிக் கின்றது?

இது "விருத்திக் கிரம ஸ்திதிக் கோலம்". உலகத்திலுள்ள உயிர்கள் பிழைத்திருப்பதற்குக் காரணம் சூரிய வெப்பம். அவ்வெப்பம் இல்லா விடில் புசிப்பதற்குப் புல்லும் கிடைக்காது. அவ் வெப்பமே கடலில் நீரையுண்டு மேகங்கள் மூலமாய் மழையைத் தருவிக்கின்றது. இன்னும் எல்லாவகை

யான தொழில்களுக்கும் அது மூலசக்தியாய் விளங்குகின்றது. எனவே உலகத்தைக்காப்பாற்று வது சூரியனதுதொழில். சந்திரன் இன்பத்தைத் தருபவன். ஆகையால் சூரியப் பிரபையிலும் சந்திரப் பிரபையிலும் இறைவனைவைத்து வணங்கு தல் ஸ்திதித் தொழிலுக்கு அறிகுறியாம்.

200. **நந்தியின் மேலும் பூத வாகனத்தின் மேலும் இறைவன் எழுந்தருளிவருவது எதைக் குறிக்கின்றது?**

மான், மழு, சதுர்ப்புஜம், திரிநேத்ரம் முதலிய அடையாளங்களையுடைய சாருப்பிய பதவிபெற்ற விஞ்ஞானகலர் என்ற ஆன்மவர்க்கத்துள் சிறந் தவர் அதிகார நந்தி என்பவர்.

பூதகணங்களோவெனின், இறந்தவுடன் ஆன் மாக்களைக் கொண்டுபோகும் தொழிலுடையன. இவ்விரண்டு வாகனங்களின் மேலும் இறைவன் ஏறிவருவது சங்காரத்திற்கு அறிகுறியாகும்.

201. **நாகப்பாம்பு வாகனம் எதை உணர்த்து கின்றது?**

நஞ்சு, மாணிக்கம் படமாகிய மூன்றையும் மறைத்து, வேண்டும்போது வெளிப்படுத்தும் திறமையுடையது பாம்பு. அல்லாமலும் இது, தானும் மறைந்திருந்து வேண்டும்போது புற்றி லிருந்து வெளிவரும் தொழிலுடையது. எனவே,

நாகப்பாம்பு வாகனம் மறைத்தற் றொழிலாகிய 'திரோபவம்' என்பதற்கு அறிகுறியாகும். குண்டலி சக்தி, சுழுமுனைநாடி முதலியவற்றோடு ஒப்பிட்டும் தத்துவம் கூறுவர்.

202. **ரிஷபவாகனக்காட்சி சிறந்த காட்சியானதேன்?**

சிவனடியார்களுக்கு இறைவன் ரிஷபவாகனாரூடராகவே காட்சி கொடுத்திருக்கிறுனென்று அறிகிறோம். ரிஷபம் எவ்வகையான மாசுமற்றது. சுத்தவெள்ளை நிறமுடையது. சமம் முதலிய நான்கு குணங்களைக் கால்களாகவுடையது. ஆணவ மலத்தை ஒழித்து அருளொடுகூடிய அறிவைப் பணிவுடன் ஏற்று நிற்கின்றது. ஆன்மாக்கள் இங்ஙனம் ஆகும்போதுதான் இறைவன் பேரருள் சுரக்கிறுன். ஆகையால், இக்காட்சி அநுக்ரக காட்சியாயிற்று; எனவே, இது சிறந்ததாம்.

203. **ஆரும் திருவிழாவில் இறைவன் யானை மீது வரும் காட்சியின் தத்துவம் என்ன?**

இது 'லயக்கிரம (ஒடுங்கும் முறை) சிருஷ்டி கோல' மாகும், மரம் சிருஷ்டியை உணர்த்துவது போல விரிந்த பாகுபாடுகளெல்லாம் ஒடுங்கி ஒரே பிண்டமாகப் பருமனை உடம்பு கால்களையுடைய யானையைப்போல் ஒடுங்கிவிடுவது லயக்கிரமத்தில் கடைசிப்படியாகவுள்ள சிருஷ்டியைக் குறிக்கிறது.

204. கைலாசபர்வதவாகனம் எதை உணர்த்துகிறது?

இராவணன் ஆணவமலம் நிறைந்த உயிர்; இமயமலை பிரபஞ்சம். இராவணன் இமயமலையைத் தூக்கமுயல்வது, ஆணவம் பிரபஞ்சத்தை அறிந்து இன்புற முயல்வதற்கு உவமையாகின்றது. இராவணன் அவ்வாறு தூக்கமுடியாமல் துன்பம் அடைந்தான். அவ்வாறே ஆணவமலம் நிறைந்த உயிரும் இறுதியில் ஆணவத்தை இழந்து, கடவுளைத் தியானித்து, வரம்பெற்று, இறைவன் திருவடி சார்ந்து இன்புறுகிறது. இதனையே இவ்வாகனம் உணரச் செய்கிறது.

205. நடராஜர் உற்சவத்தில் அடங்கிய தத்துவங்கள் எவை?

நடராஜர் திருவுருவத்தில் பஞ்சகிருத்தியங்கள் உள்ளனவென்பது 'தோற்றம் துடியதனில்'* என்ற பாடல் மூலம் விளங்கும். அஃதாவது, சிருஷ்டி உடுக்கையிலும், ஸ்திதி அபயஹஸ்தக் கையிலும், சங்காரம் எரிதாங்கிய கையிலும், திரோபவம் ஊன்றிய காலிலும், அநுக்ரகம் தூக்கிய காலிலும் குறியீடாகவுள்ளனவென்று சிவஞான சாத்திரங்கள் கூறுகின்றன. இங்ஙனமே நடராஜர் உற்சவத்திலும் பஞ்சகிருத்தியங்கள் உள்ளன. சபையை

*48-ம் பக்கம் பார்க்க.

விட்டுப் புறப்படுதல் சிருஷ்டி; அபிஷேகம் ஸ்திதி; சாந்தணிதலும், அலங்கார தீபாராதனையும் சம்ஹாரம்; வெள்ளைச் சாத்துபடி திரோபவம்; வீதி வலம் வந்து மட்டையடி தரிசனம் அநுக்ரகம்.

206. தேரின் தத்துவங்கள் யாவை?

தேரின் அமைப்பு அண்டபிண்டத்திற்குச் சமானம். விசுவ விராட் சொரூபமே எட்டு அடுக்குக் களாகும். உச்சியிலிருக்கும் கும்பம் சோடசாந்தம்; அதற்கடுத்த கீழடுக்கு துவாதசாந்தம்; அதற்கடுத் தது மஸ்தக ஆதிஸ்தானம்; அதற்கடுத்தது மஸ்தக மத்தியஸ்தானம்; அதற்கடுத்தது மஸ்தக அந்தஸ் தானம்; அதற்கடுத்தது புருவ மத்தியஸ்தானம்; நடுவில் தாங்கும் குத்துக்கால்கள் தத்துவக்கால்கள்; முன் மூன்று துறைகள் மூன்று கண்கள். பின்னவை சிகையும் இட வலக் காதுகளுமாகும்; இறைவன் எழுந்தருளியிருக்கும் கேடயபீடம் மூப்பாழ்; குதிரை கள் சூரிய சந்திர கலைகள்; சாரதி அக்நிக்கலை, இவை நாசியாகும்; அடுத்த அடுக்கு கண்டஸ்தானம்; அதை யடுத்த அடுக்கு இருதயஸ்தானம்; அதையடுத்த அடுக்கு நாபி; அதற்கடுத்த அடுக்கு குண்டலிஸ் தானம்; பத்துச் சக்கரங்களும் தசவாயுக்கள். இறை வன் இதற்குக் கர்த்தா தானொருவனே என் றுணர்த்தி இவ்வாறமைந்த பிண்ட தத்துவசரீர மாகிய இரதத்தில் தசவாயுக்களாகிய சக்கரங்களை நிறுத்தி, அசைவற்ற மனத்தை உந்தி, குண்டலியி லிருந்து நாபிக்கும், அதிலிருந்து கண்டத்திற்கும்,

அதிலிருந்து வாய்க்கும் ஏற்றி லயப்படுத்தி, முறையே இரதக்குதிரையாம் நாசிக்கும் அங்கிருந்து கண்வழியாகவும், நடுவழியாகவும் மேல்நோக்கி ஆறும் அடுக்காகிய புருவமத்திக்கும் ஏற்றி லயப் பட்டு சும்மாவிருந்தபடியிருக்கும் நித்திய சுகியாய் இருந்திடல் வேண்டும் என்ற லயக்கிரமத்தைக் காட்டுகிறது. மேலும் தேர் திரிபுராதிகளைச் சிவன் சிரித்து எரித்தது ஆன்மகோடிகளைக் காப்பாற்றிய ஸ்திதித்தொழிலுக்கும் அறிகுறியாகிறது.

207. **பிக்ஷாடனர் திருக்கோலம் எதை உணர்த்து கிறது?**

தாருகா வனத்து ரிஷிகளும், ரிஷி பத்தினி களும் ஆணவமலத்தால் தாங்கள் சுதந்திரர்களென எண்ணிக கடவுளை மறந்தனர், அவர்கள் பரதந்திரர் களென உணர்த்துதற் பொருட்டு இறைவன் பிக்ஷாடன மூர்த்தியாய்ச் செல்ல, ரிஷி பத்தினிகள் அவரழகில் ஈடுபட்டனர். விஷ்ணு மோஹினியாகச் செல்ல அவ்வழகில் ரிஷிகள் ஈடுபட்டனர். இவ் விரண்டு செயல்களாலும் ரிஷிகளும், அவர் பத்தினி மார்களும் பரதந்திரர்களே என அவர்களை உணரச் செய்து பரமன் மறைந்தருளினன். இவ்வநுக்ரக பராக்ரமக் கோலமே பிக்ஷாடனக் கோலமாகும்.

208. **தீர்த்த வாரியின் கருத்தென்ன?**

இறைவனது அநுக்ரகம் பெற்ற உயிர்கள் அவனது அருட்பெருக்கில் அமிழ்வதைக் குறிக்

கின்றது. நீறாதி ஆலயத்தினுள் சென்று வணங்கு வது மோட்சம் அடைதலைக் குறிக்கின்றது.

இத்தகைய தத்துவங்களைப் பத்துநாள் விழா விலும் எண்ணி எண்ணிப் பரமனைப் பரவுவார் பரகதியடைவார் என்பதற்கு ஐயமுளதோ?

---

20. ஆலயவழிபாடு செய்யும் முறை

209. **ஆலயங்களுக்கு எவ்வாறு நாம் போக வேண்டும்?**

முன்கூறியபடி தேக சுத்திகள் செய்து நீறாதி சமயச்சின்னங்க*ளணிந்து தோய்ந்துலர்ந்த ஆடை கட்டிச் செல்லவேண்டும். கோயிலின் பக்கத்திற் சென்றதும் கை கால்களைக் கழுவிக்கொண்டு கோபுரத்தின் முன் சென்று நின்று இரண்டு கரங் களையும் தலைமேற் குவித்து மூலமந்திரத்தை உச்சரித்துக்கொண்டும் அருட் பாக்களைப் பாடிக் கொண்டும் வேறு விசாரங்கள் ஒன்றுமில்லாமல், கோபுரத்தை ஸ்தூல லிங்கமாகவும், கடவுள் பாதங் களாகவும், பாவித்து வணங்கிக் கோயிலுட் போக வேண்டும்.

---

* 16-ஆம் பாடம் பார்க்க.

Q2
N49

210. கோயிலுட் செய்யத்தகாத வேலைகள் எவை?

துப்புதல், மூக்குச் சிந்துதல், மலஜலங் கழித்தல், தலை கட்டுதல், தலையில் சீலைகட்டிக்கொள்ளுதல், அபானவாயுவிடுதல், சட்டை, தொப்பி, செருப்பு இவை மாட்டிக்கொள்ளுதல், சுருட்டுக் குடித்தல், வம்புபேசுதல், சிரித்தல், விளையாடுதல், சண்டையிடல், பலிபீடங்களை மிதித்தல், வெற்றிலை போடுதல், எச்சிலாக்குதல் முதலியனவாம்.

211. கொடிமரத்தின் பக்கத்திற் சென்றதும் யாது செய்யவேண்டும்?

புருஷர்கள் அஷ்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல்வேண்டும்.

212. அஷ்டாங்க நமஸ்காரமாவது யாது?

தலை, செவியிரண்டு, கையிரண்டு, புஜங்களிரண்டு மோவாய்க்கட்டை ஆகிய எட்டு அவயவங்களும் பூமியிற் படும்படி வணங்குதலாம்.

213. பஞ்சாங்க நமஸ்காரமாவது யாது?

தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு ஆகிய ஐந்து அவயவங்களும் பூமியிற் படும்படி நமஸ்கரித்தலாம்.

214. கொடிமரத்தைக் கண்டதும் யாது நினைத்தல் வேண்டும்?

இறைவனை யடைந்தவர் அழிவற்ற ஆனந்தத்தில் நிலைத்திருப்பர் என நினைந்து கொடிமரத்தை சூக்ஷ்ம லிங்கமாக எண்ணி வணங்கவேண்டும்.

215. கொடிமர தரிசனம் செய்தபிறகு யாது செய்தல் வேண்டும்?

மூலமந்திரத்தை உச்சரித்துக்கொண்டு மூன்று தரம் வலம்வந்து வணங்கி உட்செல்லுவதற்காகப் பலிபீடத்தின் அருகிற் செல்லவேண்டும்.

216. பலிபீடத்தின் அருகில்சென்று யாது செய்தல் வேண்டும்?

நம்மிடமிருக்கும் காமம், குரோதம், உலோபம், மோஹம், மதம், மாச்சரியம் என்பவற்றைப் பலி கொடுத்ததாக உறுதி பண்ணவேண்டும்.

217. பிரதக்ஷணம் செய்யும்போது யாது நினைத்தல் வேண்டும்?

ஐந்து பிராகாரங்களையும் அன்னமயகோச முதலிய பஞ்சகோசங்களாக மதித்து ஒவ்வொரு கோசத்திலும் ஆன்மா உழன்று தெளிந்து அதை விடுத்து மேலே செல்வதாக நினைக்கவேண்டும். இங்ஙனம் ஐந்து பிராகாரங்களையும் கடந்தால்

கடவுளது சாமீப்யபதத்தை அடையலாம் என்னும் உண்மையையும் உணர்தல் வேண்டும்.

218. கோயிலில் விநாயகரது ஸ்தானம் எது?

கன்னிமூலை.

219. விநாயகர் சந்நிதியில் எப்படி வணங்க வேண்டும்?

வலக்கையை இடக்கையின் முன் வைத்து வலக்கையால் இடப்புறத்திலும் இடக்கையால் வலப்புறத்திலும் மண்டையில் மூன்றுமுறை குட்டுகளிட்டு, வலக்கையால் இடக் காதையும் இடக்கையால் வலக் காதையும் பிடித்துக்கொண்டு மூன்றுமுறை தோப்புக்கரணமிட்டு விநாயகர் தோத்திரம் கூறி வணங்குதல் வேண்டும். விநாயகர் தோத்திரம் கடைசிப் பாடத்தில் கூறப்பட்டிருக்கிறது.

220. ஏன் இவரை இவ்வாறு வணங்குதல் வேண்டும்?

ஒரு குற்றவாளி தான் செய்த குற்றத்திற்குத் தண்டனை தானே விதித்துத் தானே அனுபவித்தல் போலக் கடவுளின் சமீபத்தில் செல்லுவதற்குத் தகுதியில்லாதபடி குற்றங்கள் நிறைந்த மக்கள் தாம் செய்த குற்றத்திற்குத் தாமே தண்டனைகள் செய்து அனுபவிக்க மேற்கூறியவாறு செய்து, மேல் அவ்விதம் குற்றங்கள் செய்யமாட்டோம் என

உறுதி செய்துகொள்ளுகிருர்கள். கடவுளின் அருள் கிடைப்பதற்கு விக்கினங்கள் ஏற்படுமானல் விக்கினங்களை நீக்கியருளவேண்டும் எனவும் விக்கினேஸ்வரரை வணங்குகிருர்கள்.

221. இவர்முன் தேங்காய் விடலை எறிவதேன்?

நாம் செய்த குற்றங்கள் பாவங்களாக உருண்டு திரண்டு உருக்கொண்டு நிற்கின்றதாகத் தேங்காயைப் பாவித்து, அது விநாயகர் வணக்கத்தால் உடைந்து சிதறினது என்று நினைந்து விடலையெறிந்து மேல் அவ்வகைப் பாவங்கள் செய்யாதிருப்போம் என நினைந்து கொள்ளுதற்காம்.

222. விநாயகர் வணக்கம் முடிந்தபின் யாது செய்தல் வேண்டும்?

துவாரபாலக விக்ரகங்களின் முன் சென்று, "அடியேன் உட்சென்று இறைவனை வணங்குதற்கு அநுமதி செய்தருளும்" என்று வேண்டிக்கொண்டு சந்நிதியிற் சென்று நின்று இறைவனை வணங்கித் தோத்திரப் பாக்கள் கூறுதல்வேண்டும். இங்குத் தேங்காய், பழம் முதலிய நிவேதனப்பொருள்களைக் கொடுத்து நிவேதிக்கச் செய்யலாம்; அருச்சனையும் செய்விக்கலாம். கற்பூர தரிசனம் செய்து பிரசாதம் வாங்கித் தரித்துக்கொண்டு மூலஸ்தான மூர்த்தியை நன்ருய் மனதில் பதியவைத்து எலும்புகளெல்லாம் நெக்குநெக்குருகக் கண்ணீர் அருவிபோலப் பாயக்

கசிந்துருகித் துதித்து வெளிவரல் வேண்டும். பின், அம்பிகை சந்நிதியிலும் அவ்வாறே வணங்கல் வேண்டும்.

223. அதனபின் யாது செய்தல் வேண்டும்?

உட்பிராகாரங்களிலிருக்கும் ஒவ்வொரு மூர்த்தியையும் வணங்கிக்கொண்டே வலம் வரல்வேண்டும்.

224. தக்ஷிணாமூர்த்தி முன் எவ்வாறு வணங்க வேண்டும்?

தக்ஷிணாமூர்த்தி விக்ரகம் கல்லாலின் கீழ், சனகர் முதலிய நால்வருக்கு உபதேசஞ்செய்ய எழுந்தருளிய குருமூர்த்தமாகும். அவர், தம் சுட்டு விரலைப் பெருவிரலோடு சேர்த்து மற்ற மூன்று விரல்களையும் அகலவிட்டுக் காட்டும் சின்முத்திரையால் உயிர்கள் ஆணவம், கன்மம், மாயையாகிய மூன்றினையும் அகற்றிக் கடவுளை அடைதல்வேண்டும் என உபதேசிக்கின்றார். ஆதலால், அவர் சந்நிதியடைந்த நாம் இறைவனைக் குருவாய்ப் பாவித்து வணங்கவேண்டும். அவர் உபதேசிக்கின்றபடி ஆணவம், கன்மம், மாயைகளை அகற்றி இறைவனையடைய முயலுதல் வேண்டும்.

225. சண்டேசுரரை எவ்வாறு வணங்குதல் வேண்டும்?

சண்டேசுரர் கோயில், கோயிலின் இடப்பக்கத்தில் சிறியதோர் இடைவழிவிட்டு அமைக்கப்பட்

டிருக்கும். மூலஸ்தானத்தில் சாத்திய மாலையும் நைவேத்திய மிச்சமுமே இங்கு பூஜைக்குரியன. இவர் கடவுள்திருவருள்பெற்றஅடியார். இவர் எப்போதும் சிவத்தியானம் செய்துகொண்டே இருக்கிறார். இவரைக் கோயில் தரிசனம் அனைத்தும் முடிந்தபிறகு வணங்குதல் வேண்டும். சிவத்தியானத்திலிருக்கும் இவரைத் திரும்ப மூன்றுமுறை கையால் கொட்டி அவர் நம்மைப் பார்ப்பதாய் மதித்துச் சிவதரிசன பலனைத் தருமாறு பிரார்த்திக்கவேண்டும்.

226. சனீஸ்வர வணக்கமும் கோயிலில் வைத்திருப்பதேன்?

"சனீஸ்வர பகவானே உனைத் தொழுவேன், எனைத் தொடாதே" என வேண்டித் தீவினை நம்மை அணுகாதிருக்கப் பிரார்த்தனை செய்வதாம்.

227. நவக்கிரக ஆராதனை எதற்கு?

கோள்கள் மனிதர்களுக்கு அவர்கள் வாழ்நாளில் தீமையைச் செய்ய இருப்பின் அவற்றின் வலிமையைக் குறைத்தற் பொருட்டாம்.

228. கோயில்வழிபாடனைத்தும் முடிந்தபிறகு யாது செய்தல் வேண்டும்?

கொடிமரத்திற்குச் சற்றுதூரம் விலகியிருந்து மூலமந்திரத்தை நூற்றெட்டு முறையோ அதற்கு மேற்படவோ ஜபித்து, தாங்கண்ட இறைவன்

திருவுருவத்தை நினைந்து, எங்குச் சென்றிருந்து தியானிப்பினும் புறக்கண்ணால் கண்ட திருவுருவம் அகக்கண்ணால் காணும்படி ஆக்கிக்கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறு ஆலய வழிபாடுகள் செய்யும்போது ஒவ்வொரு மூர்த்தியின் முன்னும் பாடவேண்டிய தோத்திரப்பாக்கள் அடுத்த பாடத்திற் கூறப் பட்டிருக்கின்றன.

229. சிவத் தியானத்துக்குரிய மூலமந்திரம் எது ?

"ஓம் நமசிவாய" என்பதாம். இதைப் பஞ் சாக்ஷரம் எனவுங் கூறுவர்.

230. விஷ்ணுத் தியானத்துக்குரிய மூலமந்திரம் எது ?

"ஹரி ஓம் நாமோ நாராயணாய" என்பதாம். இதை அஷ்டாக்ஷரம் எனவும் கூறுவர்.

231. சுப்பிரமணிய தியானத்துக்குரிய மூல மந்திரம் எது ?

"ஓம் சரவணபவாய" என்பதாம். இதனை ஷடாக்ஷரம் எனவுங் கூறுவர்.

21. தோத்திரமாலை

232. விநாயகர் திருமுன் சொல்லவேண்டிய பாட்டுக்கள் எவை?

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம். 1

வானுலகு மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வாய்
யானைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம். 2

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே. 3

233. சிவசந்நிதியிற் சொல்லவேண்டிய தோத்திரங்கள் எவை?

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் முதலியனவாம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தேவாரம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

திருநாவுக்கரசுநாயனர் தேவாரம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

சுந்தரமூர்த்திநாயனர் தேவாரம்

பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அத்தாவுனக் காளாயினி யல்லே னெனலாமே.

திருத்தாண்டகம்

எல்லா வுலகமு மானாய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சேவடி யென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதீ மிக்க
உருவேயென் னுறவேயென் னூனே ஊனின்
உள்ளமே யுள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோ யடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையு மமர ரேறே.

திருவாசகம்

மெய்தா னரும்பி விதிர்விதிர்த் துன் விரையார் கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னுங்
கைதா னெகிழவிடே னுடையா யென்னைக் கண்டுகொள்ளே.

திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துட் டித்திக்குந் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கண் மெய்யடி
யார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம் புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லதோ
ரானந்த வெள்ளப் பொருள்
பண்டு மின்று மென்றுமுள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

பெரியபுராணம்

அண்ண லேயெனை யாண்டுகொண் டருளிய வமுதே
விண்ணி லேமறைந் தருள்புரி வேதநா யகனே
கண்ணி னுற்றிருக் கயிலையி லிருந்தநின் கோலம்
நண்ணி நான்றொழ நயந்தருள் புரியெனப் பணிந்தார்.

இவைபோன்ற பல பாசுரங்கள் "அடங்கன் முறை", "திருவாசகம்" முதலிய நூல்களிலிருந்து படித்தறியத் தக்கனவாம்.

234. திருமால் அல்லது மஹாவிஷ்ணு திருமுன் பாடவேண்டிய பாட்டுக்கள் எவை?

குலந்தரும்; செல்வம் தந்திடும்; அடியார்
படுதுய ராயின வெல்லாம்
நிலந்தரம் செய்யும்; நீள்விசும் பருளும்;
அருளொடு பெருநிலம் அளிக்கும்;
வலந்தரும்; மற்றுந் தந்திடும்; பெற்ற
தாயினும் ஆயின செய்யும்;
நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

இதுபோன்ற பல பாக்கள் நாலாயிர திவ்ய பிரபந்தம் முதலிய நூல்களிலிருந்து படித்தறியத் தக்கனவாம்.

235. உமாதேவியார் திருமுன் பாடவேண்டிய பாட்டுக்கள் எவை?

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட
அங்கயற்க ணெம்பி ராட்டி
அரும்புமிள நகைபோற்றி யாரணநூ
புரஞ்சிலம்பு மடிகள் போற்றி.

என்பதும் இதுபோன்ற பிறவுமாம்.

236. நடராஜர் திருமுன் கூறவேண்டிய திருப் பாட்டுக்கள் யாவை ?

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

என்பதும் பிறவுமாம்.

237. தக்ஷிணாமூர்த்தி துதி யாது ?

மும்மலம் வேறுபட் டொழிய மொய்த்துயிர்
அம்மலர்த் தாள்நிழல் அடங்கும் உண்மையைக்
கைம்மலர்க் காட்சியிற் கதுவ நல்கிய
செம்மலே யலதுளஞ் சிந்தியா தரோ.

238. முருகன் திருமுன் பாடுதற்குரிய பாடல் கள் யாவை ?

திருமுருகாற்றுப்படை, கந்தர்கலிவெண்பா, கந்தரனுபூதி, கந்தரலங்காரம், திருப்புகழ் முதலிய நூற்களிலுள்ள பாடல்களாம்.

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன்மா மயிலாய் போற்றி
முன்னிய கருணையாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக் கருணை வாரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணு ளிருக்குமா மணியே போற்றி.

என்பதும் இதுபோன்ற பிறவுமாம்.

239. திருநந்திதேவர் துதி யாது?

அங்கணன் கயிலைகாக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு
நங்குரு மரபிற் கெல்லாம் முதற்குரு நாதனாகி
பங்கயம் துளவனாறும் வேத்திரப் படை பொறுத்த
செங்கையெம் பெருமானந்தி சீரடிக் கமலம் போற்றி.

240. சண்டேசுரர் துதி யாது?

பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த புனிதற்கமைக்கும் பொருளன்றி
மின்னுங் கலனுடைகள் பிறவும் வேறுதனக்கென் றமையாமே
மன்னுந் தலைவன் பூசனையின் மல்கும் பயனை அடியார்கள்
துன்னும்படி பூசனைகொள்ளும் தூயோ னடித்தாமரை தொழுவாம்.

241. சரஸ்வதி துதி யாது?

பழுதகன்ற நால்வகைச்சொன் மலரெடுத்துப்
பத்திபடப் பரப்பித் திக்கு
முழுதகன்று மணந்துசுவை யொழுகியணி
பெறமுக்கண் மூர்த்தி தாளில்
தொழுதகன்ற அன்பெனும்நார் தொடுத்துஅலங்கல்
சூட்டவரிச் சுரும்புந் தேனும்
கொழுதகன்ற வெண்டோட்டு முண்டகத்தாள்
அடிமுடிமேற் கொண்டு வாழ்வாம்.

242. திருஞானசம்பந்தர் துதி யாது?

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

பண்டைவல் வினையினற் பாயு டுத்துழல்
குண்டரை வென்றுமுன் கூடல் வைகியே
வெண்டிரு நீற்றொளி விளங்கச் செய்திடு
தண்டமிழ் விரகன்மெய்த் தாள்கள் போற்றுவாம்.

243. திருநாவுக்கரசர் துதி யாது?

பொய்யுரை நூல்சில புகலுந் தீயமண்
கையர்கள் பிணித்துமுன் கடல கத்திடு
வெய்யகற் றோணியாய் மிதப்ப மேற்படு
துய்யசொல் லரசர்தாள் தொழுது போற்றுவாம்.

அறப்பெருஞ் செல்வி பாகத் தண்ணலஞ் செழுத்தா லஞ்சா
மறப்பெருஞ் செய்கை மாறா வஞ்சக ரிட்ட நீல
நிறப்பெருங் கடலும் யார்க்கு நீந்துதற் கரிய எழு
பிறப்பெனுங் கடலு நீத்த பிரானடி வணக்கஞ் செய்வாம்.

244. சுந்தரர் துதி யாது?

இருமுதலையடைந்துநரைமுடியசைய வாவணமொன்றேந்திப்போந்த
வொருமுதலை நவநீத புரியானை வழக்கேற்றி யுரைத்த கோவை
யருமுதலை குழவிதர மறையொழுகுங் கனிவாயா லமுதப் பாடற்
றருமுதலை யடிபணிந்து கருமுதலை வேரினெடுந் தள்ளு வோமே.

ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட்
டாட்கொண்ட வுவனைக் கொண்டே
யிருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட
வல்லாள னெல்லா முய்யப்
பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகைவிரித்த
பேரருளின் பெருமா னென்றுந்
திருமணக்கோ லப்பெருமாள் மறைப்பெருமாள்
எமதுகுல தெய்வ மாமால்.

245. மணிவாசகர் துதி யாது?

எழுதரு மறைகள் தேறா விறைவனை யெல்லிற் கங்குற்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமே லேறத் துளும்புகண் ணீருண் மூழ்கி
யழுதடி யடைந்த வன்ப னடியவர்க் கடிமை செய்வாம்.

சிற்றம் பலக்கோவைத் தேன்சொரியுஞ் செம்முகிலை
மற்றொப் பிலாததிரு வாசகத்தின் வாரிதியைக்
கற்றைச் சடையான் கருத்துருக்குங் காதலனைக்
கொற்றத் திருவாத வூரனைக்கை கூப்புதுமே.

246. அறுபத்துமூவர் துதி யாது?

தத்து மூதெயில் மூன்றுந் தழலெழ
முத்து மூரன் முகிழ்த்த நிராமய
சித்து மூர்த்திதன் தாளிணை சேரறு
பத்து மூவர் பதமலர் போற்றுவாம்.

247. அகத்தியர் துதி யாது?

விந்தகிரி யொன்றடக்கி வேதமொரு நான்கடக்குஞ்
சிந்தைதனி லைந்தடக்கிச் சிறுகரகத் தாறடக்கி
வந்துகட லோரேழும் வயிற்றடக்கிப் பொன்முகரி
முந்துதவத் தாற்கொணர்ந்த முனிவனடி முடிபுனைவாம்.

காசியி னின்றும் போந்து கம்பர்தா மருளப் பெற்று
மாசிலாக் கச்சி மூதூர் மன்னிவீற் றிருந்து பூமே
லாசிலாத் தமிழ்ப ரப்பி யருந்தமிழ்க் குரவு பூண்ட
தேசினன் மலய வெற்பிற் குறுமுனி திருத்தாள் போற்றி.

248. இந்துக்கள் காலையிலும் மாலையிலும் கடவுளை ஜபத்தாற் பிரார்த்திப்பது எங்ஙனம்?

ஜபம்

அருட்பெருஞ்சோதி! தனிப்பரம் பொருளே! அடியருக்கருளும் ஆனந்தத் தேவே! உன் அடிமலர் இணைகட்கு அடைக்கலம் அடைக்கலம்.

உனதண்டப் படைப்பில் அடிமையின் நிலைமை அணுவிலும் அணுவென அறைதலும் அதிகமே; ஆயினும் எமை நீ அன்னையைப் போல அன்புடன் பேணி அருள் புரிகின்றனை; இன்னமும் எங்கள் தம் இருவினை நீக்கி இன்னருள் புரிந்து நன்னயம் பெருகும் நலம்பல தருவாய். மூத்தியளித்திடும் மூதல்வா! எம்தம் சித்தம் திருத்தி சீர்பெறச் செய்வாய்! தீய செயல்கள் சிறிதளவும் யாம் செய்யாதிருக்கத் திருவருள்புரிவாய். பிறப்பெனும் பெருநோய் பிடித்திடா தெமக்குச் சிறப்புடன் முத்தி சீருடன் அருளே. திருச்சிற்றம்பலம்.

நாமாவளி

நமப்பார்வதீபதயே — ஹரஹர மஹாதேவா

கோவிந்தநாம ஸங்கீர்த்தனம் — கோவிந்தா கோவிந்தா

சித்ஸபேசா — சிவசிதம்பரம். [போற்றி

தென்னாடுடைய சிவனே போற்றி — என்னாட்டவர்க்குமிறைவா

ஆதீன வெளியீடுகள்

உ

குருபாதம்

தருமபுர ஆதீன வெளியீடுகள்

எண்	பெயர்	வருஷம்
1.	குருஞானசம்பந்த சுவாமிகள் தாலாட்டு சமூகமாலை முதலியன	1924
	,, இரண்டாம் பதிப்பு	1944
2.	நித்திய கன்மநெறி	1927
3.	திருமுல்லைவாயிற் புராணம்	,,
4.	திரிபதார்த்தரூபாதிதசகாரிய அகவல்	,,
5.	சித்தாந்த நிச்சயம்	1928
6.	சம்பிரதாய தீபம்	,,
7.	வருணாச்சிரம சந்திரிகை	1930
8.	சிகாரத்தின மாலை	,,
9.	திருப்பதிகமும் பஞ்சரத்தினமும்	,,
10.	தசமணிமாலை	,,
11.	ஞானசம்பந்த குருராயவட்டகமும், சந்திரகலாமாலையும்	,,
12.	திருவையாற்றுப் புராணம்	,,
13.	சிவானந்தபோத சாரம்	1931
14.	சோடசகலாப் பிராசாத சட்கம்	,,
15.	சைவசன்யாச பத்ததி (வடமொழி)	1932
16.	சிவபோகசாரமும், சொக்கநாத வெண்பாவும்	,,
	,, இரண்டாம் பதிப்பு	1936

எண்	பெயர்	வருஷம்
17.	சிவப்பிரகாசக்கட்டளை — ஆங்கிலத்துடன்	1932
	,, இரண்டாம் பதிப்பு	1939
18.	உ௩-வது மகாசந்நிதானத்தின்மீது பலர் பாடிய தோத்திரப் பாடல்கள்	1933
19.	திருத்துருத்திப் புராணம்	,,
20.	ஞானசரிதை	1934
21.	முத்திநிச்சயம் — சிற்றுரையுடன்	,,
22.	அறிவானந்த சமுத்திரம்	,,
23.	பண்டாரமும்மணிக்கோவை குறிப்புரையுடன்	1937
24.	இந்துமத பாலபாடம்	,,
25.	சிதம்பரச் செய்யுட்கோவை உரையுடன்	,,
26.	திருவையாற்றுத் தலமகிமைச் சுருக்கம்	,,
27.	கிளிவிடுதூது	,,
28.	திருமுலைப்பால் சிறப்பு	1939
	,, இரண்டாம் பதிப்பு	1941
29.	பதி பசு பாசத்தொகை	1940
30.	ஸ்ரீலஸ்ரீசிவஞானதேசிகர்நான்மணிமாலை	,,
31.	திருபுவனத் தலமகிமைச் சுருக்கம்	,,
32.	கீர்த்தித்திருவகவல்	1941
33.	ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகளின் வரலாறும் சில பாசுரங்களும்	,,
34.	வைத்தீஸ்வரன்கோயில் தேவாரம் திருப்புகழ்	,,
35.	திருத்தொண்டத் தொகையும் அசபாநடன பதிகமும்	,,
36.	குங்குலியக்கலய நாயனர் அன்பின்திறம்	,,
37.	திருக்கடவூர்த் தேவாரம் திருப்புகழ்	,,
38.	திருவையாற்றுத் தேவாரம் திருவாசகம் திருப்புகழ்	,,
39.	புள்ளிருக்குவேளூர்ப் புராணம்	,,
40.	சித்தாந்த சைவ வினவிடை	,,

எண்	பெயர்	வருஷம்
41.	நால்வர் சரித்திரமும் அற்புதத் தேவாரத் திரட்டும்	1941
42.	ஆச்சாள்புரத் தலவரலாறு	,,
	,, இரண்டாம் பதிப்பு	1943
43.	திருவையாற்றுத் தலவரலாறு	1941
	,, இரண்டாம் பதிப்பு	1943
44.	சுப்பிரமணியர் திருவவதாரமும் கந்தர்கலி வெண்பாவும்	1941
45.	தருமபுர ஆதீனம் மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு	,,
46.	சிவபூஜாவிதி	,,
47.	சைவாநுட்டானவிதி	,,
48.	திருக்கடவூர் உலா குறிப்புரையுடன்	,,
49.	திருப்பாடல்கள்	1924
50.	விநாயகர் அகவல்கள்	,,
51.	சீகாழித் தலவரலாறு	,,
52.	மெய்கண்டசாத்திரம் மூலம்	,,
53.	கற்குடித் தலவரலாறு	1943
54.	நீதிநெறிவிளக்கம் (உரையுடன்)	,,
	,, இரண்டாம் பதிப்பு	1949
55.	திருவாரூர் நான்மணிமாலை மூலமும் வசனமும்	1943
56.	சகலகலாவல்லிமாலை (உரையுடன்)	,,
57.	கந்தரனுபூதி	,,
58.	குத்தாலத் தலவரலாறு	,,
59.	குறுக்கைத் தலவரலாறு	,,
60.	திருபுவனத் தலவரலாறு	,,
61.	திருக்கடவூர்த் தலவரலாறு	,,
62.	புள்ளிருக்குவேளூர்த் தலவரலாறு	,,
63.	திருப்பனந்தாள் தலவரலாறு	,,
64.	உ௬-வது மகாசந்நிதானம் பத்தாண்டு ஆட்சி மலர்	,,

எண்	பெயர்	வருஷம்
65.	அப்பர் சுவாமிகள் புராணம் C. K. S. விரிவுரையுடன்	1944
66.	மெய்கண்டான் சித்தாந்தமகா நாடு திருமுறைத் திருநாள் நிகழ்ச்சிகள்	,,
67.	சிவஞானபோத சூத்திரக் கட்டுரை	,,

உரு-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்களால் வெளியிடப்பட்டவை.

68.	ஞானசம்பந்தர் வழங்கிய ஞானவுரை	1945
69.	சிவப்பிரகாசம் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)	,,
70.	தருமபுர ஆதீன நூல்நிலயப்புத்தகப்பட்டி	,,
71.	புள்ளிருக்குவேளூர்த் திருப்பதிகங்கள்	,,
	,, இரண்டாம் பதிப்பு	1946
72.	பஞ்சாவரணத் தோத்திரங்கள்	1945
73.	சிதம்பரத்துத் திருப்பதிகங்கள்	,,
74.	தக்ஷிணாமூர்த்தி திருவருட்பா	,,
75.	திருவேட்களத் திருப்பதிகங்கள்	,,
76.	திருநெல்வாயில் திருப்பதிகம்	,,
77.	திருக்கழிப்பாலைத் திருப்பதிகங்கள்	,,
78.	திருநாரையூர்த் திருப்பதிகங்கள்	,,
79.	தருமபுர ஆதீன ஆவணிமூலத் திருநாள்	,,
80.	ஆச்சாள்புரத் திருப்பதிகம்	,,
81.	திருமயேந்திரப்பள்ளித் திருப்பதிகம்	,,
82.	திருத்துருத்தித் திருப்பதிகங்கள்	1945
	,, இரண்டாம் பதிப்பு	1946

எண்	பெயர்	வருஷம்
83.	திருமங்கலக்குடித் திருப்பதிகங்கள்	1945
84.	திருக்கோளிலித் திருப்பதிகங்கள்	,,
85.	திருக்கடவூர்த் திருப்பதிகங்கள்	,,
	,, இரண்டாம் பதிப்பு	1946
86.	சிவஞானபோதம் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)	1945
87.	சோமவார விரதம்	,,
88.	திருநீறு	,,
89.	உருத்திராக்கம்	1945
90.	ஐந்தெழுத்து	,,
91.	கந்தர்சஷ்டிவிரதச்சிறப்பு (திருமுருகாற்றுப்படையுடன்)	1946
	,, இரண்டாம் பதிப்பு	1948
92.	திருவருட்பயன் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)	1946
93.	தென்திருமுல்லைவாயில் திருப்பதிகம்	,,
94.	ஆண்டாள் திருப்பாவை	,,
95.	திருக்கலிக்காமூர்த் திருப்பதிகங்கள்	,,
96.	தருமபுரஆதீனப்பாடசாலை நிர்ணயவிதிகள்	,,
97.	திருநெல்வேலித் திருப்பதிகம்	,,
98.	திலகவதியார் (உரைநடை)	,,
99.	சீகாழித் திருப்பதிகங்கள்	,,
	,, இரண்டாம் பதிப்பு	1948
100.	திருக்கோலக்காத் திருப்பதிகங்கள்	1946
101.	திருக்குருகாவூர்த் திருப்பதிகங்கள்	,,
102.	திருச்சாய்க்காட்டுத் திருப்பதிகங்கள்	,,
103.	திருப்பல்லவனீச்சரத் திருப்பதிகங்கள்	,,
104.	திருவெண்காட்டுத் திருப்பதிகங்கள்	,,
105.	கீழைத்திருக்காட்டுப்பள்ளித் திருப்பதிகம்	,,
106.	சித்தாந்தத் திரயம் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)	,,

எண்	பெயர்	வருஷம்
107.	ஸ்ரீகண்டன் (ஓர் சிறு நாடகம்)	1946
108.	திருமூலப்பால் சிறப்பு	,,
109.	முத்திநிச்சயப்பேருரை	,,
110.	மிருகேந்திரம் (தமிழ்மொழிபெயர்ப்புடன்)	,,
111.	நடராஜசதகம்	,,
112.	உண்மைவிளக்கம் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)	,,
113.	திருக்கண்ணார்கோயில் திருப்பதிகம்	,,
114.	சுவாமிநாதசுவாமி தோத்திரங்கள்	,,
115.	திருநள்ளாற்றுத் திருப்பதிகங்கள்	,,
116.	திருக்கடைமுடித் திருப்பதிகம்	,,
117.	திருப்பறியலூர்த் திருப்பதிகம்	,,
118.	திருவிளநகர்த் திருப்பதிகங்கள்	,,
119.	திருநின்றியூர்த் திருப்பதிகங்கள்	,,
120.	திருஆக்கூர்த் திருப்பதிகங்கள்	,,
121.	திருக்கடவூர்மயானத் திருப்பதிகங்கள்	,,
122.	மாயூரத் திருப்பதிகங்கள்	,,
123.	திருநீடூர்த் திருப்பதிகங்கள்	,,
124.	திருப்புன்கூர்த் திருப்பதிகங்கள்	1947
125.	திருஅன்னியூர்த் திருப்பதிகங்கள்	,,
126.	திருத்தருமபுரத் திருப்பதிகம்	,,
127.	ஆலயவழிபாடு (வசனம்) — தோத்திரங்களுடன்	,,
128.	திருவேள்விக்குடித் திருப்பதிகங்கள்	,,
129.	திருஎதிர்கொள்பாடித் திருப்பதிகம்	,,
130.	திருமயிலாப்பூர்த் திருப்பதிகம்	,,
131.	திருஒற்றியூர்த் திருப்பதிகங்கள்	,,
132.	திருஞானசம்பந்த நாயனார் புராணம் முதல் நூறுபாடல்கள் C. K. S. விரிவுரையுடன்	,,

எண்	பெயர்	வருஷம்
133.	திருமணஞ்சேரித் திருப்பதிகங்கள்	1946
134.	இருபா இருபஃது (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)	,,
135.	திருக்குறுக்கைத் திருப்பதிகங்கள்	,,
136.	தருமபுர ஆதீனப் பாடசாலை ஆறாவது ஆண்டு அறிக்கை	,,
137.	திருக்கருப்பறியலூர்த் திருப்பதிகங்கள்	,,
138.	௨௫-வது மகாசந்நிதானம் முதலாண்டு ஆட்சி அறிக்கை	,,
139.	திருக்குரக்குக்காத் திருப்பதிகம்	,,
140.	திருஅஞ்சைக்களத் திருப்பதிகம்	,,
141.	திருப்பழமண்ணிப்படிக்கரைத் திருப்பதிகம்	,,
142.	திருவாழ்கொளிபுத்தூர்த் திருப்பதிகங்கள்	,,
143.	திருஓமாம்புலியூர்த் திருப்பதிகம்	,,
144.	சிவபோகசாரம் விரிவுரையுடனும் ஆங்கிலமொழி பெயர்ப்புடனும்	,,
145.	திருக்கானாட்டுமுள்ளூர்த் திருப்பதிகம்	,,
146.	வள்ளிவருகுதுவேல் (வசனம்)	,,
147.	திருக்கடம்பூர்த் திருப்பதிகங்கள்	,,
148.	திருஅவிநாசித் திருப்பதிகம்	,,
149.	திருமுருகன்பூண்டித் திருப்பதிகம்	,,
150.	திருவெம்பாவைத் திருப்பதிகம் விளக்கத்துடன்	,,
151.	திருவலஞ்சுழித் திருப்பதிகங்கள்	,,
152.	௨௫-வது மகாசந்நிதானம் இரண்டாவதாண்டு ஆட்சி அறிக்கை	1948
153.	திருப்பந்தணைநல்லூர்த் திருப்பதிகங்கள்	,,
154.	திருக்கஞ்சனூர்த் திருப்பதிகம்	,,
155.	திருக்கோடிகாத் திருப்பதிகங்கள்	,,
156.	திருவாப்பாடித் திருப்பதிகம்	,,
157.	சிவஞானசித்தியார் சுபக்கம் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)	,,

எண்	பெயர்	வருஷம்
158.	அபிராமி அந்தாதி விரிவுரையுடன்	1948
159.	திருச்சேய்ஞலூர்த் திருப்பதிகம்	,,
160.	பண்டாரசாத்திரம் முதல் தொகுதி	,,
161.	நல்வழி	,,
162.	சுவாமிநாதன் பிரபாவம்	,,
163.	திருந்துதேவன்குடித் திருப்பதிகம்	,,
164.	இன்பம்	,,
165.	அறுபத்துமூவர்	,,
166.	திருவியலூர்த் திருப்பதிகம்	,,
167.	மெய்கண்டநூற் பொருட்சிறப்பு	,,
168.	திருக்கொட்டையூர்த் திருப்பதிகம்	,,
169.	திருஇன்னம்பர் திருப்பதிகம்	,,
170.	தண்டாயுதபாணித் தோத்திரங்கள்	,,
171.	உடு-வது மகாசந்நிதானம் மூன்றாவதாண்டு ஆட்சி அறிக்கை	,,
172.	திருப்பாதிரிப்புலியூர்த் திருப்பதிகம்	,,
173.	திருப்புறம்பயத் திருப்பதிகம்	,,
174.	திருவிசயமங்கைத் திருப்பதிகம்	,,
175.	சைவத் திருமுறைகள் (வசனம்)	,,
176.	அமைதி	,,
177.	திருவைகாவூர்த் திருப்பதிகம்	,,
178.	திருச்சிவபுரத் திருப்பதிகம்	,,
179.	மதுரைத் திருப்பதிகம் தலவரலாற்றுடன்	,,
180.	திருப்பரங்குன்றத் திருப்பதிகம்	,,
181.	திருவடகுரங்காடுதுறைத் திருப்பதிகம்	,,
182.	திருப்பழனத் திருப்பதிகம்	1949
183.	திருக்குறள் கதைகள் எண்பது	,,

எண்	பெயர்	வருஷம்
184.	சிதம்பரம் - பதிகங்களுடன்	1949
185.	திருப்பெரும்புலியூர்த் திருப்பதிகம்.	,,
186.	பத்தாண்டுவிழா நிகழ்ச்சி	,,
187.	திருநெய்த்தானத் திருப்பதிகம்	,,
188.	திருக்கண்டியூர்த் திருப்பதிகம்	,,
189.	திருவாரூர் - பதிகங்களுடன்	,,
190.	திருவாலம்பொழில் திருப்பதிகம்	,,
191.	தாயுமானவர் மடல் குறிப்புரையுடன்	,,
192.	ஆதீனக் கோயில்கள் — கல்வெட்டுடன்	,,
193.	திருத்தொண்டர் கீதம்	,,
194.	திருமழபாடித் திருப்பதிகங்கள்	,,
195.	திருமுருகாற்றுப்படையும், கோளறு திருப்பதிகமும்	,,
196.	ஆபதுத்தாரணர்மாலை—அஷ்டோத்திரசதநாமங்களுடன்	,,
197.	திருப்பழுவூர்த் திருப்பதிகம்	,,

உ

குருபாதம்

தருமபுர ஆதீனம் : இயற்றிவரும் பணிகள்.

1. தேவாரபாடசாலை நிறுவித் தெய்வத் தமிழ் வளர்ப்பது.
2. சிவாகம பாடசாலை வைத்துத் திருக்கோயில் பூசை முறைகளைப் பயிற்றுவிப்பது.
3. சிவஞான நூல்களைத் தெளிவுற அச்சிட்டு வழங்குவது.
4. சமய நுணுக்கங்களை நூல்களாக வெளியிடுவது.
5. தலங்கள்தோறும் திருப்பதிகங்கள் உரையுடன் வெளியிடுவது.
6. அறிஞரைக் கொண்டு ஆலயம் தோறும் அறவுரைவழங்குவது.
7. பிரசார வாகனத்தின் மூலம் தமிழ்நாடெங்கும் சமயம் வளர்ப்பது.

8. ஆங்கிலக்கலாசாலையில் தமிழ்ப்பரிசு அமைப்பது.

9. ஆதீனக்கோயில்தோறும் பண்ணிசைத் தமிழ் வளர்ப்பது.

10. தமிழ்க்கல்லூரி நிறுவி வித்துவான் தேர்விற்கனுப்புவது.

11. வடமொழிக் கல்லூரி நிறுவி சிரோமணித் தேர்விற்கனுப்புவது.

12. ஏழிசையும் இனிதோங்க இசைப்பிரிவு அமைப்பது.

13. நூல் ஆராய்ச்சிகள் எழுதுவித்து வழங்குவது.

14. விஞ்ஞான மெய்ஞ்ஞான நூல்களை வெளியிட்டு வழங்குவது.

15. சமய நூல்களைத் தக்கமுறையில் வெளியிடுவது.

16. "ஞானசம்பந்தம்" என்னும் மாதப்பத்திரிகை வாயிலாக சமயஉண்மைகளை அறிவுறுத்துவது.

17. சமயக் கூட்டங்களுக்குத் தக்கன செய்வது.

18. தமிழ்ப்பணி சமயப்பணி செய்பவர்க்குதவுவது.

19. தமிழ்நாட்டுத் தல வரலாறுகளை எழுதுவித்து வழங்குவது.

20. புத்தகசாலையமைத்துப் பழந்தமிழ் நூல்களைப் பாதுகாப்பது.

21. நாடோறும் ஹரிஜன மாணவர்களுக்கு அன்னமளிப்பது.

22. பொருளும் புத்தகமும் அளித்து ஏழை மாணவர்களுக்கு உதவுவது.

23. மாயூரத்தில் பிரசவ ஆஸ்பத்திரி கட்டிவருவது.

24. குடிமக்கட்கு அடிக்கடி எண்ணெய் முழுக்கும் அன்னமும் அளித்து வருவது.

25. காந்தி நிதி, ஹரிஜன பண்டு, அகதிகள் நிவாரணநிதி, காசநோய் ஆஸ்பத்திரி உதவி நிதி முதலிய பற்பல பொதுஸ்தாபனங்கட்குப் பெருந்தொகையளிப்பது முதலியன.



நால்வர் தோத்திரம்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம்.
கா. 5000 2—7—1949

L1
6A
1-72

உ

குருபாதம்

" ஞானசம்பந்தம் "

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

இவ்விதழ் ஒவ்வொரு ஆங்கிலமீ 10உ வெளிவரும்.

ஆண்டுக் கையொப்பத் தொகையை முன்னரே செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆண்டினிடையிலே சேருவோருக்குச் சேர்ந்த மாதத்திலிருந்து ஓராண்டுக்கு அவர்களின் கையொப்பத் தொகை கணக்கு வைத்துக்கொள்ளப்படும்.

செயலாளர்,

" ஞானசம்பந்தம் " காரியாலயம்

தருமபுரம், மாயூரம் P. O.